
மூவர் பாடிய தேவாரமும் பலன்தரும் முக்கிய பதிகங்களும்

தமிழ்ச் செம்மல், பொற்கிழிக் கவிஞர்
சிவமிகு முனைவர் அழகு சக்திகுமரன்





திருப்பேரூராதீனம் இருபத்து நான்காம் குருமகா
சந்நிதானங்கள் தமிழ்நெறி வழிபாட்டுத் தந்தை
முதுமுனைவர் தெய்வத்திருப்பெருந்திரு சாந்தலிங்க
இராமசாமி அழகளார் அவர்களின் நூற்றாண்டு விழா
நினைவாக
திருப்பேரூராதீனம் இருபத்துஐந்தாம் குருமகா
சந்நிதானங்கள் சாந்தலிங்க மருதாசல அடிகளார்
அவர்களால் இந்நூல் வெளியிடப்படுகின்றது.

மூவர் பாடிய தேவாரமும் பலன்தரும் முக்கிய பதிகங்களும்

ஆசிரியர்

தமிழ்ச்செம்மல், பொற்கிழிக் கவிஞர்

சிவமிகு முனைவர் **அழகு சக்திகுமரன்**

மணிமேகலைப் பிரசுரம்

21, தணிகாசலம் சாலை (மத்ஸ்யா ஹோட்டல் அருகில்),
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 044-2434 2926, 2434 6082, 91764 51934
மின் அஞ்சல்: manimekalaiprasuram@gmail.com
இணைய தளம் : www.tamilvanan.com

நூல் விவரம்

நூல் தலைப்பு	:	மூவர் பாடிய தேவாரமும் பலன்தரும் முக்கிய பதிகங்களும்
ஆசிரியர்	:	தமிழ்ச்செம்மல், பொற்கிழிக் கவிஞர் சிவமிகு அழகு சக்திகுமரன்
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	2024
பதிப்பு விவரம்	:	முதல் பதிப்பு
உரிமை	:	ஆசிரியருக்கு
தாளின் தன்மை	:	18.6 கி.கி.
நூலின் அளவு	:	14x21 செ.மீ. (டெம்மி)
அச்சு எழுத்து அளவு	:	11pt
மொத்த பக்கங்கள்	:	xxviii+166=194
நூலின் விலை	:	₹200/-
அட்டைப்பட டிசைன்	:	மாருதி
ISBN	:	978-93-6854-907-9
லேசர் வடிவமைப்பு	:	எஸ். முத்துகிருஷ்ணன்
அச்சிட்டோர்	:	ரியல் இம்பாக்ட் சொல்யூஷன்ஸ்
நூல் கட்டுமானம்	:	தையல்

சமர்ப்பணம்

தாய்ப்பாலோடு தமிழ்ப்பால் ஊட்டிய
அன்னைக்கும், இறையுணர்வை
இதயத்தில் விதைத்த எந்தைக்கும்
இந்நூல் காணிக்கை.



தமிழ்ச்செம்மல், முனைவர்
அழகு சக்திகுமரன்
"கந்தன் இல்லம்"
15/29, கோல்டன் நகர்,
பாரதியார் பல்கலைக்கழக அஞ்சல்,
கோயம்புத்தூர் 641 046, அலைபேசி : 72002 02777

அடியேன் உரை



தமிழன்னை அடியேனைக் கவிஞனாக்கி, எழுத்தாளனாக்கி எட்டு நூல்களைப் படைத்தளிக்கும் பெரும்பேறு தந்தாள். 'அன்னை தந்த ஆனந்தம்', 'அழகன் முருகனின் அறுபடை வீடுகள்' (கவிதை வடிவில்), 'பரவசமூட்டும் கந்தபுராணக் கதைகள்', 'பக்தி மாலை பாமாலை' என்பன ஆன்மிக நூல்கள். 'கவிதைக் கழனி', 'தமிழன் தலைவனாக வேண்டும்' (மரபுக் கவிதைகளின் தொகுப்பு நூல்) இவை கவிதை நூல்கள். 'தெய்வம் நின்று கொல்லும்', 'எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' இரண்டும் சிறுகதைத் தொகுப்பு நூல்கள். ''நீ கவிதைகளும் கதைகளும் எழுதியது போதும், இனி என்னைப் பாடு'' என்று பரமன் அடியேனைப் பணித்திட உருவானதுதான் ''**மூவர் பாடிய தேவாரமும் பலன்தரும் முக்கிய பதிகங்களும்**'' என்னும் இந்த நூல்.

நாம் செய்யும் எந்தச் செயலுக்கும் தேவையான ஆற்றலை அள்ளி வழங்குபவன் நம்பெருமான் ஈசன்.

தேவாரம் பற்றி எழுதும் ஆற்றலை அடியேனுக்கு அருளிய விதம் அற்புதம். திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம்

 91/1

திருப்பேரூர் ஆதீனம் இருபத்தைந்தாம் குருமகா சந்நிதானங்கள் கயிலைப் புனிதர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்களின் வழிகாட்டலுடனும், நல்லாசியுடனும் திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருப்பேரூர் ஆதீனம் இருபத்து நான்காம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் கயிலை குருமணி தமிழ்நெறி வழிபாட்டுத் தந்தை தெய்வத்திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் திருக்கரங்களால் 25.07.2017 அன்று சமய தீட்சையும், 02.02.2018 அன்று வீரசைவ தீட்சையும் பெற்று நாள்தோறும் மீண்டும் பிறவாவரம் வேண்டி இட்டலிங்க வழிபாடு செய்யும் பேறு பெற்றதற்கு பொன்னம்பலவாணன் எம்பெருமான் ஈசன் திருவடிகளை வணங்குகின்றேன்.

அன்றாடம் செய்து வந்த வழிபாடு அடியேனை ஆன்மீகப் பயணத்தில் அடுத்த அடி எடுத்து வைக்கச் செய்தது. எங்கள் குடியிருப்பில் உள்ள 'ஆனந்த விநாயகர் - கைலாசநாதர், திருவேங்கடமுடையான்' ஆலயத்தில் 'திருமுறை வகுப்பு' தொடங்கிட இறைவன் ஆணை கிட்டியது. பேரூர் ஆதீனம் குருமகா சந்நிதானங்கள் சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள் 17.12.2017 அன்று மாலை ஆலயத்திற்கு வருகை தந்து 'பன்னிரு திருமுறை' வகுப்பைத் தொடங்கி வைத்து அருளாசி வழங்கினார்கள். அடியேனை திருமுறை ஆசிரியராக்கி அருள் புரிந்தார்கள். அன்று முதல் தொடக்கத்தில் ஆலயத்திலும், தற்போது Google Meet வழியாகவும் திங்கட்கிழமை மாலை 6 மணிமுதல் 7 மணி வரை தேவார வகுப்பும், வெள்ளிக்கிழமை மாலை 6 மணிமுதல் 7 மணிவரை திருவாசக வகுப்பும் நடைபெற்று வருகின்றன. தமிழகம் எங்கும் பல்வேறு ஊர்களில் உள்ள அடியார் பெருமக்கள் கலந்து கொள்கிறார்கள்.

இந்த நிலையில்தான் திருமுறை வகுப்புகள் பற்றிக் கேள்விப்பட்ட ஓர் அன்பர் "ஐயா, தேவாரம், திருவாசகம் பற்றி பாமர மக்கள் படிக்கத் தயங்குகிறார்கள். காரணம் அவை கடினமான நூல்கள் என்ற அச்சம். தேவாரம், திருவாசகம் பற்றிய வரலாற்றைச்

சுருக்கமாகக் கூறி சில பதிகங்களை விளக்கத்துடன் கூறி ஒரு நூல் நீங்கள் எழுதலாமே" என்றார்.

மனதில் சிறு அச்சம் தோன்றியது. இது நம்மால் முடியுமா என்று எண்ணினேன். ஆனால் "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்னும் மாணிக்கவாசகப் பெருமானின் வரிகள் ஊக்கம் தந்தன. திருவாசகம் பற்றி தனி நூலாக எழுதலாம் என்று ஒதுக்கிவிட்டு "மூவர் பாடிய தேவாரமும் பலன்தரும் முக்கிய பதிகங்களும்" என்ற தலைப்பில் எழுதத் தொடங்கினேன்.

பல்வேறு தெய்வங்களை அவரவர் விருப்பம் போல வணங்கி னாலும் சிவமே அத்தெய்வங்களில் நின்று அருள் புரிவான்.

"யாதொரு தெய்வம் கொண்டீர்
அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார் தாமே வருவர்"

என்பது சைவ மரபு.

திருஞான சம்பந்தர் பாடிய முதல் மூன்று திருமுறைகளுள் 4158, திருநாவுக்கரசர் பாடிய 4, 5, 6 திருமுறைகளுள் 3066, சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய ஏழாம் திருமுறையுள் 1026 பாடல்களை நம் ஆயுள் முழுதும் படித்தாலும் இயலாது.

சாதாரண நிலையில் உள்ள அன்பர்கள் தேவாரம் பாடிய மூவர் வரலாற்றைச் சுருக்கமாக அறிந்து சில பதிகங்களைப் படிக்கவும் அவர்களை மேலும் படிக்கத் தூண்டுவதுமே இந்த நூலின் நோக்கம்.

மூவர் வரலாறும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. திருஞான சம்பந்தர் பாடியவற்றுள் "தோடுடைய செவியன்", "கோளறு பதிகம்," "நீலமா மிடற்று" என்னும் பதிகம், "திருநீற்றுப் பதிகம்", "கல்லூர்ப் பெருமணம் பதிகம்" இவை ஐந்தும் முழுவதுமாக விளக்கத்துடன் தரப்பட்டுள்ளன. மேலும் சில பதிகங்களின் சில பாடல்களும் விளக்கமும் தரப்பட்டுள்ளன.

திருநாவுக்கரசரின் பதிகங்களில் "கூற்று ஆயினவாறு", "சொற்றுணை வேதியன்", "போற்றித் திருத்தாண்டகம்", "திருப்புகலூர் திருத்தாண்டகம்" இவை முழுதும் விளக்கத்துடனும், மேலும் சில பதிகங்களின் சில பாடல்கள் விளக்கத்துடனும் தரப்பட்டுள்ளன.

அதே போல் சுந்தரமூர்த்தி நாயனாரின் பதிகங்களில் "பித்தா பிறைசூடி" என்னும் பதிகமும் மற்றும் "திருநொடித்தான் மலை" பதிகமும் முழுதும் விளக்கத்துடன் தரப்பட்டுள்ளன. சுந்தரர் பாடிய "திருத்தொண்டத்தொகை" முழுபதிகம் மட்டும் தரப்பட்டு மேலும் சில பதிகங்களின் முதல் பாடல்கள் விளக்கத்துடன் தரப்பட்டுள்ளன.

"என்னைப் பாடு" என்று சொன்ன பரமன் இப்பிறவியில் ஒரு பெரும் பேற்றை அருளினார். அதற்கு வித்திட்டவரும் ஒரு அடியார்தான். "சுந்தரர் ஒரு நாயனாருக்கு ஒரு அடியில் பாடியுள்ளார். நீ ஒரு நாயனாரின் பெருமைகளை மூன்று வரிகளில் சொல்லி நான்காம் வரியில் அவர் "திருவடி போற்றி" என்று அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் ஒன்பது தொகையடியார்களுக்கும் பாடு" என்றார்.

அதையும் சிவபெருமான் சிந்தையில் நின்று அருளினார் என்பேன். இரு நாயன்மார்களுக்கு ஒரு பாடல். இறுதிப் பாடலில் சேக்கிழார் பற்றிப் பாடியுள்ளேன். இரு தொகையடியார்களுக்கு ஒரு பாடல். இறுதிப் பாடலில் நம்பியாண்டார் நம்பி பற்றி பாடியுள்ளேன். மேலும், அடியேன் பாடியுள்ள மூன்று திருப்பதிகங்களையும் 'பிற்சேர்க்கை' யாகத் தந்துள்ளேன்.

இந்த நூலுக்கு அருள் வாழ்த்துரை வழங்கிய பேரூர் ஆதீனம் குருமகா சந்நிதானங்கள் சாந்தலிங்க மருதாசல அடிகளாரின் பொற்பாதங்களில் நன்றி மலர்களைக் காணிக்கை ஆக்கி மகிழ் கின்றேன்.

அடியேனின் நூல்களில் மூன்றினைப் பதிப்பித்து, நான்காவதாக இந்த நூலை சிறந்த முறையில் பதிப்பித்துள்ள மணிமேகலைப்

பிரசுரத்தார்க்கு நன்றிகளைக் காணிக்கை ஆக்குகின்றேன். இது போன்ற நூல்களைப் படைக்கும்போது பேருதவி புரியும் புலவர் சொல்லரசு வீ. சிவஞானம் ஐயா அவர்களுக்கு அடியேனின் நன்றி மலர்களை உரித்தாக்குகின்றேன். ஒவ்வொரு நூல் எழுத நான் முயற்சி செய்யும்போதும், நூலின் பிரதியை முழுவதுமாகப் பொறுமையுடன் படித்து பிழைகளைத் திருத்தும் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு வருகின்ற, அடியேனின் மகன் போன்ற சிவமிகு ராஜகுமார் அருணாசலம் அவர்களுக்கும், திருமதி பீனா கிரீஷ் அவர்களுக்கும் அடியேனின் நன்றிகள் உரித்தாகுக. அனைத்துக்கு மேலாக 2013ஆம் ஆண்டு, சென்னையில் நடைபெற்ற தமிழ்ப் படைப்பாளர்கள் சங்க 2ஆம் ஆண்டு விழாவில் அடியேனின் கவிதையைக் கேட்டு, பாராட்டி, மணிமேகலைப் பிரசுரம் வழங்கிவரும் எழுத்தாளர் - பதிப்பாளர் முதலீட்டுத் திட்டம் பற்றிய கையேட்டை அடியேனிடம் தந்த முனைவர் லேனா தமிழ்வாணன் அவர்கள் தந்த ஊக்கம்தான் மணிமேகலைப் பிரசுரம் அடியேனின் மூன்று நூல்களை முன்னரே பதிப்பித்த இந்த நூலை நான்காவதாக பதிப்பிக்கின்றது. நன்றி மலர்களை திரு. லேனா தமிழ்வாணன் அவர்களுக்கும் சமர்ப்பிக்கின்றேன். மணிமேகலைப் பிரசுரத்தின் உரிமையாளர் திருமிகு. இரவிதமிழ்வாணன் அவர்களுக்கும், மற்றும் நிர்வாகிகள் அனைவருக்கும் அடியேனின் நன்றி மலர்களைச் சமர்ப்பிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

அடியேன் படைக்கும் எந்த நூலாயினும் உள்ளத்தால் உணர்வால் ஊக்கம் அளித்து வரும் அடியேனின் துணைவியார் அமிர்தம், மகள் ஸ்ரீவள்ளி, எல்லாவகையிலும் உதவிகள் செய்வதைப் பெரும்பேறாகக் கருதும் மகன் மாரிமுத்துக்குமார், மருமகள் பிரபா தேவி ஆகியோருக்கும் அடியேனின் நன்றிகள் உரித்தாகுக.

சிவத்தொண்டில்

அழகு சக்திகுமரன்

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம்
இருபத்தைந்தாம் குருமகாசந்நிதானங்கள், கயிலைப்புனிதர் முனைவர்
திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார்
பேரூராதீனம், பேரூர், கோயம்புத்தூர் - 641 010
அலைபேசி : +91 98947 61125



Holy Kailash Heritage Meikandar Heirarchy,
Perur Maha Samasthan, Maha Mandaleshvar His Holiness
Dr. Santhalinga Marudhasala Adihal
Perur Adheenam, Perur, Coimbatore - 641 010.
E : omadihal@gmail.com | perurmutt@yahoo.com

தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை உயர்நிலைக்குழு உறுப்பினர்
Member - Tamilnadu Government Hindu Religious & Endowment Board Higher level Committee

நாள் 04/09/2024

வாழ்த்துரை

“சைவத்தின் மேல் சமயம் வேறில்லை” என்பது ஆன்றோர் வாக்கு. இவ்வாக்கிற்கேற்ப முதன்மைச் சமயமாகத் திகழும் சைவ சமயத்தை எழுச்சிபெறச் செய்த பெருமை திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரையும் சாரும். திருஞானசம்பந்தர் அருளிய திருக்கடைக்காப்பு, திருநாவுக்கரசர் அருளிய தேவாரம், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருப்பாட்டு மூன்றையும் சேர்த்துத் தேவாரம் என வழங்குவது சைவ மரபு. இத்தகைய சிறப்புப் பெற்ற தேவாரப் பதிகங்களின் அற்புதச் செயல்களை விளக்குவதாக “மூவர் பாடிய தேவாரமும் பலன்தரும் முக்கிய பதிகங்களும்” என்ற இந்நூல் திகழ்கிறது. இந்நூலை இயற்றியவர் கவிஞர் அழகு சக்திகுமரன் (முருகன்) அவர்கள்.

கவிஞர் அழகு சக்திகுமரன் (முருகன்) அவர்கள் நமது திருமடத்தோடு தொடர்புடையவர். மாதந்தோறும் நிகழும் சாந்தலிங்கப்பெருமான் மகம் நாள் குருபூசை வழிபாட்டில் தவறாது கலந்துகொண்டு வழிபாடாற்றுபவர். தமிழ்நாடு அரசின் தமிழ்ச்செம்மல் விருது பெற்ற பெருந்தகையாளர். அழகன் முருகனின் அறுபடை வீடுகள், கந்தபுராணக் கதைகள், நாயன்மார் தொகையடியார் போற்றி உள்ளிட்ட பல நூல்களை இயற்றி வெளியிட்டுள்ளார்.

மூவர்தம் அருள் வரலாற்றை வீரசைவநெறி நிற்போர் அனைவரும் பயன்பெறும் வகையில் எளிமையான நடையில்

அமைத்துள்ளது மகிழ்வுக்குரியது. வெறும் வரலாறாக எழுதாமல் வரலாற்றின் இடையிடையே மூவர் செய்த அற்புதங்களையும் அப்போது அவர்கள் அருளிய திருப்பதிகங்கள் மற்றும் பாடல் களையும் விளக்கங்களுடன் அளித்துள்ளது பாராட்டுதற்குரியது. அப்பதிகங்களும் பாடல்களும் நாள்தோறும் வழிபடுதற்குரியனவாக அமைந்துள்ளன. அவற்றை நாளும் பாடிப் பயன்பெறலாம். தொடர்ந்து இது போன்ற நூல்களை எழுதி வெளியிட வேண்டும்.

அவ்வகையில் கவிஞர் அழகு சக்திகுமரன் அவர்களும் இந்நூல் உருவாக உழைத்த அனைவரும் வாழ்வில் எல்லா நலங்களும் வளங்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழவும், எல்லாம் வல்ல அருள்மிகு அம்பலவாணப்பெருமான் இன்னருளையும், அருள்திரு சாந்தலிங்கப்பெருமான் தண்ணருளையும் இருபத்து நான்காம் குருமகாசந்நிதானங்கள் கயிலைக்குருமணி தமிழ்நெறி வழிபாட்டுத் தந்தை தெய்வத்திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் குருவருளையும் நினைந்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.


வேண்டுந்தங்களன்பு,

அன்புள்ள,

சாந்தலிங்க
மருதாசல அடிகள்

முனைவர் **செ.சண்முகம்**
மொழியியல் பேராசிரியர் (ஓய்வு),
92, ஐ.ஓ.பி. காலனி,
கோயம்புத்தூர் - 641 046,
செல்: 9842926426.

அணிந்துரை



"மூவர் பாடிய தேவாரமும் பலன்தரும் முக்கிய பதிகங்களும்'' என்ற இந்த நூல் விளக்குகின்ற மையக் கருத்துகள் தேவாரம், தேவாரப் பாடல் தலைவனான சிவபெருமான், தேவாரப்பதிகங்கள் என மூன்று. தேவாரத்தின் பெருமையையும், சிவபெருமானின் சிறப்புகளையும் எடுத்துக் கூறி, தேவாரப் பதிகங்களை மனம் உருகிப் படிக்கும் வகையில் தேர்ந்தெடுத்து விளக்கிய பெருமைக்குரிய இந்த நூலாசிரியர், **"அழகு சக்தி குமரன்"** என்ற மூன்று சொல்லாலான பெயரையும், **"பொற்கிழிக் கவிஞர்"** என்ற மூன்று சொல்லாலான சிறப்புப் பெயரையும் பெற்றவர். சைவ சமய நெறி சார்ந்த இலக்கியங்களில் தோய்ந்து, சைவ அடிகளாரிடம் தீட்சை பெற்று, சிவனடியார் போன்றே வாழ்ந்து வருபவர். எளிய முறையில், சாதாரண மக்களும் படித்துப் பயன்பெறும் வகையில், மூவர் தேவாரம் என்ற இந்த சிறந்த நூலைப் படைத்துள்ளார். சான்றோரான மீனாட்சிசுந்தரம், இலங்கை செயராஜ் போன்றவர்கள் சைவத்துக்கு விளக்கம் அளித்ததைப் போன்று தோன்றுகிறது இந்த நூலாசிரியரின் படைப்பு. பொற்கிழிக் கவிஞருக்கு எனது பாராட்டுக்கள்!

தமிழில் பக்தி இலக்கியங்கள் சிறப்பானவை. அவை இறைவனை நோக்கி தொண்டர்கள் மனம் உருகிப் பாடும் பாடல்

வடிவம் கொண்டவை. பக்தியால் பாடும் அப்பாடல்கள் பல பலன்களைத் தருபவை. அவை பக்தர்களின் துயர் தீர்க்கும் தன்மை கொண்டவை. பக்தர்கள் இறை சக்தியைப் பெற்று, அற்புதம் நிகழ்த்தும் திறனைப் பெற பக்திப் பாடல்கள் வழி வகுக்கின்றன. பக்திப் பாடல்கள் இறைவனுக்கும் பக்தனுக்கும் இடையிலான இணை பிரியாத உறவை வெளிப்படுத்துகின்றன.

இறைவனே மாற்றுருவெடுத்து, தொண்டனுக்கு வழிகாட்டும் நிலையை ஏற்படுத்துகின்றன. முக்கண்ணனான சிவபெருமானின் புகழைப் பாடியவர்கள் பலர். அவர்களில் முக்கியமான மூவரை ஆசிரியர் தேர்ந்தெடுத்து விளக்க முனைகிறார். சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்ற அந்த மூன்று சைவ சமயக் குரவர்களின் சிறப்புகள் மூன்று. அவை, தெய்வீகப் பிறப்பு, இறைவனது பெருமையைப் பதிகங்களால் பறைசாற்றிய வாழ்வு, இறை அருளால் அற்புதம் நிகழ்த்திய நிகழ்வு என்பன. திருத்தலங்களுக்குச் சென்று, அத்தலங்களில் உறைந்திருந்த பெருமானை தரிசித்து, மனமுருகிப் பதிகம் படைத்த செயல்களே சமயக் குரவர்களின் வாழ்க்கையாயிற்று. மூவர் பாடிய பதிகங்கள் பல. சுமார் எழுபதுக்கும் மேற்பட்ட, சிந்தைக்கு விருந்தாகும் பதிகங்களை நூலாசிரியர் தேர்வு செய்து, அவற்றிற்கான பொருள் விளக்கத்தையும் கொடுத்துள்ளார். நூலாசிரியரின் விடாப்பிடியான உழைப்பை இந்தத் தேர்வு காட்டுகிறது.

பதிகக் கருத்து

பதிகங்களின் பெருமை அவற்றின் கருத்தோட்டத்தில் உள்ளது. பதிகங்களில் மூன்று கருத்துக்களின் ஓட்டத்தைக் காணலாம். பதிகம் பாடிய தலத்தின் பெருமை, பாட்டுடைத் தலைவன் சிவனின் பெருமை, பாடியவர் பெற விரும்பிய அருள் என அவை மூன்று.

தேவாரம் பாடிய மூவர் தல யாத்திரையாகச் சென்ற தலங்களின் சிறப்பு பதிகங்களில் பேசப்படுகிறது. ஆற்றங்கரைகள், சோலைகள், பறவைகளின் குரல் போன்றவற்றைக் கொண்ட

இயற்கைச் சூழல் இறைவன் உறையும் திருக்கோயில் இருக்கும் இடங்களாக விவரிக்கப்படுகின்றன.

திருத்தலங்களின் சிறப்பு

- அன்னம் போன்ற நடையழகுடைய மகளிர் நிறைந்த அதிகை வீரட்டானம்;
- உப்பங்கழி பொருந்திய சோலையில் அன்னப்பறவைகள் தம் பெண் பறவைகளுடன் கூடியுள்ள பிரமாபுரம்;
- ஊழிக் காலத்திலும் அழியாமல் நிலைத்திருக்கும் பிரமாபுரம்;
- மணமுடைய மேலான சிறப்புடைய மலர்களைக் கொண்டு வரும் நீரால் நிரம்பிய நீவா நதிக்கரையில் உள்ள அழகிய குளிர்ந்த சோலையால் சூழப்பட்ட நெல்வாயில் எனும் தலம்;
- மூங்கில்கள் நிறைந்துள்ள பெண்ணையாற்றின் தென்கரையில் உள்ள வெண்ணைநல்லூரின் கண் அமைந்துள்ள அருட்டுரைத் திருக்கோயில்.

பதிகங்கள் சிவனின் சிறப்புகளைப் பட்டியலிடுகின்றன. இறைவனின் மேனி, அவரது செயல்களான அருளல், அழித்தல் என்பனவும், பதிக விளக்கத்தில் இடம் பெறுகின்றன. சிவனது திருவிளையாடல்கள் விளக்கம் பெறுகின்றன. சிவனின் பெயர்களும் பண்புகளும் பின்வருமாறு பதிகங்களில் தோன்றுகின்றன:

பாட்டுடைத் தலைவன் சிவனின் பெருமை

- தோடு அணிந்தவன், உமையை இடப்பக்கத்தில் உடையவன், பிறைச் சந்திரனைச் சடையில் சூடியவன்,
- இடப வாகனம் ஏறி வருபவன், சுடுகாட்டுச் சாம்பலை மேனியில் பூசியுள்ளவன்,

- என் உள்ளம் கவர்ந்தவன், நான்முகனின் வழிபாட்டை ஏற்று அருள் செய்தவன், நெருப்பு போன்ற மேனியுடையவன், தன்னை மதியாத அரக்கரின் கோட்டைகளைத் தீக்கிரையாக தன் புன்சிரிப்பால் செய்தவன்

- யானையை அழித்து அதன் தோலை போர்வையாக்கிக் கொண்டவன்; கயிலையை பெயர்க்க முயன்ற இலங்கை அரசனின் வலிமையை அழித்தவன்; ஒரே உருவத்தில் ஆண், பெண் உருவங்களைக் காட்டுபவன்

பாடியவர் பெற விரும்பிய அருள்

பதிகங்கள் சமயக் குரவர் மூவரின் வேண்டுகோள்களையும் வெளியிடுகின்றன. சம்பந்தர் தன் தந்தைக்கு உதவ இறைவனிடம் பொருள் வேண்டினார். அப்பர் தன் சூலை நோயிலிருந்து விடுபட இறைவனை வேண்டி பதிகம் பாடினார். சுந்தரர் திருக்குவளை யிலிருந்து பெற்ற நெல்லை திருவாரூருக்கு கொண்டு செல்ல இறைவன் அருள் செய்ய வேண்டும் என்று வேண்டினார்.

பதிக அமைப்பு

பதிகங்கள் எளிமையான வரிகளாலான பாவடிவம் கொண்ட பாடல்கள் அவற்றின் அமைப்பில் ஒலிநயம், பொருள் நயம், திரும்பத் திரும்ப வரும் "முடிப்புரை வாசகங்கள்" என மூன்று பண்புகள் உள்ளன. .

பதிகத்தின் ஒலிநயம்

பதிகங்களெல்லாம் மொழிக் கூறுகளால் அலங்கரிக்கப்பட்டு, நடை எழுப்பும் வகையிலும் பாராயணம் செய்வதற்கேற்ற வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளன. ஒலியமைப்பில் ஒத்திருக்கும் சொற்களையும், தொடரமைப்பில் ஒத்திருக்கும் தொடர்களையும் திரும்பத் திரும்ப பயன்படுத்தல் ஒரு அலங்காரப்படுத்தும் உத்தி. இது கவிதையின் ஓசை நயத்தை மேம்படுத்துகிறது.

ஒத்த ஒலியமைப்பை அடுத்தடுத்த வரிகளில் கொண்ட கவிதைக்கும் ஒத்த தொடரமைப்பை அடுத்தடுத்த வரிகளில் கொண்ட கவிதைக்குமான எடுத்துக்காட்டு பின்வருமாறு:

தோடுடைய செவியன்..
காடுடைய சுடலை..
ஏடுடைய மலரான்
பீடுடைய பிரமாபுரம்..

பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக்கு அருங்கலம் அரன் அஞ்சாடுதல்
கோவினுக்கு அருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே.

பதிகத்தின் பொருள் நயம்

பதிகங்களில் பொருள் சார்ந்த நடையியல் கூறுகளும் உள்ளன. பின்வரும் பதிகத்தில் முலையானது செப்போடு ஒப்புமைப்படுத்தப்படுள்ளது.

செப்பிளமுலை நன்மங்கை ஒருபாகமாக
விடையேறு செல்வன்அடைவார்'..

பதிக முடிப்புரைக் கூறுகள்

பதிகங்களின் அமைப்பின் ஒரு சிறப்புக் கூறு ஒவ்வொரு பதிகத்தின் இறுதியிலும் ஒரே வகை அமைப்பைக் கொண்ட தொடர்கள் வருகின்ற நிலையாகும். அவற்றை முடிப்புரை வாசகங்கள் அல்லது தொடர்கள் எனலாம். இவை பதிகங்களை மனப்பாடம் செய்ய உதவுகின்றன. தேவாரப் பதிகங்களில் வரும் அத்தகைய 8 முடிப்புத் தொடர்களை நூலாசிரியர் காட்டுகிறார்

- பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே
- அவை நல்லநல்ல, அடியாரவர்க்கு மிகவே
- ஆலவாயன் திருநீரே
- அதிகைக் கெடில வீரட்டானத்து உறைஅம்மானே
- நமச்சிவாயவே
- கயிலை மலையானே போற்றி போற்றி
- உனக்காளாய் இனி அல்லேன் எனலாமே
- ஆரூரன் ஆரூரிலம்மானுக்கு ஆளே

இறைவனை வணங்கினால் எல்லாம் நன்மையாகவே அமையும். நாம் நமக்கு இடற்பாடு தருவன எனக் கருதுவனவெல்லாம் நல்லவையே என வலியுறுத்தும் வண்ணம் பல பதிகங்களில் முடிப்பு வாசகமாக "அவை நல்ல, அடியாரவர்க்கும் அவைமிகவே" என்ற வாசகம் வருகிறது. தீமை தரும் "கோள்கள், நட்சத்திர நாட்கள், திசைக்குரிய தெய்வங்கள், திருமகள், செயமகள், நிலமகள், துர்க்கை, காலன், அக்கினி, யமதூதன், கொடியநோய், இடி, மின்னல், செருக்குடைய பூதங்கள், வெப்பம், குளிர், வாதம், பித்தம்" என்பன நல்லவையாக காட்டப்பட்டுள்ளன.

பதிகங்களில் ஒரு முடிப்புக் கூறு "திருநீறு". திருநீறின் சில பண்புகளை பின்வரும் பதிகம் காட்டுகிறது:

முக்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
புத்திதருவது நீறு பரவ இனியது நீறு
சித்திதருவது நீறு திருஆலவாயன் நீறே.

இதேபோன்று "நமச்சிவாய" என முடியும் பதிகங்களிலும், அந்த மந்திரத்தின் சிறப்பு குறிப்பிடப்படுகிறது.

பதிகப்பயன்

பதிகங்கள் தரும் பலன்கள் மூவகை. அவை, துயர்நீக்கல், பரிசு பெறுதல், அற்புதம் நிகழ்தல் என்பன. எந்த ஒரு செயலும் பலன்

கருதியே செய்யப்படுகிறது. "வேலை செய்தால் கூலி" என்பதன் அடிப்படை இது. தமிழில் ஆற்றுப்படை இலக்கியங்கள் அரசனின் புகழைப் பாடி புலவர்கள் பரிசில் பெற்றதைக் காட்டுகின்றன. பக்தி இலக்கியங்கள் இறைவனைப் புகழ்ந்து பாடி தொண்டர்கள் இறைவனின் அருள் பெற்றதைக் காட்டுகின்றன. ஆக, புகழ் பாடி இடர் தீர்த்தல் என்பது தமிழர்களின் இலக்கியப் படைப்போடு தொடர்புடைய ஒரு பண்பாடு எனலாம்.

தேவாரப் பதிகங்கள் இறைவனின் சிறப்புக்களைப் பாடி மனம் உருகி வேண்டியதைக் கூறி பக்தர்கள் பெற்ற பயன்களையும் காட்டுகின்றன. பதிகங்களைப் பாடித் துதித்ததால் பக்தர்களின் இடர்கள் தீர்ந்தன என்பதை சமயக் குரவர் மூவரின் வரலாறு காட்டுகிறது. சில பதிகங்களைப் பாராயணம் செய்து பாடினால், குறிப்பிட்ட பிணிகளிலிருந்து விடுபடலாம் என்ற ஆழ்ந்த நம்பிக்கை சைவத்தில் உண்டு.

- "தோடுடைய செவியன் விடையேறிய..." எனத் தொடங்கும் பதிகம் பாடினால் "பசிபோகும்" எனவும்,
- "வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன்..." எனத் தொடங்கும் பதிகம் பாடினால் "கிரகங்களால் வரும் தீமைகள் நீங்கும்" எனவும்,
- "கூற்று ஆயினவாறு விலக்கினீர்..." எனத் தொடங்கும் பதிகம் "குடல் நோய் தீர்க்கும்" எனவும்,
- "சொற்றுணை வேதியன் சோதிவானவன்.." எனத் தொடங்கும் பதிகம் "ஆபத்திலிருந்து தப்பிக்க வழி செய்யும்" எனவும் கருதப்படுகிறது.

பதிகம் பாடுதல் என்ற சிவவழிபாடு சைவக்குரவர்கள் "பொற்றாளம், முத்துப் பல்லக்கு" போன்ற பரிசுகளைப் பெற வழி வகுத்தது. பதிகம் பாடியதால் பல அற்புதங்களும் நிகழ்ந்தன. சம்பந்தர் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒன்பது அற்புதங்களை நூலாசிரியர் சுட்டிக்காட்டுகிறார். எலும்பைப் பெண்ணாக மாற்றியது,

பாண்டியனின் வயிற்று வலியை நீக்கியது, பாம்பு கொத்தி உயிரிழந்த வணிகனின் மகளை உயிர் பெற்று எழ வைத்தது, திருக்கோயில் கதவைத் திறக்கவும் மூடவும் வைத்தது, முதலை உண்ட மதலையை மீட்டது என பல அற்புதங்கள் அடியார்கள் வாழ்க்கையில் பதிகம் பாடியதால் நிகழ்ந்தன என சுட்டிக் காட்டப்படுகிறது.

முடிவுரை

முடிவாக, இந்த நூல், மூவரின் தேவாரத்தை, தேவாரப் பதிகங்களை எளிமையாகப் படித்துணர்ந்து சைவ நெறியில் வாழ்க்கையை அமைக்கவும், பக்தியில் தன்னை ஈடுபடுத்தி தன் துன்பங்களைப் போக்குவதற்கும் வழி கோலுகிறது. அமைப்பிலும் கருத்திலும், நடையிலும் செறிவான தேவாரப் பதிகங்களை இனங்கண்டு, அவற்றிற்கான விளக்கங்களை அருளிய ஆசிரியர் பெருமைக்கும் போற்றுதலுக்கும் உரியவர். நூல் முழுவதும் கருத்துக்கள் கொட்டிக் கிடக்கின்றன. அவரது கடின உழைப்பும் ஈடுபாடுமே சைவத் திருமுறைகள் மக்களிடம் சென்று சேர வழி வகுத்துள்ளது. நூலாசிரியர் அழகு சக்திகுமரனைப் பாராட்டுவ தோடு தமிழ்ச் சமய நெறிகளில் புதைந்திருக்கும் பல நுட்பமான கருத்துக்களை மேலும் வெளிக்கொணர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

அன்புடன்

முனைவர் செ. சண்முகம்



மகிழ்வுரை

அந்தாதி வேந்தர் கவிஞர் நம்பிக்கை நாகராஜன்,
தேசிய திருக்கோயில்கள் கூட்டமைப்புச் சங்க இணைச்செயலாளர்,
அகவை முதிர்ந்த தமிழறிஞர்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன், நிலவு உலாவிய நீர்மலி வேணியன், அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான் மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம் என்ற சேக்கிழார் சுவாமிகளின் ஒருபாடல் போதும், ஆன்மிகம் தழுவிய பக்தி மார்க்கத்தை அறிய, ஆற்றுப்படுத்த. இன்று உலக மக்கள் தொகையில் தொன்னூறு விழுக்காடு இறை நம்பிக்கை கொண்டவர்கள் தாம் என்பதை உறுதியாக அறுதியிட்டுச் சொல்லலாம். இந்த ஆன்மிகத்தேடல், இறை நம்பிக்கை எங்கிருந்து உலக மக்களுக்குக் கிடைத்ததென்றால் அது புண்ணிய பூமியாகிய இந்த அகண்ட பாரத தேசத்திலிருந்துதான் வந்தது என்பது ஆன்றோர் வாக்கு.

ஆய்வாளர்களின் நோக்கில் ஏறக்குறைய பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தென்னாட்டில் திகழ்ந்தொளிரும் தமிழ்நாடு நாகரிகத்தில், மொழியில், கலை, பண்பாட்டில், அறிவார்ந்த, ஆராய்ச்சிகளில் என்று எல்லா நிலைகளிலும் முதிர்ந்து முன்னேறி இருந்த காலத்தில், ஐக்கிய அமெரிக்கா, அயர்லாந்து, ஆஸ்திரேலியா, பின்லாந்து, போலந்து, போர்ச்சுகல் போன்ற பல நாடுகளே இந்தப் பிரபஞ்சத்தில் இல்லை. ஆக, உலக வரலாற்றை ஊன்றி கவனித்துப் பார்தோமானால் இந்தியாவை உள்ளடக்கிய தமிழ்நாடு அது தென்னாடு என்று அழைக்கப்பட்டது.

அங்கம், வங்கம், கலிங்கம், மேவாளம், பாதாளம், மாவாளம் என ஐம்பத்தாறு நாடுகளை உள்ளடக்கியது அன்றைய தமிழ்நாடு. அன்றைக்கு தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு, கொங்கனி போன்ற பல மொழிவழக்குகள் இல்லை. மேலே குறிப்பிட்ட நாடுகளை உள்ளடக்கியது தமிழ்நாடு என்பது எத்தனை உண்மையோ அத்தனை உண்மை, தமிழ்மொழி ஒன்றுதான் எல்லா இடத்திலும் பேசப்பட்டதும் உண்மை. பின், பிற்காலத்தில் தமிழிலிருந்து பற்பல மொழிகள் கிளைமொழிகளாக தமிழ்வழியே தோன்றியவைகளே. தமிழில் இருந்து கிளை பரப்பிய மொழிகள் ஏறக்குறைய பன்னிரண்டு மொழிகள் என்பது மொழி ஆய்வாளர்களின் துணிபு.

இப்படி எல்லா வகையிலும் உயர்ந்து உலகையெல்லாம் கவர்ந்து நின்ற நிலைக்கு எது ஆதாரம் என்றால் அது ஆன்மிகம். ஆன்மிகம் இறை நம்பிக்கை, சிவ வழிபாடு, சிவலிங்க மூர்த்தியை வணங்கி சித்தி பெற்றதும், முக்தி பெற்றதுமான வரலாறு மிக நீண்ட தொடரில் இன்றைக்கும் நின்று, நிலைத்து, வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆன்மிகச் சித்தாந்தத்தில் இறைவழிபாட்டை இடையறாது தொடங்கித் தொடர்ந்தவர்கள் சாதாரண மனிதப்பிறவிகள் அல்ல. அவர்களை இறைவனே விரும்பிப் படைக்கப்பட்ட அவதார புருஷர்கள். அந்த வகையிலே நாயன்மார்கள் அறுபத்து மூன்று பேர்கள். பிற்பாடு காரைக்கால் அம்மையாரைச் சேர்த்து அறுபத்து நான்கு பேர்கள் என்று வரையறுக்கப்படுகிறது.

அந்த அறுபத்து நான்கு நாயன்மார்களும் சைவ சமயத்தை சார்ந்து, ஒழுகி, 'சிவாயநம' என்று சிந்தை கனிந்தவர்களாக திகழ்ந்தவர்கள். மேலும் சிவனடியார்களாக இருந்து பிறமத துவேசத்தால் இவர்கள் பட்ட இன்னல்கள் எழுத்திலடங்காதது. கற்தூணில் கட்டி நடுக்கடலில் கொண்டுபோய் போட்டுவிடும் கொடுமைகள் எல்லாம் சிவனடியார்களுக்கு பிறமதத்தவர்களால் ஏற்பட்டதை நாம் அறிகிறோம். அப்படி இன்னல் ஏற்பட்ட

போதெல்லாம், 'ஓம் நமசிவாய' என்று வேண்டிப் பிராத்தித்து வென்றவர்கள்தாம் சைவநெறியின் ஊற்றுக்கண்ணாகிய நாயன்மார்கள் அறுபத்து நான்கு பேர்களும்.

இவர்கள் வரலாற்றை தனித்தனியாக எழுத ஏடுகள் போதாது என்பதால் ஒருசில நாயன்மார்கள் பாடிய பாடலின் கருத்து உலகெல்லாம் பரவிடல் வேண்டும் என்ற உந்துதலால், ஆன்மப்பற்றாளர், சிவதீட்சை பெற்ற சிவனடியார், தமிழ்புலமை மிக்கவர், பல நல்ல நூல்களை ஆன்மிகம் சார்ந்தும், சமுதாயம் சார்ந்தும், மக்கள் நலனுக்காக எழுதி வெளியிட்டவர், இன்னும் இன்னும் எழுதிக்கொண்டே இருப்பவர் இந்தத் திருவிடத்தின் தமிழ்மகன் தமிழ்திருமிகு ஐயா கவிஞர் அழகு சக்திக்குமரன் என்கிற முருகன் அவர்கள் ஆவார்கள்.

அவர் ''மூவர் பாடிய தேவாரமும் பலன்தரும் முக்கிய பதிகங்களும்'' என்ற நூலை படைத்து வாழ்த்துரை வழங்கிட நூலின் கைப்பிரதியை என்னிடம் தந்தார். நூல் முழுதும் புரட்டி புரட்டிப் பார்த்தேன். பின் ஒவ்வொரு பக்கமாக படித்துப் படித்து இன்புற்றேன். இவர் எழுதுகின்ற எழுத்துநடை ஒரு தனி அழகுடையதாகத் திகழ்கிறது. இவர் இறைவனைக்குறித்து எந்த விளக்கமும் சொல்லவில்லை. இறைவனைக்குறித்துப் பாடிய புலவர்களைப் பற்றியும் எழுதவில்லை. இறைவனைப்போற்றிப் புகழ்ந்து உருகி உருகி இறைவன் மேல் பாடிய பாட்டுக்களில் உள்ள கருத்தை எடுத்துக் கொண்டு, அதன் நயத்தை அதன் உள்ளே, ஊடும் பாவுமாகக் கலந்து இழைந்திருக்கின்ற இறை இன்பத்தை, அந்த இன்பத்தால் மக்கள் அடைந்திருக்கின்ற பேரானந்தத்தை வியக்கிறார்.

தேவாரப்பாடல்களென்று முதன் முதலில் பாடத் தொடங்கியவர் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் அதன்பின் சுந்தரர் என்று மூவர் பாடிய தேவாரப் பாடல்களை நமது நூலாசிரியர் எடுத்துச் சொல்லி, அதில் பொதிந்துள்ள மூலக்கருத்துக்கு முழுவிளக்கமும் மிகத் தெளிவாக, மிகக் கோவையாக, படிப்பவர்களுக்கு எளிதில் புரியக்கூடிய வகையில், தன் எழுத்தை அழகு முழுமையடைந்த

சிலையாக்கி நம்மைப் படித்துப் படித்து இரசிக்க, வியக்க வைக்கிறார் நூலாசிரியர் தமிழ்த்திருமிகு ஐயா அழகு சக்திகுமரன் அவர்கள்,

முன்பே தேவாரம் படித்தோர்க்கு இவர் தந்திருக்கும் மூவர் பாடிய தேவாரத் தொகுப்பு மலரும் நினைவுக்கு கிடைத்த மறுவரமென்றால் மிகையல்ல. மேலும், நூலாசிரியர் திரு அழகு சக்திகுமரன் அவர்கள் தவமாய் தவமிருந்து இறைவனிடம் மன்றாடி வரத்தைப் பெற்றதன் வழியே முன்பு தேவாரம் படிக்காதவர் களுக்காக மிகச்சிறந்த அறுசுவை விருந்தினை ஆக்கிப்படைத்து, ஆற்றுப்படுத்துகிறார் என்பது மெய்.

நாயன்மார்களில் சேக்கிழார் சுவாமிகள் சைவத்தில் கொஞ்சம் மாறுபட்டவர். அவர் இரண்டாம் குலோத்துங்க சோழனின் முதன்மை அமைச்சராக இருந்து படைகளை வலிமையடையச் செய்து, பல போர்களை நடத்தி, பல நாடுகளையும் வென்று, இரண்டாம் குலோத்துங்க சோழ மன்னர் வசம் ஒப்படைத்த படையின் தலைமை சேனாதிபதியாகவும் இருந்து, பின் சைவ முனிவராக தன்னை நிலை நிறுத்திக் கொண்டவர்.

அவர் சைவம் சார்ந்த நாயன்மார்களில் ஒருவர்தான் என்றாலும், ஆண்டவன் வரலாற்றை சொல்லாது, ஆண்டவனைப் பாடுகின்ற அடியார்களின் வரலாற்றை திருத்தொண்டர் புராணம் என்ற தலைப்பில் நாயன்மார்களின் உயர்ந்த பக்தியை அவர்தம் செயல்பாடுகளை பாடியவர். அப்படி சிறப்பு பெற்ற சேக்கிழாரைப் போலவே நம் அழகு சக்திகுமரன் அவர்களும் இறைவனையும், புலவர்களையும் பாடாமல் புலவர்கள் இறைவனைப் புகழ்ந்து பாடிய பாடல்களை எடுத்துத் தொகுத்து நமக்களித்து, நம்மை மகிழ்விக்கிறார்.

நூலாசிரியர் திரு. அழகு சக்திகுமரன் அவர்கள் பள்ளிக் கல்லூரிப் படிப்பை முடித்து, பள்ளி ஆசிரியராக, மிகச்சிறப்போடு பணிபுரிந்து அதன் சிறப்பிற்காக பல விருதுகளும் சான்றுகளும் பெற்றவர். தமிழ்நாடு அரசு அழைத்து “தமிழ்ச் செம்மல்” விருதளித்த பெருமைக்குரியவர். அமெரிக்கா சென்று அங்கு பள்ளி

சிறார்களுக்காக திருக்குறள் வகுப்புகளை நடத்தி, அமெரிக்காவிலும் விருதுகள், பட்டயங்கள் பெற்ற சிறந்த கல்வியாளர், மரபுக்கவிஞர், பாடகர், பட்டிமன்ற நடுவர், தமிழ் மன்றங்களின் நிறுவனர், சொற்பொழிவாளர், நல்ல தெளிவான உச்சரிப்பில் ஆங்கிலத்தில் உரையாற்றும் திறன் நிறைந்தவர். கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு எனச்சொல்வது போல் இவர் தொட்டதெல்லாம் சிறப்பு. இட்டதெல்லாம் உயிர்ப்பு.

சேக்கிழார் சமயத்தை, ஆன்மிகத்தை, அதன்முலம் இறைவனைப் பாடாது, எழுதாது, இறைவனைப் போற்றிப் பாடிய நாயன்மார்களின் வரலாற்றைப் பாடினார். நம் நூலாசிரியர் நமக்குத் தொகுத்தளித்தது புலவர்கள், மன்னர்கள் செயல்களை அல்ல. அவர்களின் வரலாறுகளை அல்ல. இவர் நாயன்மார்கள் இறைவனைப்போற்றி எப்படி எப்படியெல்லாம் பாடி உருகுகிறார்கள் என்பதறிந்து, தானும் அந்தப் பாடல்களில் உருகி அந்தப் பாடலுக்கு விளக்கம் தந்து நம்மையும் உருக வைக்கிறார்.

முதன் முதலில் திருஞானசம்பந்தர் பாடிய தோடுடைய செவியன் பாடல்களைத் தொட்டு சுந்தரர், திருநாவுக்கரசர் போன்ற ஞானிகளின் பாடல்களை விளக்க உரையோடு தந்து, இந்த உலக மக்களுக்கு நன்மை ஒன்றையே செய்ய வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்கில் **“மூவர் பாடிய தேவாரமும் பலன்தரும் முக்கிய பதிகங்களும்''** எனும் சிறந்த நூலை நமக்கு தந்திருக்கிறார்.

நாயன்மார்களின் பாடல்கள் அத்தனையும் இரசிக்கலாம், சுவைக்கலாம், தம்மை மறக்கலாம் என்றாலும், அனைத்து மக்களுக்கும் நல்ல வழிகாட்டும் முறையில் எனக்குப் பிடித்த ஒரு பாடலோடு எனது மகிழ்வுரையை நிறைவு செய்தால் நன்றெனை எண்ணுகிறேன்.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி

மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உள்ளம் புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்வெள்ளி
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே
என்பொடு கொம்பொடமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழையுடனே
பொன் பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

இப்படி திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் போன்ற நாயன்மார்கள் அருளிச் செய்த பாடல்களையெல்லாம் அள்ளி வழங்கி, அதன் விளக்கங்களில் மூழ்கி நூலாசிரியர் மெய்யும் மனமும் உருகி உருகி நம்மையும் உருக வைக்கிறார். **"மூவர் பாடிய தேவாரமும் பலன்தரும் முக்கிய பதிகங்களும்''** என்ற வரத்தை நாமும் பெற்று உய்வோம் எனச்சொல்லி மகிழ்வோடு போற்றி ஓம் நமசிவாய.

கவிஞர்

நம்பிக்கை நாகராஜன்.



தவத்திரு. சாந்தலிங்கப் பெருமான்




திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட
சந்தானம் திருப்பேரூராதீனம் இருபத்து
நான்காம் குருமகா சந்நிதானங்கள்
கயிலைக் குருமணி தமிழ்நெறி
வழிபாட்டுத் தந்தை
தெய்வத் திருப்பெருந்திரு
சாந்தலிங்க இராமசாமி அடிகளார்



திருக்கயிலாயப் பரம்பரை
மெய்கண்ட சந்தானம்
திருப்பேரூராதீனம்
இருபத்து ஐந்தாம் குருமகா
சந்நிதானங்கள் கயிலைப் புனிதர்
திருப்பெருந்திரு சாந்தலிங்க
மருதாசல அடிகளார்

பொருளடக்கம்



விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

சிவபெருமான் துதி

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நான்அறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின்று ஏத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே - அப்பர்


குருவணக்கம்

உண்ணும் உணர்வுக்கு உணர்வாய் எனக்கு உண்மை தந்தாய்
மன்னும் சுருதிப் பொருளாய் வழி காட்டி நின்றாய்
பின்னும் குருவாய் அடைந்து உன் அருள் பேண வைத்தாய்
என் என்று உரைப்பேன் நின் கருணை இருந்தவாறே!

- சாந்தலிங்கர்

நால்வர் துதி

பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடி போற்றி
வாழி திரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர் திருத்தாள் போற்றி



திருஞான சம்பந்தர்



திருநாவுக்கரசர்





மாணிக்கவாசக சுவாமிகள்

தேவாரம்

தேவாரம் என்பது சிவபெருமான் மீது பாடப்பெற்ற பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகள் ஆகும். இந்த ஏழு திருமுறைகளை **திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்** ஆகிய நாயன்மார்கள் பாடியுள்ளனர். மொத்தம் 8227 பாடல்கள்.

பன்னிரு திருமுறைகள்

முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடிய தேவாரம். இவை **திருக்கடைக்காப்பு** என்று அழைக்கப்படும். 4, 5, 6ஆம் திருமுறைகள் திருநாவுக்கரசர் பாடிய தேவாரம். சுந்தரர் பாடிய தேவாரத்திற்கு, திருப்பாட்டு என்று பெயர். அது 7ஆம் திருமுறை. 8ஆம் திருமுறையில் மாணிக்கவாசகர் அருளிய **திருவாசகமும், திருக்கோவையாரும்** அடங்கும். 9ஆம் திருமுறையை 9 பேர் பாடியுள்ளனர். இதில் **திருவிசைப்பா** மற்றும் **திருப்பல்லாண்டும்** உள்ளன. 10ஆம் திருமுறை **திருமூலர்** அருளிய **திருமந்திரம்** ஆகும். 11ஆம் திருமுறையை 12 பேர் பாடியுள்ளனர். 12ஆம் திருமுறையை **சேக்கிழார்** பாடியுள்ளார். அதுவே **திருத்தொண்டர் புராணம்** எனப்படும். **பெரியபுராணம்** ஆகும்.

பன்னிரு திருமுறைகளை கி.பி.10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த **நம்பியாண்டார் நம்பிகள்** என்பார் இராசராச சோழனது ஆணைக்கு இணங்க தொகுத்து வழங்கினார். அவர் காலத்தில் தொகுக்கப்பட்டவை 11 திருமுறைகளே. 12ஆம் நூற்றாண்டில் சேக்கிழார் பாடிய பெரியபுராணம் 12ஆம் திருமுறை ஆயிற்று.

ஒவ்வொரு மதத்திற்கும் ஒரு சமயநூல் உண்டு. சைவத்திற்கு சமய நூலாக விளங்குவது திருமுறைகளே.

நம்பியாண்டார் நம்பிகள் வரலாறும் திருமுறைகள் தொகுக்கப்பட்ட வரலாறும்:

எந்த ஒரு செயலிலும் வெற்றி பெற விடாமுயற்சியும் நம்பிக்கையுமே அவசியம். அதற்கு எடுத்துக்காட்டாக நம்பியாண்டார் நம்பிகளைக் கூறலாம்.

சிதம்பரத்திற்கு அருகில் உள்ள **திருநாரையூர்** என்னும் திருத்தலத்தில் பிறந்தவர் நம்பியாண்டார் நம்பி. திருநாரையூரில் உள்ள **சவுந்தரேஸ்வரர்** ஆலயத்தில் உள்ள **பொல்லாப்பிள்ளையார்** மிகவும் பிரசித்தி பெற்றவர். இவர் சுயம்பு. அதாவது தானே உருவானவர். தினந்தோறும் **அனந்தீசர்** என்பவர் பொல்லாப் பிள்ளையாருக்கு பூசை செய்வது வழக்கம். விநாயகருக்கு படைக்கும் நைவேத்யத்தை பக்தர்களுக்கு தந்து விடுவார். நைவேத்யம் பற்றி கேட்கும் சிறுவனான நம்பியிடம் அந்த நைவேத்யத்தை பிள்ளையார் சாப்பிட்டு விட்டதாகக் கூறுவார். நம்பியும் அதை முழுவதுமாக நம்பினான். அவன் மனதில் அது ஆழமாகப் பதிந்து விட்டது.

ஒருநாள் அனந்தீசர் வெளியூர் செல்ல நேர்ந்தது. அவர் தன் மகன் நம்பியைப் பொல்லாப் பிள்ளையாருக்கு பூஜை செய்ய அனுப்பினார்.

நம்பியும் மகிழ்ச்சியுடன் ஆலயம் அடைந்தான். தனது தந்தையார் வழிபாடு செய்தது அவனுக்கு நினைவிருந்தது. பிள்ளையாருக்கு திருமஞ்சனம் செய்வித்தான். மலர்மாலை சூட்டினான். நைவேத்யம் படைத்தான். தந்தை கூறியபடி பிள்ளையார் அதைச் சாப்பிடுவார் என்று காத்திருந்தான். பிள்ளையார் சாப்பிடவில்லை.

நைவேத்யத்தை திரும்பி வீட்டிற்கு எடுத்துச் சென்றால் அம்மாவிடம் அடி வாங்க வேண்டும் என்ற பயம் வந்தது. மேலும் பள்ளிக்கு நேரமாகி விட்டது. தாமதமானால் ஆசிரியரும் அடிப்பார்

என்ற பயமும் சேர்ந்து கொண்டது. இதையெல்லாம் மனதில் கொண்டு நைவேத்யத்தை சாப்பிடுமாறு பிள்ளையாரைக் கெஞ்சினான். பிள்ளையார் பிரசாதத்தை சாப்பிடுவதாக தந்தையார் சொன்னாரே, சாப்பிடவில்லையென்றால் தான் செய்த பூஜையில் தவறு இருக்குமோ என்று அஞ்சினான். "இனி உயிரை விடுவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை" என்று கூறி விநாயகர் சிலைமீது முட்டி, நைவேத்யத்தை உண்ணுமாறு கதறினான். உடனே விநாயகர் தும்பிக்கையை நீட்டி, நைவேத்யத்தை உண்டார். அவரே நம்பிக்கு ஞானக் கல்வி தந்தார்.

மக்கள் பிரசாதம் கேட்க, பிள்ளையார் சாப்பிட்டு விட்டதாகக் கூற அவர்கள் நம்பவில்லை. மறுநாள் அன்பர்கள்முன் மீண்டும் பிள்ளையார் பிரசாதத்தை உண்டதைக் கண்ட மக்கள் வியப்பு அடைந்தார்கள். நம்பிக்கு விநாயகர் மீதிருந்த நம்பிக்கையே இவற்றிற்கு காரணம். நம்பியின் புகழ் பரவியது. அவன் நம்பியாண்டார் நம்பி ஆனார். **இராசராச சோழனுக்கு** தேவாரப் பாடல்களைத் தொகுக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. முயற்சி செய்தும் அவருக்கு பாடல்கள் இருக்குமிடம் தெரியவில்லை. மன்னன் விநாயகரின் அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பியைப் பற்றி கேள்விப்பட்டார். திருநாரையூர் வந்து அவனைச் சந்தித்தார். தேவாரப் பாடல்களைத் தொகுக்க தனக்கு உதவும்படி வேண்டினார். நம்பியும் விநாயகரை வேண்டிட, அசரீரி மூலம் பாடல்கள் யாவும் சிதம்பரம் நடராசர் கோவிலில் ஓர் அறையில் இருப்பதாக அறிந்தனர். மன்னனும் நம்பியாண்டார் நம்பியும் சிதம்பரத்தை அடைந்தனர். ஓர் அறையில் புற்றுக்குள் கரையானால் அரிக்கப்பட்ட ஏடுகளை எடுத்தனர். செல் அரித்தவை நீங்கலாக கிடைத்த பாடல்களை நம்பியாண்டார் நம்பிகள் 11 திருமுறைகளாகத் தொகுத்தார். பொல்லாப் பிள்ளையார் மீது **விநாயகர் இரட்டை மணிமாலை** பாடினார். கோவிலுக்கு வெளியே நம்பியாண்டார் நம்பியின் சன்னதி உள்ளது. திருநாரையூர் சிதம்பரத்திலிருந்து காட்டுமன்னார் கோயிலுக்குச் செல்லும் வழித்தடத்தில் 17 கி.மீ. தூரத்தில் உள்ளது.

திருஞான சம்பந்தர் தேவாரம்

தேவாரம் என்ற சொல்லுக்கு தெய்வத்தின்மீது அன்பு கொண்டு பாடிய பாடல் என்றோ தெய்வத்துக்கு சூட்டப்படும் பாமாலை என்றோ பொருள் கொள்ளலாம்.

பன்னிரு திருமுறைகளுள் முதல் மூன்று திருமுறைகள் திருஞான சம்பந்தர் தேவாரம் என்றும் **'திருக்கடைக்காப்பு'** என்றும் அழைக்கப்படும்.

பாடல்கள் எண்ணிக்கை:

முதலாம் திருமுறை	1469
இரண்டாம் திருமுறை	1331
மூன்றாம் திருமுறை	1358
	4158

திருஞான சம்பந்தரின் வேறு பெயர்கள் **ஆளுடைய பிள்ளை, காழி வள்ளல், பாலறாவாயர், பரசமய கோளரி** என்பனவாம்.

நம்பியாண்டார் நம்பி தொகுத்தபடி முதல் திருமுறையில் 136 பதிகங்களும், இரண்டாம் திருமுறையில் 122 பதிகங்களும் மூன்றாம் திருமுறையில் 125 பதிகங்களும் அடங்கும்.



திருஞானசம்பந்தர் -

திருஞான சம்பந்தர் வரலாறு

இவர் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் **சீர்காழியில்** பிறந்தார். அந்தண மரபில் கவுணியர் குலத்தில் பிறந்தார். இவரது தந்தையார் **சிவபாதஇருதயர்,** தாயார் **பகவதி அம்மையார்.** ஆச்சாள்புரக் கல்வெட்டுத் தகவலின்படி திருஞான சம்பந்தர் மனைவியின் பெயர் **சொக்கியார்.**

சீர்காழித் தலத்திற்கு பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம், சிரபுரம் என்னும் பன்னிரண்டு பெயர்கள் உண்டு.

ஞானசம்பந்தருக்கு மூன்றாண்டு நிறைவுற்றது. ஒருநாள் காலை தந்தையாருடன் சீர்காழி திருக்கோயிலின் திருக்குளத்திற்குச் சென்றார் சிவபாத இருதயர். மைந்தனைக் கரையில் அமரச்செய்து, நீருள் மூழ்கி மந்திரஉரு செய்தார். தந்தையைக் காணாமலும், முன்னைத்தவம் கைகூடியதாலும் திருத்தோணிச் சிகரம் பார்த்து **"அம்மே! அப்பா!"** என்று அழைத்து அழுதார். அப்பொழுது திருத்தோணிபுரப் பெருமான் உமாதேவியாரோடு விடைமீது அமர்ந்து காட்சி அளித்தார். அம்மையப்பர் சொற்படி அன்னை உமையாள் சிவஞானமும் மெய்ஞானமும் கலந்த திருமுலைப்பாலை (ஞானப்பாலை) சம்பந்தருக்கு ஊட்டினார். ஞானம் உண்ட பிள்ளையார் சிவஞானச் செல்வராய்த் திகழ்ந்தார்.

நீராடிய சிவபாத இருதயர் பால்வழிய நின்ற பிள்ளையைப் பார்த்து, "யார் தந்த எச்சிற்பாலை உண்டாய்?" எனக் கோல் ஓங்கினார். உடனே ஞானசம்பந்தர் தமக்குப் பால் கொடுத்த பரம்பொருளை அடையாளங்களுடன் சுட்டிக்காட்டி **"தோடுடைய செவியன்"** என்ற திருப்பதிகம் பாடினார்.

இதனை சேக்கிழார் பெரியபுராணத்தில் பின்வரும் பாடல்கள் வழியே பாடியுள்ளார்:

எண்ணரிய சிவஞானத்
தின்னமுதங் குழைத்தருளி
உண்ணடிசல் எனூட்ட
உமையம்மை எதிர்நோக்கும்
கண்மலர் துடைத்தருளிக்
கையிற் பொற் கிண்ணமளித்
தண்ணலை அங்கழுகை தீர்த்
தங்கண்ணார் அருள் புரிந்தார்

(பெரியபுராணம் பாடல் 1970)

சிவனடியே சிந்திக்குந்
திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும்
பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம்
உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர்
தாம்உணர்ந்தார் அந்நிலையில்

(பெரியபுராணம் பாடல் 1973)

திருஞான சம்பந்தர் பாடிய முதல் பதிகம்

(பசி பஞ்சம் போகவும் ஞானம் அறிவு கிட்டவும்
இப்பதிகத்தைப் படிக்கலாம்)

இறைவன் : பிரமபுரீஸ்வரர்
இறைவி : திருநிலை நாயகி

தோடுடைய செவியன் விடைஏறி ஓர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசி என்உள்ளங் கவர்கள்வன்
ஏடு உடைய மலரான் முனை நாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே

விளக்கம்:

தோடு என்னும் அணியை அணிந்துள்ளவன். உமா தேவியை இடப்பாகத்தில் உடையவன். இடப (காளை) வாகனத்தில் ஏறி வருபவன், பிறைச் சந்திரனை சடைமீது சூடியுள்ளவன். வெண்ணிற சுடுகாட்டுச் சாம்பலை மேனியில் பூசியுள்ளவன். அவன் என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன். அப்பெருமான் முன்னொரு காலத்தில் நான்முகனின் (பிரம்மாவின்) வழிபாட்டை ஏற்று அருள் செய்தவன். அவன் இவனே அல்லவா?

முற்றல் ஆமை இளநாகமொடு ஏன முளைக் கொம்பு அவை பூண்டு
வற்றல் ஓடு கலனாப் பலி தேர்ந்து எனது உள்ளங் கவர் கள்வன்
கற்றல் கேட்டல் உடையார் பெரியார் கழல் கையால் தொழுதேத்த
பெற்றம் ஊர்ந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே

விளக்கம்:

ஆமையோடு நாகம், பன்றியின் கொம்பு இவற்றை அணி கலனாகப் பூண்டிருப்பான். திருஓடு ஏந்தி பிச்சை கொள்பவன். என்

உள்ளத்தைக் கவர்ந்தவன். பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர்களும், ஞானம் பெற்றவர்களும் கரங் கூப்பி வணங்கி நிற்க இடபத்தில் (காளையில்) காட்சி தரும் பெருமான் இவனல்லவா?

இடபம் = காளை

நீர்பரந்தநிமிர் புன்சடைமேல் ஓர் நிலாவெண் மதிசூடி
ஏர்பரந்தஇன வெள்வளை சோரஎன் உள்ளங் கவர் கள்வன்
ஊர்பரந்த உலகின் முதல் ஆகிய ஓர் ஊர் இது என்னப்
பேர்பரந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே

விளக்கம்:

கங்கை தங்கும் சடையில் குளிர்ந்த பிறைச் சந்திரனைச்சூடி அழகிய வளைகள் கைகளிலிருந்து நழுவிச் செல்லுமாறு என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன் அவன். உலகிலுள்ள ஊர்கள் யாவும் ஊழிக்காலத்தில் அழிந்தாலும், அழியாமல் எப்போதும் பிரமாபுரத்தில் இருக்கும் பெருமான் இவனல்லவா?

விண்மகிழ்ந்த மதில் எய்ததுமன்றி விளங்குதலை யோட்டில்
உண்மகிழ்ந்து பலிதேரிய வந்து எனது உள்ளங் கவர் கள்வன்
மண்மகிழ்ந்த அரவம் மலர்க்கொன்றை மலிந்தவரை மார்பிற்
பெண்மகிழ்ந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே

விளக்கம்:

வானத்தில் பரந்து சென்று துன்புறுத்தும் குணம் கொண்ட முப்புரக் கோட்டைகளை எரித்தவர். பிரமனுடைய கபாலத்தைப் பிச்சைப் பாத்திரமாகக் கொண்டு பிச்சையேற்று என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவன். அரவமும் கொன்றை மலரும் மார்பினில் பொலிய உமாதேவியை மகிழ்ந்து இடப்பாகத்தில் வைத்து பிரமாபுரம் மேவிய பெருமான் இவனல்லவா!

ஒருமை பெண்மை உடையன் சடையன் விடை ஊரும் இவன் என்ன
அருமை ஆக உரைசெய்ய அமர்ந்து எனது உள்ளங் கவர் கள்வன்
கருமை பெற்ற கடல் கொள்ள மிதந்தது ஓர் காலம் இது என்னப்
பெருமை பெற்ற பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே

விளக்கம்:

ஒரே வடிவத்தில் பெண்ணுருவும், ஆணுருவும் காட்டுபவன். சடை முடியுடன் இடப வாகனம் ஏறுபவன். அருமையான உரைகளைச் சொல்வதற்காக எனது உள்ளம் அமர்ந்து என்னைக் கவர்ந்தவன். ஊழிக்காலத்திலும் அழியாத பெருமையுடைய பிரமாபுரம் மேவிய பெருமான் இவனல்லவா!

மறைகலந்த ஒலிபாடலோடு ஆடலர் ஆகிமழு ஏந்தி
இறைகலந்த இனவெள்வளை சோர என் உள்ளங் கவர்கள்வன்
கறைகலந்த கடிஆர் பொழில் நீடுயர் சோலை கதிர்சிந்தப்
பிறைகலந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே

விளக்கம்:

வேதஒலி முழங்க பாடலுடன் ஆடலும் செய்பவன். மழு ஏந்தி இருக்கும் சிவபெருமான். அவன் என்னுடைய கைகளில் உள்ள வளைகள் தாமே கழன்று விழும்படி செய்து என் உள்ளத்தைக் கவர்ந்து உருகச் செய்தவன். அடர்ந்த சோலைகளை உடையதும், நறுமணம் வீச நிலவின் தன்மையுடையதுமான பிரமாபுரத்தில் மேவிய பெருமான் இவனல்லவா!

சடை முயங்கு புனலன் அனலன் எரிவீசிச் சதிர்வெய்த
உடைமுயங்கும் அரவோடு உழிதந்து எனது உள்ளங் கவர் கள்வன்
கடல் முயங்கு கழிசூழ் குளிர் கானல் அம் பொன்னஞ்சிறக
பெடை முயங்கு பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே

விளக்கம்:

சடையில் கங்கையையும், கரத்தில் நெருப்பையும் ஏந்தி, ஒளிதந்து பெருமை கொள்ளவும், அரவம் உடலின்மீது இறுகப்பற்றித் திரியவும், என் உள்ளத்தைக் கவர்ந்தவன், உப்பங்கழி பொருந்திய சோலையில் அன்னப் பறவைகள் தம் பெண் பறவைகளுடன் கூடியுள்ள பிரமாபுரத்தில் இருக்கும் பெம்மான் இவனல்லவோ!

வியர் இலங்கு வரை உந்திய தோள்களை வீரம் விளைவித்த
உயர் இலங்கை அரையன் வலி செற்று எனது உள்ளம் கவர் கள்வன்
துயர் இலங்கும் உலகில் பல ஊழிகள் தோன்றும் பொழுது எல்லாம்
பெயர் இலங்கு பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே

விளக்கம்:

கோபம் கொண்டு தனது வீரத்தைக் காட்ட எண்ணி, கயிலையை பெயர்க்க முயன்றான் இலங்கை அரசன். அப்படிச் செய்தவனின் வலிமையை அழித்த என் உள்ளங் கவர்ந்த பெருமான், வினைகளின் காரணமாக துயர் விளையும் இவ்வுலகில் ஊழிக் காலத்திலும் அழியாமல் நிலைத்திருக்கும் சிறப்பு மிக்க ஊராகிய பிரமாபுரத்தில் மேவியவன் இவனல்லவா!

தாணு நுதல் செய்து இறை காணிய மாலொடு தண் தாமரையானும்
நீணுதல் செய்து ஒழிய நிமிர்ந்தான் எனது உள்ளங் கவர் கள்வன்
வாணுநுதல் செய் மகளீர் முதலாகிய வையத்தவர் ஏத்த
பேணுதல்செய் பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே

விளக்கம்:

திருவடியைக் காண திருமாலும் திருமுடியைக் காண பிரமனும் முயற்சி செய்து, அவர்களின் செயல் பயனற்றதாகச் செய்யும்படி நீண்டு வளர்ந்த ஈசன் என் உள்ளத்தைக் கவர்ந்தான். வாள்போன்ற

நெற்றியை உடைய மகளிர் முதலாக உலகத்தவர் அனைவரும் வணங்கி பேணிக் காக்கும் பிரமாபுரம் மேவிய பெருமான் இவன் அல்லவா!

புத்தரோடு பொறிஇல் சமணும் புறங்கூற நெறி நில்லா
ஒத்த சொல்ல உலகம் பலிதேர்ந்து எனது உள்ளங் கவர் கள்வன்
மத்த யானை மறுகவ்வுரி போர்த்ததோர் மாயம் இதுவென்னப்
பித்தர் போலும் பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே!

விளக்கம்:

புலன் உணர்வுகளை நீத்த பௌத்தரும் சமணரும் நன்னெறியில் அமையாத மாற்றுக் கருத்துக்களைக் கூறினாலும் பிச்சையேற்று எனது உள்ளத்தைக் கவர்ந்தவன். அகம்பாவம் கொண்ட யானையை அழித்து, அதன் தோலைப் போர்வையாக்கிக் கொண்டவன். பின்னர் மாயை காட்டிப் பித்தனைப் போல பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அல்லவா!

அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கை அலர் மேய
பெருநெறிய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன்தன்னை
ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரை செய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே

விளக்கம்:

மறைகளில் வல்ல பிரமன் வழிபட்ட பிரமாபுரம் மேவிய பெருமானை ஒன்றுபட்ட மனத்தினால் உணர்ந்து ஞானசம்பந்தன் உரைத்த இத்தமிழ்ப் பதிகத்தை ஓதும் வல்லமை உடையவர்களுக்கு தொல்வினைகள் (பழைய வினைகள்) எளிதாகத் தீரும்.

திருஞான சம்பந்தர் நிகழ்த்திய அற்புதங்கள்

1. மூன்றாம் வயதிலேயே உமையம்மையிடம் திருமுலைப்பால் உண்டது.
2. சிவபெருமானிடமிருந்து பொற்றாளமும், முத்துப் பல்லக்கும், முத்துச் சிவிகையும், முத்துக் குடையும், முத்துப் பந்தரும் உலவாக்கிளியும் பெற்றது.
3. வேதாரணியத்தில் (திருமறைக்காட்டில்) திருக்கதவு அடைக்கப் பாடியது.
4. திருப்புவனத்தில் 'திருப்பூவனமே' என்று முடியும் பதிகம் பாடிட, சிவபெருமான் நந்தியைச் சாய்ந்திருக்கச் சொல்லி காட்சி அருளியது.
5. பாலை நிலத்தை நெய்தல் நிலமாகும்படி பாடியது.
6. பாண்டியனுக்கு கூனையும் சுரத்தையும் போக்கியது.
7. சிவபெருமானிடத்தே படிக்காசு பெற்றது.
8. விடத்தால் இறந்த வணிகனை உயிர்ப்பித்தது.
9. கபாலீச்சரம் தலத்தில் பதிகம் பாடி எலும்பிலிருந்து பூம்பாவையை உயிர்ப்பித்தது.
10. தன் திருமணத்தன்று தன் மனையாளோடும் வந்தாரோடும் சோதியிற் கலத்தல்.

பொற்றாளம் பெறல்:

சில நாட்கள் கழித்து திருஞான சம்பந்தர் திருக்கோலக்காவிற்கு எழுந்தருளினார். கையினால் தாளமிட்டு 'மடையில் வாளை' என்ற திருப்பதிகம் பாடினார். பாட்டிற்கு உருகும் பரமன் கை நோகுமென்று சம்பந்தருக்கு ஐந்தெழுத்து வரையப்பெற்ற பொற்றாளம் தந்து அருளினார். அந்தப் பதிகத்தின் முதல் பாடல் :

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங் கீள்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ.

விளக்கம்:

நீர் மடைகளில் வாளைமீன்கள் துள்ளிக் குதிப்பதையும், நீர் நிலைகளில் பெண்கள் குடைந்து நீராடுவதையும் காணக் கூடிய 'திருக்கோலக்கா' என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன், சடாமுடிதரித்து, அதனில் பிறைச் சந்திரனைச் சூடி, உடல் முழுதும் சாம்பலைப் பூசி கீளொடு கூடிய கோவணத்தை உடையாக உடுத்தி, இப்படி வேடம் ஏற்று காட்சியளிப்பது என்ன காரணத்தாலோ?

பெருமை அறிந்த மக்கள் தங்கள் ஊருக்கு வருமாறு வேண்டி அழைத்தனர். முதலில் ஞானசம்பந்தர் தனது தாய் பிறந்த ஊராகிய திருநனிப்பள்ளியை அடைந்தார். அவரின் பெருமையைக் கேள்விப்பட்ட திருநீலகண்ட யாழ்ப்பாணர் மனைவியோடு சீர்காழிக்கு வந்து தரிசித்தார். அது முதல் சம்பந்தரின் பாடல்களையெல்லாம் யாழில் வாசிக்கலானார்.

முத்துச்சிவிகை முதலியன பெறல்:

தில்லை முதலிய தலங்களைத் தரிசித்து திருஞானசம்பந்தர் நடுநாட்டில் உள்ள **திருநெல்வாயிலரத்துறை** அடைந்தார். மாறன்

பாடியில் அன்றிரவு நித்திரை செய்தார். அரத்துறைப் பெருமான் **முத்துச்சிவிகை, முத்துக்குடை** சின்னம் முதலியவற்றை அருளினார். இறையருளைப் பெற்ற ஞானசம்பந்தர் **"எந்தை ஈசன் எம்பெருமான்"** என்ற திருப்பதிகம் பாடினார். அப்பதிகத்தின் முதல் பாடல்:

எந்தை யீசனெம் பெருமான் ஏறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லால் சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே

விளக்கம்:

மணமுள்ள மேலான சிறப்புடைய மலர்களைத் தள்ளிக் கொண்டு வரும் நீரால் நிரம்பிய நிவா நதிக்கரையில் உள்ள அழகிய குளிர்ந்த சோலையால் சூழப்பட்டது நெல்வாயில் என்னும் தலம். அத்திருத்தலத்தில் அரத்துறை என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனை எந்தை என்றும் எம்பெருமான் என்றும் இடபத்தின் மீது ஏறிவரும் கடவுள் என்றும் போற்றி நினைக்க வல்லவர்க்கு அல்லாமல் ஏனையோர்க்கு இறைவர்தம் திருவருள் சென்று கைகூடுவது இல்லை.

உபநயனம்:

உபநயனப் பருவத்தில் ஞானசம்பந்தருக்கு உபநயனம் நடைபெற்றது. அங்கு மறையோர் பலர் வந்திருந்தனர். அவர்களின் ஐயங்களை அகற்றி வேத முடிவான ஐந்தெழுத்தின் பெருமையை **"துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்"** என்ற திருப்பதிகமாகப் பாடி விளக்கியருளினார் சம்பந்தர்.

முத்துப் பந்தல் பெறல்:

ஞானசம்பந்தர் பெருமையைக் கேள்விப்பட்ட திருநாவுக்கரசரும் சீர்காழிக்கு எழுந்தருளினார். ஞானசம்பந்தரும் அவரை எதிர்கொண்டு அழைத்தார். இருவரும் அன்புக்கடலில் திளைத்தனர். பின்னர் ஞானசம்பந்தர் **திருப்பாச்சிலாச்சிராமம்** பணிந்து **கொல்லிமழவன் மகளைப்** பிடித்திருந்த **முயலகன்** என்னும் நோயைப் போக்கினார். திருச்சங்கோடு என வழங்கும் திருகொடி மாடச்செங்குன்றூர் சென்றார். அப்போது அடியவர்களை விஷக்காய்ச்சல் பற்றியது. **திருநீலகண்ட திருப்பதிகம்** பாடி, அந்த விஷநோயைப் போக்கினார்.

இத்திருப்பதிகத்தைப் படிப்பதால் விஷசுரம், குளிர் காய்ச்சல் மற்றும் தொண்டை நோய்கள் தீரும். மேலும் செய்வினையால் வரும் துன்பங்களை நீக்கவும் இப்பதிகம் படிக்கலாம்.

ஒரு பதிகத்தில் 10 அல்லது 11 பாடல்கள் இருக்கும். திருநீலகண்டப் பதிகத்தின் **முதல் பாடலும் விளக்கமும்:**

**அவ்வினைக்கு இவ்வினை யாம் என்று சொல்லும் அஃது அறிவீர்
உய்வினை நாடாது இருப்பது உம்தமக்கு ஊனம்அன்றே
கை வினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாம்அடியோம்
செய்வினை வந்து எமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்.**

விளக்கம்:

அவ்வினை = சென்ற பல பிறப்புகளில் செய்த தீவினைகள்.

இவ்வினை = பழைய வினைகளின் பயனாக இந்தப் பிறவியில் அனுபவிக்கும் துன்பங்கள்.

இப்பிறவியில் அனுபவிக்கும் துன்பங்கள் சென்ற பல பிறவிகளால் ஈட்டிய வினைகளின் விளைவு ஆகும். அவற்றை இப்பிறவியில் நுகர்ந்து கழிக்க வேண்டும். இவ்விதிகளை மாற்றவோ

குறைக்கவோ பெருமானைத் தவிர்த்து வேறு எவருக்கும் அதிகாரம் இல்லை. எனவே பெருமானை வணங்கி உயிர்கள் வினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். இப்படி உபாயம் இருப்பதை மறந்து இருப்பது நம் தவறே ஆகும். இக்குற்றத்தையே ஊனம் என்று ஞானசம்பந்தர் சுட்டிக் காட்டுகின்றார். ஞானசம்பந்தர் **பட்டீச்சுரத்தை** அடைந்தபோது வெயில் மிகுந்திருந்தது. பெருமான் திருவருளால் சிவபூதம் ஒன்று **முத்துப்பந்தல்** கொடுத்தது.

வேறு சில அற்புதங்கள்

திருவாவடுதுறை அடைந்தார் ஞானசம்பந்தர். தந்தையார் வேள்வி செய்யப் பொருள் தேவைப்பட்டது. பெருமானிடம் பொருள் வேண்டினார்.

ஆவடுதுறை அரனை

இடரினும் தளரினும் எனது உறுநோய்
தொடரினும் உனகழல் தொழுது எழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே

தேவர்கள் அமுதம் பெறுவதற்கு பாற்கடலைக் கடைந்தபோது வெளிவந்த விடத்தை உண்டு, கண்டத்தில் அடக்கியவனே! வேதம் சொன்னவனே, துன்பமும் தளர்வும் வந்தபோதும், வினை என்னைத் தொடர்ந்தபோதும் உனது திருவடிகளையே வணங்கி எழுவேன். திரு ஆவடுதுறை திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமானே, வேண்டும் பொருளை நீ எனக்குத் தராவிடின், அது உமது திருவருளுக்கு அழகாகுமோ? எம்மை ஆட்கொண்ட தன்மை இதுவோ? என்ற பதிகம் பாடிப் போற்றினார். சிவபெருமான் பொற்கிழி நல்கினார். அதைத் தந்தையாரிடம் தந்தார். திருமருகல் சேர்ந்தார் சம்பந்தர். கணவனாக வரஇருந்த வணிகன் விடம் தீண்டி இறந்ததால் கதறி அழுதாள் ஒரு நங்கை. அவளின் துயரைத்

துடைக்க, 'சடையாய் எனுமால்' என்னும் பதிகத்தைப் பாடி வணிகனை உயிர்பெற்று எழச் செய்தார்.

சடையா யெனுமால் சரண் நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள் மெலிவே.

விளக்கம்:

நீர்நிலைகளில் குவளை மலர்கள் மலர்ந்து மணம் பரப்பும் திருமருகல் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ளவனே, இந்தப் பெண் சடையாய் என்றும் விடையாய் என்றும் நீயே எனக்குப் புகலிடம் என்றும் மயங்கி விழுகிறாள். உன்னையே நினைத்துப் புலம்பும் இவள் மனவருத்தத்தை போக்காமல் இருப்பது உன் பெருமைக்குத் தக்கதோ?

படிக்காசு பெறல்:

திருச்செங்காட்டங்குடி, திருப்புகலூர் ஆகிய தலங்களைத் தரிசித்த பின், திருநாவுக்கரசர் ஆரூரின் பெருமை கூற, ஆரூரானைத் தொழுதார். அப்பரும் ஞானசம்பந்தரும் **திருவீழிமிழலை** சேர்ந்தனர். அப்பொழுது நாட்டில் பஞ்சம் உண்டாயிற்று. பரமன் அளித்த படிக்காசைக் கொண்டு இருவரும் ஆயிரக்கணக்கான அடியார்களுக்கு சோறளித்தனர்.

திருமறைக்காட்டில் அற்புதம்:

தேவாரம் பாடல் பெற்ற திருத்தலங்களில் சோழ நாட்டின் தென்கரையில் அமைந்துள்ள திருத்தலங்களில் 125ஆவது திருத்தலம் திருமறைக்காடு, **வேதாரண்யம்** என்று அழைக்கப்படுகிறது. **நாகப்பட்டினம் மாவட்டத்தில்** அமைந்துள்ளது. ஆதிகைலாயம், ஞானபூமி என்றும் அழைக்கப்படுகின்றது.

இங்குள்ள கோவிலுக்கு திருமறைக்காடர் கோவில் என்று பெயர். **அம்மை வேதநாயகி, அப்பன் வேதாரண்யேஸ்வரர்.** இத்தலத்தில் மனித வடிவில் வேதங்கள் வழிபட்டன. ஊழிக்காலத்தில் இறைவனைக் கயிலைக்குச் செல்லும்படி வேண்டிக் கொண்ட பின்னர் இக்கோயில் கதவை அடைத்ததாகவும் வழங்கப்படுகின்றது. அன்று முதல் கதவு மூடப்பட்டு வேறு வாசல் வழியாகவே அடியார் பெருமக்கள் சென்று வந்தனர்.

இத்திருத்தலத்திற்கு திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் வந்தார்கள். அடியார் பெருமக்களின் வேண்டுகோளை ஏற்று திருக்கதவு திறக்கவும் மூடவும் பதிகம் பாடினார்கள்.

"பூட்டப்பட்ட கதவுகளின் தாழ் திறக்குமாறு பாடுங்கள்" என்று திருநாவுக்கரசரிடம் திருஞானசம்பந்தர் கூறினார்.

திருநாவுக்கரசர்,

"பண்ணின் நேர்மொழியாள் உமை பங்கரோ
மண்ணினார் வலம் செய்யும் மறைக்காடரோ"

எனத் தொடங்கி பத்து பாடல்கள் பாடியும் தாழ் திறவாமை கண்டு வருந்தினர். பின்னர்,

"அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்
இரக்கம் ஒன்றிலீர் எம்பெருமானாரே"

என்று பாட கதவு திறந்தது.

ஞானசம்பந்தர் அப்பருடன் அடியார் பெருமக்கள் திருக்கோயில் உள்ளே சென்று இறைவனை வழிபட்டனர்.

அப்பர் பிரான் ஆளுடைய பிள்ளையைப் (ஞானசம்பந்தரை) பார்த்து "கதவுகள் மூடும்படி பாடி அருள வேண்டும்" என்றார். உடனே ஞானசம்பந்தர்,

சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில் சூழ் மறைக்காட்டுறை மைந்த

எனத் தொடங்கும் முதல் பாடல் பாடிய உடனே கதவுகள் மூடிக் கொண்டன. பின்னர் ஞானசம்பந்தர் பதிகம் முழுவதும் பாடினார்.

அந்த பதிகத்தின் முதல் பாடலும் விளக்கமும்:

சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில் சூழ் மறைக்காட்டுறை மைந்தா
இது நன்கு இறை வைத்து அருள்செய்க எனக்குஉன்
கதவம் திருக்காப்புக் கொள்ளும் கருத்தாலே.

பாடல் விளக்கம்:

இனிய பொழில்கள் சூழ்ந்த திருமறைக்காட்டில் வேதங்கள் நான்கும் துதி செய்து வணங்க வீற்றிருக்கும் வலியோனே! உன் திருக்கோயில் கதவுகள் முன் உள்ளவாறே திருக்காப்புக் கொள்ளும் கருத்தோடு கேட்ட இக்கேள்விக்கு நல்லவண்ணம் விடை அருள்வாயாக.

பாண்டி நாட்டில் சைவம்:

பாண்டிய மன்னன் நெடுமாற பாண்டியன் சமணசமயம் சார்ந்து இருந்தான். ஆனால் அரசி மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் சம்பந்தப் பெருமானுக்கு செய்தி அனுப்பி மதுரைக்கு வரும்படி அழைத்தனர். ஞானசம்பந்தரும் மதுரைக்குப் புறப்பட்டார். அச்சமயம் திருநாவுக்கரசர் சம்பந்தரிடம் “இன்று நாளும் கோளும் சரியில்லை” என்று எச்சரித்தார். ஆனால் சம்பந்தப் பெருமானோ “நாளும் கோளும் அடியார்க்கு ஏது?” என்று கூறி “அவை நல்ல நல்ல” என “கோளறு பதிகம்” பாடி ஏகினார்.

இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்வதால்
நவக்கிரகங்களால் ஏற்படும் பலன்கள்,
கெட்ட சகுனங்கள் நீங்கி நன்மைகள்
நடக்கும் என்பது திண்ணம்.

கோளறு பதிகம்

இறைவன் : மறைக்காட்டீசுவரர் (வேதாரண்யேசுவரர்)

இறைவி : யாழைப் பழித்த மொழியம்மை

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 1

விளக்கம்:

மூங்கில் போன்ற தோளினை உடைய உமையம்மையை தன் உடலில் ஒரு பாகமாகக் கொண்டிருப்பவரும் விடம் உண்ட கண்டருமாகிய சிவபெருமான் சந்திரன், கங்கை ஆகியவற்றை முடிமேல் அணிந்தவராய் மகிழ்ச்சியில் வீணையை மீட்டி என் உள்ளம் புகுந்து தங்கியுள்ளார். அதனால் திங்கள் முதலான ஒன்பது கோள்களும் குற்றமுற்று நலத்தையே செய்வனவாக இருக்கும். அவை அடியார்களுக்கு மிகவும் நல்லனவே செய்யும்.

என்பொடு கொம்பொ டாமை இவை மார்பு இலங்க
எருதேறி ஏழை உடனே
பொன் பொதி மத்தமாலை புனல் சூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றொடு ஏழு பதினெட்டோடு ஆறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 2

விளக்கம்:

எலும்பு, பன்றிக்கொம்பு, ஆமையோடு ஆகியவை மார்பில் இலங்க, பொன் போன்ற மகரந்தம் பொருந்திய ஊமத்தை மலர் மாலை, கங்கை ஆகியவற்றை முடிமேல் சூடி, உமையம்மையோடு எருதேறி வந்து என் உள்ளம் புகுந்து எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்றார். அதனால் அசுவினி முதலாக உள்ள நாட்களில் ஆகாதவையாகிய ஒன்பது, பத்து, பதினாறு, பதினெட்டு ஆறு ஆகிய எண்ணிக்கையில் வரும் நாட்களும் பிற நட்சத்திர நாட்களும் அன்போடு நல்லவையே செய்யும். அடியார்களுக்கு மிகவும் நன்மை செய்யும்.

உருவளர் பவளமேனி ஒளி நீறு அணிந்து
உமையோடும் வெள்ளைவிடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வமான பலவும்
அருநெறி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 3

விளக்கம்:

அழகிய பவளம் போன்ற திருமேனியில் ஒளி பொருந்திய திருநீற்றை அணிந்து மணம்மிக்க கொன்றை திங்கள் ஆகியவற்றை முடிமேல் அணிந்து ஈசன் உமையம்மையோடு வெள்ளை எருதின் மீது ஏறிவந்து என் உள்ளம் புகுந்துள்ளார். ஆதலால் திருமகள், துர்கை செயமகள் நிலமகள் மற்றும் திசைக்குரிய தெய்வங்கள் அனைவரும் அரிய செல்வங்களைத் தருவார்கள். அடியார்களுக்கு மிகவும் நலமே தருவார்கள்.

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறை ஓதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே 4

விளக்கம்:

பிறை போன்ற நெற்றியை உடைய அன்ன உமையோடு ஆலமரத்தின் கீழிருந்து வேதங்களை அருளிச் செய்த எங்கள் பரமன் கங்கையையும் கொன்றை மாலையையும் அணிந்து என் உள்ளம் புகுந்து விட்டார். ஆதலால் சினம் மிக்க காலன், அக்கினி, யமன், யமதூதர், கொடிய நோய்கள் அனைத்தும் நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு மிகவும் நல்லனவே செய்யும்.

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்தனோடும்
விடையேறும் நங்கள் பரமன்

துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியு மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே 5

விளக்கம்:

நஞ்சை உண்ட கண்டத்தை (கழுத்தை) உடையவனும், என் தந்தையும் ஆகி, உமையம்மையுடன் இடப வாகனத்தில் வருகின்ற எம் தலைவனுமாகிய சிவன் இருள் செறிந்த வன்னி இலை, கொன்றை மாலை ஆகியவற்றை தனது திருமுடிமேல் அணிந்து என் உள்ளம் புகுந்தார். ஆதலினால் கோபம் காட்டும் அவுணர், இடி, மின்னல் செருக்குடைய பூதங்கள் ஆகியன நம்மைக்கண்டு அஞ்சுவதோடு நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு மிக நல்லனவே செய்யும்.

வாள்வரி அதளதாடை வரி கோவணத்தர்
மடவாள்தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதி சூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலை யானை கேழல்
கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே 6

விளக்கம்:

ஒளியும் வரியும் பொருந்திய புலித்தோலை ஆடையாக உடுத்தி வரிந்து கட்டிய கோவண ஆடையுடன் உள்ள நம்பெருமான்

உமையம்மையுடன் அன்று பூத்த மலர்கள் வன்னி, கொன்றை கங்கை ஆகியவற்றை முடியில் சூடி வந்து என் உள்ளம் புகுந்து விட்டார். ஆதலால் வலிமைமிக்க குரங்கு, புலி, கொலை யானை, பன்றி, கொடிய பாம்பு, கரடி, சிங்கம் ஆகியன நமக்கு நல்லவையே செய்யும். அடியார்களுக்கும் மிகவும் நல்லனவே செய்யும்.

செப்பிள முலைநன் மங்கை ஒருபாகமாக
 விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்து என்
 உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
 வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவை நல்லநல்ல
 அடியார் அவர்க்கு மிகவே. 7

விளக்கம்:

செப்பு போன்ற இளமார்பகங்களைக் கொண்ட உமையவளோடு விடையேறி வரும் சிவபெருமான் பிறைச்சந்திரனையும் கங்கையையும் முடிமேல் அணிந்தவராய் என் உள்ளம் புகுந்தார். ஆதலால் அடியார் களின் உடல் வெப்பம், குளிர் தன்மைகள், வாதம், பித்தம் முதலிய நாடிகள் சீராக இயங்கும். அடியார்களுக்கு நன்மை உண்டாக்கும்.

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
 மடவாள் தனோடும் உடனாய்
வான்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்துஎன்
 உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன் தனோடும்
 இடரான வந்து நலியா

ஆழ்கடல் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே 8

விளக்கம்:

நெற்றிக் கண்ணைத் திறந்து மன்மதனை அழித்து, இடப வாகனம் ஏறி, உமையம்மையும் ஒரு பாகத்தில் வைத்து, முடியின் மீது பிறைச் சந்திரன், வன்னி, கொன்றை மலர் ஆகியன சூடி சிவபெருமான் என் உள்ளம் புகுந்தார். ஆதலால் ஏழ்கடல்களால் சூடப்பட்ட இலங்கை மன்னன் இராவணனாலும் பிறராலும் வரும் இடர்கள் நம்மை வந்து சேரா. ஆழ்கடலாலும் நன்மையே விளையும். அடியார்களுக்கு நன்மையே விளையும்.

பலபல வேடமாகும் பரன்நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே 9

விளக்கம்:

பல்வேறு கோலங்கள் கொண்டு அருள்புரியும் தலைவனும், உமையொரு பாகனும், விடையேறி வரும் எங்கள் பரமனாகிய சிவபெருமான் தனது முடிமீது கங்கை, எருக்கமலர் ஆகியன அணிந்து வந்து என்உள்ளம் புகுந்தார். ஆதலால் தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் பிரமன், திருமால், வேதங்கள், தேவர்கள் ஆகியோராலும் அலைகடல் தீய காலங்கள், மேருமலை

ஆகியவற்றாலும் தீமை விளையாது நமக்கு நல்லனவாகவே அமையும். அடியார்களுக்கு அவை மிகவும் நல்லனவே செய்யும்.

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
புத்தரோடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 10

விளக்கம்:

கூந்தலில் பூங்கொத்துக்களை அணிந்த உமையம்மையோடு சென்று, குணம் காட்டி அருச்சுனனுக்கு அருள்புரிந்த வேடவடிவம் கொண்ட சிவபெருமான் முடிமேல் ஊமத்தை மலர், பிறைச்சந்திரன், பாம்பு ஆகியவற்றை அணிந்து என் உள்ளம் புகுந்தார். ஆதலால் புத்தர்களையும், சமணரையும் அண்ணலின் திருநீறு வாதில் தோல்வி அடையச் செய்யும் நமக்கு தீமைகள் நீங்கி நன்மையே விளையும். அடியார்களுக்கு மிகவும் நல்லனவே செய்யும்.

தேனமர் பொழில்கொள் ஆலைவிளை செந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் திகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 11

விளக்கம்:

தேன் பொருந்திய சோலைகளைக் கொண்டதும் கரும்பு விளைந்த செந்நெல் ஆகியன நிறைந்துள்ளதும் வளரும் செம்பொற்குவியல் எங்கும் நிறைந்திருப்பதும், நான்முகன் முதலில் படைத்த பிரமாபுரம் என்னும் சீர்காழியில் தோன்றி மறைஞானம் பெற்ற முனிவனாகிய ஞானசம்பந்தன் வினைப்பயனால் தாமே வந்துறும் கோளும் நாளும் பிறவும் அடியவரை வந்து துன்புறுத்தாதவாறு பாடிய சொல்லால் இயன்றவரை இப்பதிகத்தை ஓதும் அடியவர்கள் வானுலகில் அரசு புரிவர். இது நமது ஆணை.

திருஞானசம்பந்தர் திருமறைக்காடு நீங்கினார். அடியவர் புடைசூழச் சிவிகையில் ஏறி புறப்பட்டார். மதுரையின் எல்லையை அடைந்தார். சம்பந்தர் வருகையை அறிந்த குலச்சிறையார் ஊர் எல்லையில் அவரை வரவேற்றார். மங்கையர்க்கரசியார் ஞானசம்பந்தரை வரவேற்க தன்னை அனுப்பியதாகக் கூறினார்.

ஆலவாய் திருக்கோவிலை அடைந்தவர் **'நீலமா மிடற்று'** என்னும் பதிகம் பாடினார்.

நீல மாமிடற்று
ஆல வாயினான்
பாலது ஆயினார்
ஞாலம் ஆள்வரே. 1

விளக்கம்:

நீலமணி போன்ற கண்டம் கொண்டு ஆலவாயில் எழுந்தருளி யுள்ள இறைவரது அருகிருப்போர், உலகாளும் வாய்ப்பைப் பெறுவர்.

ஞாலம் ஏழுமாம்
ஆல வாயிலார்

சீலமே சொலீர்
காலன் வீடவே. 2

விளக்கம்:

நமபயம் நீங்கிட, உலகம் ஏழுமாய் விளங்கும் ஆலவாய் இறைவனின் குணச் சிறப்புகளைப் புகழ்ந்து பேசுங்கள்.

ஆல நீழலார்
ஆல வாயினார்
கால காலனார்
பாலது ஆமினே. 3

விளக்கம்:

ஆலவாய் தலத்தில் எழுந்தருளியுள்ளவர் கல்லால மரநிழலில் இருப்பவர் ஆவார். அவர் இயமனின் காலத்தையும் குறிப்பவர். அவரை அணுகி இருங்கள்.

அந்தம் இல்புகழ்
எந்தை ஆலவாய்
பந்தி ஆர்கழல்
சிந்தை செய்மினே 4

விளக்கம்:

எல்லையில்லா புகழுடைய எம் தந்தையாகிய ஆலவாய் தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனின் பெருமையை சிந்திப்பீராக!

ஆடல் ஏற்றினான்
கூடல் ஆலவாய்

பாடி யேமனம்
நாடி வாழ்மினே 5

விளக்கம்:

கூடல், ஆலவாய் என்றெல்லாம் பெயர் பெற்ற மதுரை நகரில் எழுந்தருளியுள்ள இறைவன் இடபம் மீது ஏறி வருபவன். அவன் புகழையே மனம் விரும்பி பாடி வாழ்வீராக!

அண்ணல் ஆலவாய்
நண்ணி னான்தன்னை
எண்ணியே தொழத்
திண்ணம் இன்பமே 6

விளக்கம்:

ஆலவாய்த் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள, தலைவனான சிவபெருமானை தியானித்து வணங்குவோர்க்கு இன்பம் உறுதியாகும்.

அம்பொன் ஆலவாய்
நம்பனார் கழல்
நம்பி வாழ்பவர்
துன்பம் வீடுமே. 7

விளக்கம்:

அழகிய பொன்மயமான ஆலவாய்த் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனது திருவடியை நம்பி வாழ்பவரது துன்பம் அழியும்.

அரக்க னார்வலி
நெருக்கன் ஆலவாய்

உரைக்கு முள்ளத்தார்க்கு
இரக்கம் உண்மையே. 8

விளக்கம்:

இராவணனது வலிமையை நசுக்கிய எம்பெருமான், ஆலவாயின் பெருமையை எடுத்துரைக்கும் மனம் உடையவர்க்கு அப்பெருமானின் அருள் கிடைக்கும்.

அருவன் ஆலவாய்
மருவி னான்தனை
இருவர் ஏத்தி நின்று
உருவம் ஓங்குமே. 9

விளக்கம்:

ஆலவாய்த் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் உருவம் அற்றவர். திருமாலும் பிரமனும் போற்றி நின்றபோது நெருப்புருவாய் ஓங்கி நின்றவர்.

ஆரம் நாகமாம்
சீரன் ஆலவாய்த்
தேர மண்செற்ற
வீர னென்பரே. 10

விளக்கம்:

ஆலவாய்த் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் அணிவது பாம்பினை. பௌத்தம், சமணம் ஆகிய நெறிகளை அழித்த ஞான வீரர் என்பார்கள்.

அடிகள் ஆலவாய்ப்
படிகொள் சம்பந்தன்

முடிவில் இன்தமிழ்
செடிகள் நீக்குமே. 11

விளக்கம்:

ஆலவாய்த் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனின் திருவருளில் தோய்ந்த ஞானசம்பந்தன் பாடிய எல்லையில்லா இன் தமிழ்ப் பாடல்கள், வலிய வினைகளை நீக்க உதவிடும்.

அப்பதிகம் முழுவதும் தரப்படுகிறது. மங்கையர்க்கரசியாரும் ஞானசம்பந்தரை வரவேற்றார். திருமடம் ஒன்றில் அடியார்களுடன் தங்கினார். அவர்கள் வருகையை அறிந்த சமணர், ஞானசம்பந்தர் தூங்குகின்ற மடத்திற்கு தீ வைத்தனர். "இத்தீ பையவே சென்று பாண்டியனைப் பற்றட்டும்" என்றார் சம்பந்தர்.

பாண்டிய மன்னனுக்கு வெப்ப நோய் பற்றியது. மருத்துவர் களாலும் சமண முனிவர்களாலும் நோயைக் குணப்படுத்த முடியவில்லை.

குலச்சிறையாரும் அரசியாரும் ஞானசம்பந்தரைச் சந்தித்து மன்னனின் வெப்பு நோய் தீர கருணை செய்ய வேண்டினார்கள். சம்பந்தர் அரண்மனையை அடைந்தார். சமணர்கள் அச்சம் அடைந்தார்கள். சமணர்கள் மீண்டும் அரசரின் உடலில் இடப்பாகத்தில் பற்றிய நோயைக் குணப்படுத்த பீலி கொண்டு உடலைத் தடவினர். பயன் இல்லை. **ஞானசம்பந்தர் "மந்திரமாவது நீறு" என்னும் திருநீற்றுப் பதிகத்தைப் பாடினார்.**

திருநீற்றை உடம்பில் அணியும் போது இப்பதிகத்தை ஓதலாம். அனைத்து நோய்களும் பயம், கெட்ட கனவுகள் நீங்கும். மேலும் உடல்நலமின்றி இருக்கும் ஒருவருக்கு இப்பதிகத்தை ஓதி பின் திருநீறு தந்தால் அவர் விரைவில் குணம் அடைவர் என்பது திண்ணம்.

திருநீற்றுப் பதிகம்

இறைவன் : வேதகிரீஸ்வரர்

இறைவி : திரிபுரசுந்தரி

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர்வாய் உமைபங்கன் திரு ஆலவாயான் திருநீறே 1

விளக்கம்:

திருநீறு மந்திரச் சொல் போன்றது. அச்சம் நீக்கி வேண்டியவற்றைத் தருவது. வானவர்களும் திருநீற்றை அணிகின்றனர். வானவர்களைவிட மேலானது திருநீறு. அழகினையும் பொலிவையும் தருவது. துதிக்கப்படும் பொருளாக உள்ளது. உமையொரு பாகனான ஆலவாய் அண்ணல் சிவபெருமானின் திருநீறு இத்தகையதாகும்.

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதம் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப்புனல் வயல் சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே 2

விளக்கம்:

வேதத்தால் போற்றப்படுவது நீறு. உலக வாழ்வில் வரும் நோய்கள் மற்றும் மனதால் ஏற்படும் துயரங்கள் இவற்றை நீக்குவது திருநீறு. நல்லறிவைத் தருவது, அறியாமையால் ஏற்படும் இழிவுகளை நீக்குவதும் திருநீறு. ஓதத் தகுந்த பெருமையும், உண்மைப் பொருளாய் எக்காலத்திலும் விளங்குவதும் திருநீறு. இது திருஆலவாய் அண்ணலான சிவபெருமானுக்கு உரிய திருநீறு.

முக்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே 3

விளக்கம்:

திருநீறு வீடுபேற்றைத் தருவது. முனிவர்கள் அணியும் பெருமையுடையது. என்றென்றும் நன்மை தருவது. இப்படிப்பட்ட திருநீற்றின் மகிமை அறிந்து சிவனடியார்கள் போற்றுகின்றனர். திருநீறு மண்மீது வாழும் உயிர்களுக்கு சிவபக்தியைத் தரும். அதனைப் போற்றி வாழ்வதால் இனிமை கிட்டும். எட்டுவகை சித்திகளும் தரும். அது ஆலவாய் அண்ணலாகிய சிவபெருமானுக்கு உரிய திருநீறே ஆகும்.

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணம் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணம் தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே 4

விளக்கம்:

திருநீறணிந்தவர்களைக் காணும் அடியார்கள் இனிமை கொள்வர். திருநீற்றை அணிபவர்களுக்கு வல்லமை கிடைக்கும்.

இறப்பினைத் தடுத்து நல்லறிவைத் தருவது நீறு. மண்ணுயிர்களுக்கு உயர்ந்த ஆற்றலைத் தரும் திருநீறு. இது ஆலவாயன் அண்ணலாகிய சிவபெருமான் திருநீறே ஆகும்.

பூச இனியது நீறு புண்ணியம் ஆவது நீறு
பேச இனியது நீறு பெருந் தவத்தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தமமாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திரு ஆலவாயான் திருநீறே 5

விளக்கம்:

திருநீற்றை உடம்பில் பூசினால் இனிமை சேர்க்கும். புண்ணியம் சேரும். திருநீற்றின் பெருமை பேச இனியது. உலக பந்தத்தால் உண்டாகும் ஆசைகளைப் போக்க வல்லது திருநீறு. அணிபவர்களை உயர்ந்த நிலைக்குச் செல்ல உதவும். எல்லா வற்றிற்கும் முடிவாகத் திகழ்வது திருநீறு. தேசமெல்லாம் புகழ்ந்து போற்றும் சிறப்புடையது. இது ஆலவாயான் அண்ணலாகிய சிவபெருமானுக்கு உரிய திருநீறே.

அருத்தமமாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம மாவது நீறு புண்ணியர் பூசும் வெண்நீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே 6

விளக்கம்:

பொன் போன்ற பெரிய செல்வமாக விளங்குவது திருநீறு. அவலங்களைப் போக்குவது. மனதை வருத்தும் துன்பங்களைப் போக்குவது. நெஞ்சில் ஏற்படும் கனலைத் தணிப்பது. எந்நிலையிலும் சிறப்பு தருவது. புண்ணியர்கள் விரும்பிப் பூசுவது, பொலிவு தருவது

திருநீறு. செல்வம் மிக்க மாளிகைகள் சூழ்ந்த திருஆலவாயில் வீற்றிருக்கும் சிவனார்க்கு உரிய சிறப்பினை உடையது திருநீறே.

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப்படுவது நீறு பாக்கியம் ஆவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம்அது ஆவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே 7

விளக்கம்:

முப்புரத்தை எரித்து சாம்பலாக்கியது திருநீறு. இம்மை, மறுமை இரண்டிலும் உயிர்களுக்கு துணையாய் வருவது திருநீறு. உயர்ந்த பொருளாகவும் பயின்று நுகரும் பொருளாக உடையது நீறு. பாக்கியமாக இருக்கும் சிறப்புடையது. மாயையின் வசப்பட்டு, சோர்வினால் தடைப்படும் உறக்க உணர்வைத் தடுத்து, புத்துணர்ச்சி தந்து தூய்மைப்படுத்துவது நீறு. அத்தகைய திருநீறு கூர்மையான தவப்படையை உடைய ஆலவாய் அன்னலாகிய சிவபெருமானுக்கு உரிய திருநீறே.

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவணம் ஆவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவணம் ஆவது நீறு தத்துவம் ஆவது நீறு
அரா வணங்கும் திருமேனி ஆலவாயான் திருநீறே 8

விளக்கம்:

இராவணன் அணிந்த திருநீறு அவனுக்கு பெருமை சேர்த்தது. எண்ணத்தால் தகுதியாக்கிப் போற்றி வழிபட உரியது நீறு. பராபரனைப் போல துதிக்கப்படும் பொருளாவது நீறு. பாவத்தைப் போக்குவது நீறு. தராவனமாக இருப்பதும், தத்துவமாக விளங்கி நிற்பதும் நீறு. அரவம் அணைந்து விளங்கும் திருமேனியராகிய ஆலவாய் அண்ணல் சிவபெருமானுக்கு உரிய திருநீறே.

மாலொடு அயனறி யாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலமதுண்ட மிடற்று ஆலவாயான் திருநீறே 9

விளக்கம்:

திருமாலும் பிரம்மனும் அறிவதற்கு அரியதாகியவாறு உள்ளது திருநீறு. தேவர்கள் தம் மேனியில் பூசி மகிழ்வது நீறு. நோய்களை நீக்கி இன்பத்தை தரக்கூடியது நீறு. அத்தகைய சிறப்பு வாய்ந்தது. நஞ்சினை உண்ட கண்டத்தை உடைய ஆலவாய் அண்ணலாகிய சிவபெருமானுக்கு உரிய திருநீறு ஆகும்.

குண்டிகைக் கையர்களொடு சாக்கியர் கூட்டமும்கூட
கண் திகைப்பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்திசைப் பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத் தவர் பணிந்தேத்தும் ஆலவாயான் திருநீறே 10

விளக்கம்:

சமணர்களும் சாக்கியர்களும் திகைக்கும் வண்ணம் காட்சி தருவது நீறு. நெஞ்சில் பதித்த போதும் இனிமையைத் தரவல்லது நீறு. தெய்வீகம் உடையது. எண்திசையில் உள்ள சிவமாகிய மெய்ப்பொருளைச் சரணடைந்த பெருமக்களும் ஏத்தும் திருநீறு. அது தேவர்கள் பணிந்தேத்தும் திருஆலவாய் அண்ணலாகிய சிவபெருமானுக்கு உரிய திருநீறே ஆகும்.

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னன் உடல் உற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே 11

விளக்கம்:

வலிமை மிக்க இடப வாகனத்தில் ஏறிவரும் ஆலவாய் அண்ணலாகிய சிவனாரின் திருநீற்றைப் போற்றித் துதித்த ஞானசம்பந்தர் கூன்பாண்டியனின் பிணி யாவும் தீரும் வண்ணம் சாற்றிய பத்து பாடல்களை ஓதவல்லவர்கள் நல்லவர்களாகத் திகழ்வார்கள்.

அனல் வாதத்தை பச்சைப் பதிகம் பாடியும், புனல் வாதத் தாலும் சமணர்களை வென்றார்.

பாண்டிய மன்னனையும், பாண்டிய நாட்டு மக்களையும் சைவம் தழுவச் செய்தார். பாண்டிய நாட்டில் உள்ள தலங்களைத் தரிசித்தார். சோழ நாடு திரும்பினார். பல தலங்களையும் தரிசித்த பின் **திருப்பூந்துருத்தி** அடைந்தார் அப்பர் சுவாமிகள். இவரது சிவிகையைச் சுமந்து வந்ததை அறிந்து, உடனே கீழிறங்கி இருவரும் அளவளாவி இருந்தனர். **திருஒத்தூரில்** ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கி காய்க்கச் செய்தார்.

எலும்பை பெண்ணுருவாக்குதல்:

மயிலாப்பூர் சிவநேசச் செட்டியாரின் மகள் பூம்பாவை பாம்பு தீண்டி இறந்தாள். சிவநேசர் அவளது எலும்பை ஒரு குடத்தில் சேமித்து வைத்தார். அதனை அறிந்த ஞானசம்பந்தர் திருக்கோயில் முன் அக்குடத்தைக் கொண்டு வரச் செய்து **மட்டிட்ட புன்னை** என்னும் பதிகம் பாடி உயிர்ப்பித்தார்.

மட்டிட்ட புன்னைஅம் கானல் மடமயிலைக்
கட்டிட்டம் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

விளக்கம்:

பூம்பாவையே! தேன் நிறைந்த புன்னையின் மலர்கள் பூத்துக் குலுங்கும் கடற்கரைச் சோலையில் இளமயில்கள் நிறைந்து விளங்கும் மயிலாப்பூரில் உள்ள கபாலீச்சுரம் என்னும் கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் தம்மோடு இரண்டறக் கலந்திருக்கும் தகுதியுடைய தன் அடியார்களுக்கு மாகேசுவர பூசையின்போது, உணவு பரிமாறுவதைக் காணாமல் போவாயோ!

சோதியிற் கலத்தல்:

பெற்றோர் விருப்பத்திற்கேற்ப வேத நெறியில் நின்ற திருநல்லூர்பெருமணம் என்ற ஊரைச் சார்ந்த நம்பாண்டார் நம்பிகளின் திருமகளை மணமகளாக ஏற்று இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே, இவள் தன்னோடும் "அந்தமில் சிவன் தாள் சேர்வேன்" என்ற கருத்தமையக் **"கல்லூர்ப் பெருமணம்"** என்ற பதிகம் பாடினார். பெருமானது அசரீரியின்படி மனைவியோடும் உடன் வந்தாரோடும் வைகாசி மூல நன்னாளில் அங்கு தோன்றிய சோதியில் கலந்தார். **அந்தப் பதிகம் முழுவதும் தரப்படுகின்றது.**

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமண மேய்நம் பானே. 1

விளக்கம்:

அடியார்கள் சூழ, திருநல்லூர் என்னும் திருத்தலத்தில் பெரும்மணம் என்னும் கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமானே! மணம் மிக்க பொருள்கள் பொருந்திய பாடல்களாகிய மலர்களைச் சூடும் பெருமானே! அம்மிக்கல் மிதித்துச் செய்யும் சடங்குகள் பலவுடைய திரும்மணம் எனக்கு வேண்டாம். கழுமலம் முதலிய

திருத்தலங்களுக்கென்று நான் பாடிய திருப்பதிகங்கள் வழியே எனது விருப்பம் மெய்யாகத் தெரியவில்லையா?

தருமண லோதஞ்சேர் தண்கடல் நித்திலம்
பருமண லாக்கொண்டு பாவைநல் லார்கள்
வருமணங் கூட்டி மணஞ்செயும் நல்லூர்ப்
பெருமணத் தான்பெண்ணோர் பாகங்கொண் டானே. 2

விளக்கம்:

கடலலைகள் அழிக்காமல் வைத்துள்ள இயற்கைக் கரையில் உள்ள மணலோடு பதுமை போன்ற சிறுமியர் அலைகள் வீசிக்குவித்த, குளிர்ச்சி மிக்க, கடலில் விளைந்த முத்துக்களையே, பருத்த மணலாகக்கொண்டு, அழகிய சிறுமிகள் பாவைக்குத் திருமணம் செய்து விளையாடும் சிறப்புடையது நல்லூர்ப் பெருமணம். அத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் உமாதேவியை இடப்பாகத்தில் கொண்டருளினான்.

அன்புறு சிந்தைய ராகி அடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமணம் மேவிநின்
றின்புறும் எந்தை இணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே. 3

விளக்கம்:

அன்பு நிறைந்த சிந்தை உடைய அடியார்கள், நல்லூர்ப் பெருமணம் என்னும் தலத்திற்கு வந்து, இன்பம் உடைய எம் தந்தையாகிய சிவபெருமானின் இணையான திருவடிகளைப் போற்றிப் புகழ்வார்கள். ஆதலால் அவர்களுக்கு துன்பம் நேராது. அவர்கள் நாளும் அடியார்களுக்கு சிவத்தொண்டு செய்வார்கள்.

வல்லியந் தோலுடை யார்ப்பது போர்ப்பது
கொல்லியல் வேழத் துரிவிரி கோவணம்
நல்லிய லார்தொழு நல்லூர்ப் பெருமணம்
புல்கிய வாழ்க்கையெம் புண்ணிய னார்க்கே. 4

விளக்கம்:

எம்பெருமான் புலித்தோலை ஆடையாக உடுத்தி, கொல்லும் தன்மை உடைய யானையின் தோலைப் போர்வையாகப் போர்த்தி விரிந்த கோவணத்தை அணிந்தவர். அவர் நல்ல இயல்புடைய அடியார்கள் வந்து வணங்கும்படி திருநல்லூர் என்னும் திருத்தலத்தில் பெருமணம் என்னும் திருக்கோயிலில் விரும்பி வீற்றிருந்து வாழ்பவர். அவரே எமது புண்ணியர் ஆவார்.

ஏறுகந் தீரிடு காட்டெரி யாடிவெண்
ணீறுகந் தீர்நிரை யார்விரி தேன்கொன்றை
நாறுகந் தீர்திரு நல்லூர்ப் பெருமணம்
வேறுகந் தீருமை கூறுகந் தீரே. 5

விளக்கம்:

இறைவனே நீர் இடபத்தை விரும்பி வாகனமாகக் கொண்டீர். நெருப்பு ஏந்தி சுடுகாட்டில் ஆடுகின்றீர். வெண்ணீற்றை விரும்பி உடல் முழுக்கப் பூசியுள்ளீர். வரிசையாக அழகுடன் விளங்கும் தேன் துளித்த நறுமணம் கமழும் கொன்றை மாலையை அறிந்துள்ளீர். திருநல்லூர்ப் பெருமணம் என்னும் ஊரில் பெருமணம் என்னும் திருக்கோயிலில் விரும்பி வீற்றிருக்கும் நீர் உமாதேவியை ஒரு பாகத்தில் கொண்டுள்ளீர்.

சிட்டப்பட் டார்க்கெளி யான்செங்கண் வேட்டுவப்
பட்டங்கட் டுஞ்சென்னி யான்பதி யாவது
நட்டக்கொட் டாட்டறா நல்லூர்ப் பெருமணத்
திட்டப்பட் டாலொத்தி ராலெம்பி ரானீரே. 6

விளக்கம்:

நியமம் தவறாமல் வழிபடுபவர்களுக்கு எளிமையானவர். வேடுவக் கோலத்தில் நெற்றிப்பட்டம் கட்டிய தலையினை உடையவர். அவர் எழுந்தருளியுள்ள தலமானது, நாட்டியங்களின் கொட்டு வாத்திய ஒலியும், திருவிழாக் கொண்டாட்டங்களின் ஒலியும் ஓயாத திருநல்லூர்ப் பெருமணம் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள தலைவரே, நீவிர் ஏனைய தலங்களையும் விரும்புபவர் போலக் காணப்படுகிறீர்.

மேகத்த கண்டன்எண் தோளன்வெண் ணீற்றுமை
பாகத்தன் பாய்புலித் தோலொடு பந்தித்த
நாகத்தன் நல்லூர்ப் பெருமணத் தான்நல்ல
போகத்தன் யோகத்தை யேபுரிந் தானே. 7

விளக்கம்:

மழை மேகம் போன்றவன், நீலகண்டத்தன், திருத்தோள்கள் எட்டு உடையவன், உமையவளைத் தன் உடலில் ஒரு பாகத்தில் கொண்டவன், பாயும் புலியின் தோலினை ஆடையாகக் கொண்டவன். அதன்மேல் பாம்பைக் கச்சையாகக் கட்டியவன். அப்பெருமான் திருநல்லூர்த் திருத்தலத்தில், பெருமணம் என்னும் திருக்கோயிலில் உயிர்கள் இன்பம் துய்க்கவேண்டி, போகியாக உள்ளான். மற்றும் உயிர்கள் நற்றவம் செய்து திருவடிப்பேறு எய்தல் வேண்டி யோகியாகவும் இருப்பான்.

தக்கிருந் தீரன்று தாளால் அரக்கனை
உக்கிருந் தொல்க உயர்வரைக் கீழிட்டு
நக்கிருந் தீரின்று நல்லூர்ப் பெருமணம்
புக்கிருந் தீரெமைப் போக்கரு ளீரே. 8

விளக்கம்:

நல்லூர்ப் பெருமணம் என்னும் தலத்தில் எழுந்தருளி, எப்போதும் த்குதி உடையவராக இருக்கும் தலைவா! அன்று கயிலை மலையைப் பெயர்க்க முயன்ற அரக்கன் இராவணனின் ஆணவம் அடங்க மலையின் கீழ் நசுக்கிச் சிரித்து மகிழ்ந்தீரே! உமது திருவடியில் வந்துசேர எமக்கு அருள்புரிவீராக.

ஏலுந்தண் டாமரை யானும் இயல்புடை
மாலுந்தம் மாண்பறி கின்றிலர் மாமறை
நாலுந்தஞ் பாட்டென்பர் நல்லூர்ப் பெருமணம்
போலுந்தங் கோயில் புரிசடை யார்க்கே. 9

விளக்கம்:

குளிர்ச்சி பொருந்திய தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் பொய் பொருந்திய பிரமனும், திருமாலும் சிவபெருமானின் பெருமையை அறியவில்லை. இறைவனின் அடிமுடி தேட முயன்றும் காணமுடியவில்லை. நான்கு வேதங்களையும் ஆக்கி, தானே அவ்வேதங்களின் உட்பொருளாக விளங்கும் ஈசன் திருநல்லூர் பெருமணம் தலத்தில் கோவில் கொண்டு எழுந்தருளி இருப்பவர்.

ஆதர் அமணொடு சாக்கியர் தாஞ்சொல்லும்
பேதைமை கேட்டுப் பிணக்குறு வீர்வம்மின்
நாதனை நல்லூர்ப் பெருமணம் மேவிய
வேதன் தாள்தொழ வீடெளி தாமே. 10

விளக்கம்:

இறைவனை அறியும் அறிவில்லாத சமணர்களும் பௌத்தர்களும் கூறும் பொய்யுரைகள் கேட்டு சிவநெறியை மறந்து நிற்கும் மாறுபடும் கொள்கையீர், வாருங்கள்! அனைத்துயிர்க்கும் தலைவனான சிவபெருமான் திருநல்லூர்ப் பெருமணம் என்னும் திருத்தலத்தில் கோயில் கொண்டருளியிருக்கின்றார். அவரது திருவடிகளை வழிபட்டு வீடுபேறு பெறுதல் எளிதாகும்.

நறும்பொழிற் காழியுள் ஞானசம் பந்தன்
பெறும்பத நல்லூர்ப் பெருமணத் தானை
உறும்பொரு ளாற்சொன்ன வொண்டமிழ் வல்லார்க்
கறும்பழி பாவம் அவலம் இலரே. 11

விளக்கம்:

நறுமணம் கமழும் சோலைகள் சூழ்ந்த சீர்காழியில் அவதரித்த திருஞானசம்பந்தன் பெறுதற்கரிய முக்தி பேற்றை அருளும், திருநல்லூர்ப் பெருமணத்து இறைவனை, அவனது திருவடிகளில் கலக்கும் கருத்து அமையச் சொன்ன இத்தமிழ்ப் பாடல்களை, இத்திருப்பதிகத்தைப் பக்தியுடன் ஓதவல்லார்க்கு பழி பாவம் நீங்கும்; துன்பங்கள் இல்லாதவராவர்.

திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசர் பாடிய தேவாரப் பாடல்கள் :

நான்காம் திருமுறை	1070
ஐந்தாம் திருமுறை	1015
ஆறாம் திருமுறை	981
	3066

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வேளாண் மரபில் குறுக்கையர் குடியில் அவதரித்தார். தந்தையார் **புகழனார்,** தாயார் **மாதினியார்.** தமக்கையார் **திலகவதியார். அப்பர், வாகீசர், சொல்லரசர், நாவரசர், தாண்டக வேந்தர்** முதலிய பெயர்களால் வழங்கப்படுபவர் இவர். இவரின் இளமை இயற்பெயர் **'மருள்நீக்கியார்'.** உரிய வயதில் பள்ளியில் சேர்ந்து எல்லாக் கலைகளையும் திறம்படக் கற்றுத் தேர்ந்தார்.

திலகவதியாருக்கு பன்னிரண்டு வயது தொடங்கவும் மகளுக்கு திருமணம் செய்ய பெற்றோர் முடிவெடுத்தனர். **கலிப்பகையார்** என்பவர் திலகவதியாரைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினார். அவரின் நற்பண்புகளை அறிந்து பெற்றோரும் இசைவளித்தனர். திருமணம் நிகழ்வதற்குள் மன்னன் கலிப்பகையாரை சேனைத் தலைவராக்கி படைகளுடன் போருக்கு அனுப்பினான். போர்


திருநாவுக்கரசர்

நீண்டநாள் நடைபெற்றது. அந்த இடைக்காலத்தில் புகழனார் இறைவனடி சேர்ந்தார். மாதினியாரும் கணவருடன் விண்ணுலகு சென்றார். போர்க்களத்தில் கலிப்பகையாரும் இறைவனடி சேர்ந்தார்.

திலகவதியாரும் உயிரை விடத் துணிந்தார். மருள்நீக்கியார் தமக்கையின் திருவடி வீழ்ந்து அழுது புலம்பினார். "பெற்றோரை இழந்து நானும் உங்களுக்காக உயிரோடு இருக்கிறேன். நீர் பிரிந்தால் நானும் உயிர் துறப்பேன்" என்று உறுதி மொழிந்தார்.

தம்பிக்காக தன் முடிவை மாற்றிக் கொண்டார் திலகவதியார். மருள்நீக்கியார் துயர் நீங்கி மகிழ்ச்சி அடைந்தார். மருள்நீக்கியாரை வளர்க்கும் பணியில் ஈடுபட்டார்.

மருள்நீக்கியார் உலகியல் அறிவு பெற்றார். உலகின் நிலையாமையை எண்ணி அறப்பணி ஆற்றினார். சமய நன்னெறியினை அறிய எண்ணினார். சிவபெருமான் அருள் கிட்டாததால் 'கொல்லாமை' என்னும் போர்வையில் உலவிய சமண சமயத்தைச் சார்ந்திட எண்ணினார்.

தருமசேனராதல்: அக்காலத்தில் சமணம் மேலோங்கி இருந்தது. **மகேந்திரவர்மன்** ஆதரவில் சமண சமயத்தைப் பரப்பும் முயற்சியில் சமண முனிவர்கள் ஈடுபட்டனர். மருள்நீக்கியாரும் அம்மத நூல்களைக் கற்று வல்லவரானார். அதனால் சமணர்கள் மகிழ்ச்சியடைந்து அவரை சமயத் தலைவராக்கினர். **'தருமசேனர்'** என்னும் சிறப்புப் பெயரும் சூட்டினர்.

சூலைநோய் தந்து இறைவன் ஆட்கொள்ளல்:

திலகவதியார் தம்பி வேறு சமயம் சார்ந்ததை அறிந்து மனம் வருந்தினார். **திருவதிகை வீரட்டானம்** அடைந்தார். சிவசின்னம் அணிந்து பல்வகை திருப்பணிகளை மேற்கொண்டார். அதிகைப் பெருமானிடம் தம்பியை புறசமயத்தினரிடமிருந்து மீட்டருள

வேண்டினார். பெருமான் திலகவதியின் கனவில் தோன்றி "உன் தம்பி முன்னரே முனிவராகி என்னை அடைய தவம் செய்தவன். அவனை சூலை நோய் தந்து ஆட்கொள்வோம்" என்று கூறி மறைந்தார்.

அவ்வண்ணமே சூலை நோய் தருமசேனர் வயிற்றிடைச் சென்று பற்றி துன்பம் தந்தது. சமணர்கள் பல்வேறு வகையில் நோயைத் தீர்க்க முயன்று தோற்றனர். சமணர் எல்லாம் கைவிட்ட செய்தி அறிந்தார் திலகவதியார். தம்பி அழைத்த செய்தி அறிந்தும் சமணர்களின் இருப்பிடம் வர மறுத்துவிட்டார். தமக்கையிடம் செல்ல முடிவு செய்த தருமசேனர் திலகவதியாரை அடைந்து திருவடி வீழ்ந்தார். உய்யும் வழிகாட்டி அருள வேண்டினார்.

திருநாவுக்கரசராதல்:

திலகவதியார் தம்பியிடம் தன்னைச் சார்ந்தவர்களைக் காக்கும் சிவபெருமானை வணங்கி பணி செய்ய பணித்தார். மருள்நீக்கியாரும் திருவைந்தெழுத்தோதி, திலகவதியார் தந்த திருநீறு அணிந்து புறப்பட்டார். திருக்கோயிலினுள் சென்றார். நிலமிசை வீழ்ந்து வணங்கினார். தமிழ்மாலை சாத்தும் உணர்வு வந்தது. சூலை நோயும் மாயையும் நீங்கும் பொருட்டு **"கூற்றாயினவாறு"** என்று தொடங்கும் திருப்பதிகம் அருளச் செய்தார்.

இறைவன் : வீரட்டேசுவரர் இறைவி : திரிபுரசுந்தரி

தீராத வயிற்றுவலி மற்றும் குடல் தொடர்பான நோய்களும் காமாலை நோயும் தீர இப்பதிகத்தை பாராயணம் செய்யலாம்.

கூற்று ஆயினவாறு விலக்ககிலீர்
　　கொடுமை பலசெய்தன நான்அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
　　பிரியாது வணங்குவன் எப்பொழுதும்

தோற்றாது என் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே. 1

விளக்கம்:

கெடில நதிக்கரையில் உள்ள திருவதிகை வீரட்டானத்தில் குடிகொண்ட சிவபெருமானே, கூற்றுவன்போல் இந்த சூலை நோய் என்னை வருத்துகின்றது. இந்த நோயினை விலக்காமல் இருக்கின்றீர்களே. உமது பெருமையை அறியாமல் நான் பல கொடுமைகள் செய்துள்ளேன். என்னை அடிமையாக ஏற்றுக் கொண்ட இறைவனே, இன்றிலிருந்து நான் உம்மை எப்போதும் இரவும் பகலும் பிரியாமல் உமது நினைவினின்று பிரியாமல் வணங்குவேன். வெளியே தோன்றாது, எப்படி வந்ததென்று எவராலும் உணரமுடியாத இந்த சூலை நோய் எனது வயிற்றின் உள்ளே புகுந்து எனது குடலினை சுருட்டி, மற்ற உறுப்புக்களையும் முடக்கியுள்ளது. இந்த சூலை நோய் தரும் துன்பத்தை என்னால் பொறுக்க முடியவில்லை.

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாது ஒருபோதும் இருந்துஅறியேன்
வஞ்சம் இது ஒப்பது கண்டு அறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சு ஆகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்தும்இடீர்
அஞ்சேலும் என்னீர் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே. 2

விளக்கம்:

திருவதிகை வீரட்டானம் என்னும் திருக்கோயில் குடிகொண்ட என் அப்பனே, என் மனம் முழுவதையும் நீவிர் வந்து தங்கும் இடமாக மாற்றி வைத்துள்ளேன். இதுபோன்ற வஞ்சம் மிக்க கொடிய நோயை நான் அறிந்ததில்லை. இனி ஒரு பொழுதும் உம்மை நினையாமல் இருப்பேன் அல்லேன். வயிற்றோடும் சுருட்டி, மடக்கி, வெடுக்கென்று இழுத்து விடம்போல் என்னை வருத்துகிறது. இந்நோயை விரட்டவோ, மறைக்கவோ நீவிர் அருளவில்லை. "அஞ்சேல்" என்றும் கூறவில்லை.

பணிந்தாரென பாவங்கள் பற்ற வல்லீர்
படுவெண்தலையில் பலி கொண்டு உழல்வீர்
துணிந்தே உமக்கு ஆட்செய்து வாழல் உற்றால்
சுடுகின்றது சூலை தவிர்த்து அருளீர்
பிணிந்தார் பொடி கொண்டு மெய்பூச வல்லீர்
பெற்றம் ஏற்று உகந்தீர் சுற்றும் வெண்தலை கொண்டு
அணிந்தீர் அடிகேள் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே. 3

விளக்கம்:

ஊழி முடிவில் இறந்தவர்களின் உடல் சாம்பலை உடலில் பூசிக்கொள்பவரே, விரும்பி இடப வாகனத்தில் எங்கும் செல்பவரே. உமது கழுத்தினில் இறந்தவர்களின் தலைகளை மாலையாகக் கொண்டிருப்பவரே. உம்மை வழிபடும் அடியவர்களின் பாவங்களை நீக்கும் வல்லமை உடையவரே. கிள்ளப்பட்டதும், உலர்ந்து வெண்மை நிறத்துடன் உள்ள பிரம்மனின் மண்டையோட்டை திருவோடாகக் கொண்டு பிச்சை ஏற்றுத் திரியும் பெருமானே, நான் சைவநெறி சார்ந்ததற்காக சமணர்கள் சூழ்ச்சி செய்யலாம். ஆனால் நான் மிகுந்த துணிச்சலுடன் உமக்கு அடிமையாக வாழ்வது என்று

முடிவு செய்தேன். ஆனால் கொடுமையான சூலை நோய் என்னைச் சுடுகின்றதே. கெடில நதிக்கரையில் அதிகை வீரட்டானத்தில் உறையும் சிவபெருமானே, கொடிய சூலை நோயினை நீர் தவிர்த்து அருள வேண்டும்.

முன்னம் அடியேன் அறியாமையினான்
முனிந்து என்னை நலிந்து முடக்கியிடப்
பின்னை அடியேன் உமக்கு ஆளும் பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்து அருளீர்
தன்னை அடைந்தார் வினை தீர்ப்பதன்றோ
தலை ஆயவர் தம்கடன் ஆவது தான்
அன்னம் நடையார் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே. 4

விளக்கம்:

அன்னம் போன்ற நடை அழகுடைய மகளிர் நிறைந்த அதிகை வீரட்டானத்து உறை பெருமானே, முன்னர் அடியேன் உம்மை அறிந்து உம் தொண்டில் ஈடுபடாமல் இருந்தேன். நீர் வெகுண்டமையால் சூலைநோய் என்னை வருத்திச் செயல்பட முடியாமல் செய்தது. அதன் துன்பத்திற்கு ஆளாகிய நான் உமக்கு அடிமையாகி விட்டேன். அடியேனை வருத்தும் சூலை நோயைத் தவிர்த்து அருள வேண்டும் மேலானவர்களின் கடமை தம்மைச் சரணடைந்தவர்களின் வினையைப் போக்குவது அன்றோ!

காத்து ஆள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரை நின்றவர் கண்டுகொள் என்று சொல்லி
நீத்து ஆய கயம் புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை ஒன்று அறியேன்

வார்த்தை இது ஒப்பது கேட்டு அறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார் புனல் ஆர் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே. 5

விளக்கம்:

பெருத்த ஆரவாரம் செய்யும் நீர்நிலைகளை உடைய திருவதிகையில் கெடில நதிக்கரையில் உள்ள வீரட்டானத்து உறையும் பெருமானே, கொடிய சூலைநோய் அடியேனின் குடரினைத் துடக்கி, உடல் உறுப்புக்களைச் செயல் இழக்கச் செய்து விட்டது. சமண மதம் சார்ந்தேன். குளக்கரையில் இருந்த காவலர்கள் என்னை வழி நடத்தவில்லை. குளத்தில் மூழ்கும் நிலையில், மீண்டு வரும் வழி அறியேன். நீர்தான் அருள்புரிந்து எனக்கு மீளும் வழி காட்டி உதவ வேண்டும்.

சலம் பூவொடு தூபம் மறந்து அறியேன்
தமிழோடு இசைபாடல் மறந்து அறியேன்
நலம்தீங்கிலும் உன்னை மறந்து அறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்து அறியேன்
உலர்ந்தார் தலையில் பலிகொண்டு உழல்வாய்
உடலுள் உறுசூலை தவிர்த்து அருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே. 6

விளக்கம்:

கெடில நதிக்கரையில் திருவதிகை வீரட்டானத்து உறையும் எம்பெருமானே, இனி நான் நீர், மலர்கள், தூபம் இவை கொண்டு உன்னை மறவாமல் வழிபடுவேன். இனிய தமிழில் இசைப்

பாடல்களால் உன்னைப் புகழ்வேன். வாழ்க்கையின் எந்நிலையிலும் இடர் வந்த போதிலும் துன்பமின்றி இருக்கும் காலத்திலும் உன்னை மறவாமல் உனது நாமங்களைச் சொல்வேன். பிரம்மனின் தலை ஓட்டில் பிச்சை ஏற்று உலகெங்கும் திரியும் தலைவனே, எனது உடலினை வருத்தும் சூலை நோயினைப் போக்கி அருள வேண்டும்.

உயர்ந்தேன் மனைவாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர் தலைக் காவல் இலாமையினால்
வயந்தே உமக்கு ஆட்செய்து வாழல்உற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த் தருளீர்
பயந்தே என்வயிற்றின் அகம்படியே
பறித்துப் புரட்டி அறுத்து ஈர்த்திட நான்
அயர்ந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே. 7

விளக்கம்:

கெடில நதிக்கரையில் உள்ள திருவதிகை வீரட்டானத்து உறையும் சிவபெருமானே, என்னை வழி நடத்துபவர்கள் இல்லாமையால் மணவாழ்க்கை, செல்வம், புகழ் இவைகளைப் பெரிதாக எண்ணி வாழ்ந்திருந்தேன். உமது அருளில் வயப்படவும் வாழ்க்கையில் இன்பம், செல்வம், புகழ் அனைத்தும் உமது பெருமையின் முன் வெறுமை என உணர்ந்து கொண்டேன். எனவே உமக்கு அடிமையாக வாழ முடிவு செய்த என்னை கொடிய சூலை நோய் வருத்துகின்றது. குடலின் உள்ளே புகுந்து, புரட்டியும் அறுத்தும் என்னை பல்வேறு வகையில் துன்புறுத்தும் சூலை நோயால் நான் மிகவும் அஞ்சி சோர்ந்து விட்டேன். நீரே இந்நோயை தவிர்த்து அருள் செய்ய வேண்டும்.

வலித்தேன் மணவாழ்க்கை மகிழ்ந்து அடியேன்
வஞ்சம் மனம் ஒன்றும் இலாமையினால்
சலித்தால் ஒருவர் துணை யாரும் இல்லைச்
சங்கவெண் குழைக் காதுஉடை எம்பெருமான்
கலித்தே என் வயிற்றின் அகம்படியே
கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்து தின்ன
அலுத்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே. 8

விளக்கம்:

திருவதிகை வீரட்டானத்து உறை அம்மானே, வெண்ணிறச் சங்கினால் ஆகிய குழை என்னும் காதணியை அணிந்துள்ள பெருமானே, எனது மனத்தில் வஞ்சனை இல்லாமையால் மனக்கண் மகிழ்ந்து வாழும் வாழ்க்கையை வெறுத்தேன். சூலை நோய் அடியேனின் வயிற்றுள்ளே கலக்கி வயிற்றின் பகுதிகளை மயக்கி துன்புறுத்துகிறது. ஆதலால் அடியேன் உயிர் வாழ்தலை வெறுத்து விட்டேன். வருத்தும் போது அடியேனுக்குத் துணையாவார் உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை. அடியேனை நோயினின்றும் காத்தருள்க.

பொன்போல மிளிர்வது ஓர் மேனியினீர்
புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணி என்று இவற்றை
நணுகாமல் துரந்து கரந்தும் இடீர்
என்போலிகள் உம்மை இனித் தெளியார்
அடியார் படுவது இதுவே ஆகில்
அன்பே அமையும் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே. 9

விளக்கம்:

பொன் போன்ற மேனியரே, சுருண்ட செம்பட்டை நிற சடையினை உடையவரே, மெலிந்த நிலையில் உம்மைச் சரணடைந்த சந்திரனுக்கு தஞ்சம் அளித்து வாழ்வும் அளித்த சிவபெருமானே, கொடிய சூலை நோயினால் எனக்கு வந்துள்ள துன்பத்தையும் கவலையையும் போக்கி அருள் புரிவீராக. என்னைப் போன்றவர்கள் உமது கருணையின் திறத்தை அறியாமல் தெளியாத நிலையில் உள்ளனர். அவ்வாறு கவலைகளாலும் துன்பங்களாலும் கட்டுண்டு இருக்கும் அடியார்களது கவலைகளை துன்பங்களைக் களைந்தால் அவர்களும் தெளிவு அடைவார்கள். உலகெங்கும் அன்பே நிலவும்.

போர்த்தாய் அங்குஓர் ஆனையின் ஈருரிதோல்
புறங்காடு அரங்கா நடம்ஆட வல்லாய்
ஆர்த்தான் அரக்கன்தனை மால்வரைக் கீழ்
அடர்த்திட்டு அருள் செய்தஅது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனை ஆன விலக்கியிடாய்
ஆர்த்தார் புனல்சூழ் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே. 10

விளக்கம்:

அதிகமான நீரினை உடையதாய் மிகுந்த ஆரவாரத்துடன் ஓடும் கெடில நதிக்கரையில் உள்ள திருவதிகை வீரட்டானத்து உறையும் தலைவனே, முனிவர்களால் உன்மீது ஏவி விடப்பட்ட யானையின் தோலை உரித்து உனது உடலின்மீது போர்த்திக் கொண்டாய். ஊருக்கு வெளியே உள்ள காட்டினை அரங்கமாகக் கொண்டு நடனம் புரிய வல்லோனே, தனது வழியில் எதிர்ப்பட்ட

கயிலாய மலையை பேர்த்தெடுக்க ஆரவாரத்துடன் முயன்ற இராவணனின் செருக்கு அழியுமாறு மலையின் கீழே உமது கால் விரலால் அவனை அழுத்தி வருத்திய பின்னர் அவன் பாடிய சாமகானத்திற்கு மகிழ்ந்து அவனுக்கு அருள் பல செய்தவனே. அதே போல், முன்னர் நான் செய்த கொடுமைகளைப் பொருட்படுத்தாது சூலை நோயின் கொடுமையால் வேர்த்தும் புரண்டும் எழுந்தும் விழுந்தும், துன்புறும் அடியேனின் வேதனைகளை நீர்தான் களைய வேண்டும்.

இந்த பதிகம் பாடிய பின்னர் மருள்நீக்கியாரின் சூலை நோய் முற்றிலும் நீங்கியது. அவர் சிவபெருமானின் அருட்கடலில் மூழ்கினார். தான் சமண மதம் சார்ந்து பிழை செய்த போதும் இறைவன் கருணை செய்ததை எண்ணி திருமேனி முழுதும் உரோமங்கள் சிலிர்க்க, கண்கள் ஆனந்தக் கண்ணீர் பொழிய தரையில் பலமுறை புரண்டார். “செந்தமிழில் சொல் வளம் கொண்ட பாடல்களைப் பாடியதால் உமது பெயர் **‘நாவுக்கரசர்’** என்று இனி உலகில் விளங்கும்” என்னும் ஒலி வானில் எழுந்தது.

மருள்நீக்கியார் திருநாவுக்கரசராகி புறச்சமய இருள் நீக்கப் புறப்பட்டதை எண்ணி உலகம் மகிழ்ந்தது. அவர் சைவநெறி சேர்ந்ததை அறிந்த சமணர் தமது மதம் அழியுமோ என அஞ்சினர். அவர் தமக்கையார் சார்ந்துள்ள சமயத்தைச் சார்வதற்காக சூலைநோய் வந்ததாகக் கூறிச் சென்றார் என்று மன்னனிடம் கூறினார்கள். திருநாவுக்கரசரை தண்டிக்க வேண்டும் என்றும் கூறினார்கள். மன்னவன் திருநாவுக்கரசரை அழைத்து வரும்படி கூறி அமைச்சரை அனுப்பி வைத்தான். திருநாவுக்கரசர் “சிவபெருமானின் திருவடிகளையே சிந்திக்கும் நாம் எமனே வரினும் அஞ்சோம்” என்று பொருள் பொதிந்த **“நாமார்க்கும் குடியல்லோம்”** எனத் தொடங்கும் **மறுமாற்றுத் திருத்தாண்டகம்** பாடி அருளினார்.

அந்த பதிகத்தின் முதல் பாடல் மட்டும் தரப்பட்டுள்ளது.

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியில்லாத் தன்மை யான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச்சே வடியினையே குறுகி னோமே.

விளக்கம்:

மலர் போன்ற சிவபெருமானின் திருவடிகளை அடைக்கலமாக அடைந்து விட்டோம். ஆதலால் நாம் யாருக்கும் அடிமையாவதில்லை. உயிரைப் பிரிக்கும் இயமனுக்கும் அஞ்சுவதில்லை. நரகத்தில் புகுந்தும் துன்பம் அடைவதில்லை. பொய்யும் புரட்டும் இனி நம்மை அணுகுவதில்லை என்றும் மகிழ்ச்சியாக இருப்போம். நோய் என்பதையே அறிய மாட்டோம். வேறு யாரையும் பணிந்து நிற்க மாட்டோம். எந்நாளும் நமக்கு இன்பமே ஏற்படும். துன்பம் என்பதை நாம் அறிய மாட்டோம். யாருக்கும் அடிமையாகாதவனும், வெண்குழையைக் காதில் அணிந்த அரசனாகிய சங்கரனுக்கு மட்டுமே நாம் அடிமையாக இருப்போம்.

சமணர்களின் சூழ்ச்சியும் இறைவன் நிகழ்த்திய அற்புதங்களும்:

அமைச்சர் மீண்டும் மன்னனிடம் திருநாவுக்கரசைத் தண்டிக்க வழிமுறைகளை சிந்தித்து மன்னவன் ஆணைப்படி திருநாவுக்கரசரை பெருந்தீயின் வெப்பம் கொண்ட நீற்றறையில் (சுண்ணாம்புக் காளவாயில்) அடைத்தார்கள். அப்போது திருநாவுக்கரசர் சிவபெரு மானைத் துதித்து,

"மாசில் வீணையும் மாலை மதியமும்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தை திருவாய் மலர்ந்தருளினார்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணைஅடி நீழலே.

விளக்கம்:

இறைவனாகிய என் தந்தையின் திருவடி நிழல் குற்றமில்லாத வீணையின் இசையும், மாலையிலே தோன்றும் நிலவின் ஒளியும், வீசுகின்ற தென்றலின் சாயலும், செறிந்த இளவேனில் காலம் போலவும், ஒலிக்கும் வண்டுகள் மொய்க்கும் பொய்கையின் குளிர்ச்சியைப் போன்றும் இன்பம் தருவதாக உள்ளது.

அந்த நீற்றறை அவருக்கு இளவேனிலும், தென்றல் காற்றும், பொய்கையும், வெண்நிலவும், வீணையோசையும் போலக் குளிர்ந்தது.

நீற்றறையில் இட்டும் நாவரசருக்கு ஒன்றும் நிகழாமையை அறிந்த சமணர்கள் அவருக்கு நஞ்சு கலந்த உணவைத் தந்து உண்ணும்படி செய்தனர். நஞ்சை உண்டும் ஒன்றும் நேரவில்லை.

சமணர்கள் யானையை விட்டு அவரை மிதிக்கச் செய்யும்படி அரசனுக்கு யோசனை கூறினர். நாவுக்கரசர் சிறிதும் அஞ்சினா ரில்லை. யானை சீறி வந்தது. சிவபெருமானைத் தியானித்து,

"அஞ்சுவது யாதொன்றும் இல்லை;
அஞ்ச வருவதும் இல்லை"

என்ற பதிகம் பாடி வணங்கினார். யானை நாவுக்கரசரை வலமாக வந்து பணிந்து திரும்பிச் சென்றது.

கடலிடை அருளிய பதிகம்

சுண்ணவெண் சந்தனச்சாந்தும் சுடர்த் திங்கள் சூளாமணியும்
வண்ண உரிவைஉடையும் வளரும் பவளநிறமும்
அண்ணல் அரண் முரண் ஏறும் அகலம் வளாய அரவும்
திண்நல் கெடிலப்புனலும் உடையார் ஒருவர்தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை.

விளக்கம்:

சந்தனம் போல மேலே பூசிய வெள்ளைநிற திருநீறும், சுடர்விடும் சந்திரனைப் போன்ற சூளாமணியும், புலித்தோல் உடையும், காளை வாகனமும் வளர்கின்ற, பவளம் போல சிவந்த நிறமும், மார்பில் புரளும் பாம்பும், திருமஞ்சனம் ஆட கெடில நதியின் நீரும், இவைகளை உடைய திருவதிகை வீரட்டானருக்கு உறவு உடையவர்கள் நாங்கள். எனவே அஞ்சும்படியான பொருள் ஏதுமில்லை. இனி அஞ்சும்படி வரவுள்ள பொருளும் இல்லை.

யானையின் செயல் கண்டு சமணர்கள் திகைத்தனர். நாவுக்கரசரை அரசனின் ஆணைப்படி கல்லோடு கட்டிக் கடலில் தள்ளினர். நாவுக்கரசர் இறைவனைத் துதித்து **"சொற்றுனை வேதியன்"** என்னும் திருப்பதிகத்தைப் பாடி அருளினார்.

இத்திருப்பதிகத்தை பாராயணம் செய்தால் எத்தகைய ஆபத்துக்களில் இருந்தும் தப்பிக்க இயலும்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டி ஓர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை ஆவது நமச்சிவாயவே. 1

விளக்கம்:

சொல் என்றால் வேதங்கள் என்று கூறலாம். புனிதமான சொற்களைக் கொண்ட வேதங்களுக்குத் துணையாகி அவற்றை அருளியவன். ஒளியாக இருந்து நம்மை வழி நடத்துபவன். இத்தகைய பெருமைக்குரிய பெருமான் பொன் போன்று பொலியும் இணையான திருவடிகளை நம் உள்ளம் இருத்தி, நம் கரங்களால் வழிபட்டால், கல்லுடன் பிணைத்து கடலில் தள்ளினாலும் நமக்கு பெருந்துணையாக இருந்து பெருமானின் திருநாமமான 'நமச்சிவாய' நம்மைக் காப்பாற்றும்.

பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக்கு அருங்கலம் அரன் அஞ்சு ஆடுதல்
கோவினுக்கு அருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே. 2

விளக்கம்:

பூக்களுக்கு அணிகலனாகத் திகழ்வது தாமரை மலர். பசுக் களுக்கு அணிகலன் சிவபெருமான் நீராட வேண்டிய பொருட்களை அளிப்பது. அரசன் நடுநிலைமை தவறாமல் இருப்பது, அவன் வளையாத செங்கோலனாகத் திகழ்வதே அவனுக்கு அணிகலன் ஆகும். நாவிற்கு நமச்சிவாய மந்திரமே அணிகலன் ஆகும்.

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகில் அவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகத்தில் பயின்ற பாவத்தை
நண்ணிநின்று அறுப்பது நமச்சிவாயவே. 3

விளக்கம்:

விண்ணுயர கட்டைகளை அடுக்கி குவியலாகச் செய்தாலும் ஒரு தீப்பொறி அந்த அடுக்கினில் படர்ந்தால் அவை அனைத்தும்

சாம்பலாகி விடும். அது போல நாம் இவ்வுலகில் செய்த பாவங்கள் எத்தனையாக இருந்தாலும் அனைத்தையும் சுட்டெரிக்கும் தன்மை வாய்ந்தது நமச்சிவாய மந்திரம்.

இடுக்கண் பட்டிருக்கினும் இரந்து யாரையும்
விடுக்கிற் பிரான் என்று வினவுவோம் அல்லோம்
அடுக்கல் கீழ் கிடக்கினும் அருளின் நாம் உற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே. 4

விளக்கம்:

எவ்வகையான துன்பங்கள் எதிர்வந்தாலும் அவற்றிலிருந்து என்னை விடுவிக்க வேண்டும் என்று வேறு எவரையும் கெஞ்சும் நிலையில் நான் இல்லை. மலையின் கீழ் மாட்டிக் கொண்டு எழ முடியாத நிலையிலிருந்தாலும் அதனால் ஏற்படும் நடுக்கத்தைக் கெடுத்து நம்மைக் காப்பாற்றுவது அருள் வடிவாகிய சிவபெருமானின் நாமமாகிய நமச்சிவாய மந்திரம்தான்.

வெந்தநீறு அருங்கலம் விரதிகட் கெல்லாம்
அந்தணர்க்கு அருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக்கு அருங்கலம் திகழும் நீள்முடி
நங்களுக்கு அருங்கலம் நமச்சிவாயவே. 5

விளக்கம்:

பல்வகை விரதங்களை மேற்கொண்டு தவம் செய்து இறைவனை நாடும் முனிவர்களுக்கு அவர்கள் அணியும் திருநீறே அழகு சேர்ப்பதாகும். நான்மறைகளையும், ஆறு அங்கங்களையும் கற்றுத் தேர்ந்தவர்களாக இருப்பதுதான் அந்தணர்களுக்கு அழகு ஆகும். சந்திரனுக்கு அழகு சேர்ப்பது சிவபெருமானைச்

சரணடைந்து அவரது திருமுடியில் இடம் பெற்றிருப்பதே ஆகும். நம் எல்லோருக்கும் பெருமை சேர்க்கும், அருங்கலமாக அமைவது நமச்சிவாய மந்திரமே ஆகும்.

சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கு அல்லால்
நலமிலன் நாள்தொறும் நல்குவான் நலன்
குலம் இலராகிலும் குலத்திற்கு ஏற்பதோர்
நலம் மிகக் கொடுப்பது நமச்சிவாயவே. 6

விளக்கம்:

அனைவருக்கும் ஒரே தன்மையாகக் காணப்படும் சிவபெருமான் தன் அடியார்களுக்கு எப்போதும் நன்மை செய்பவன். தன்னைச் சேராதவர்களுக்கு நன்மை அளிக்காதவன். நற்குலத்தில் பிறவாதார், ஆயினும் அவர்களுக்கும் நற்குலத்தில் பிறந்தோர் அடையும் நன்மையைத் தருவது நமச்சிவாய மந்திரம்.

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச்சென்று உருவம் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சிவாயவே. 7

விளக்கம்:

வீடுபேறு அடையும் நோக்கம் கொண்டு உலகப் பற்றினை விட்டொழித்த நற்றொண்டர்கள் ஒன்றுபட்டு சிவநெறியைச் சிந்தித்தனர். நானும் அவர்களைப் பின்பற்றி திருவைந்தெழுத்து நமச்சிவாய மந்திரத்தைப் பற்றிட அந்த மந்திரம் என்னைப் பற்றிக் கொண்டு பல நன்மைகள் புரிந்தது.

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது

பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே. 8

விளக்கம்:

வீட்டில் உள்ள விளக்கு அங்குள்ள இருளைப் போக்குவது. சொல்லின் அகத்து விளக்காக ஆகி, ஒளியுடையதாகி, பல இடங்களையும் விளக்குவதாகி, பல சமயத்தாறும் தம்மை அறியாமலே காணும்படி நிற்பதாகி உள்ளத்திற்கு ஒளி தரும் விளக்காக அமைவது நமச்சிவாய மந்திரமே ஆகும்.

முன்நெறி ஆகிய முதல்வன் முக்கணன்
தன்னெறியே சரண்ஆதல் திண்ணமே
அந்நெறியே சென்று அங்கு அடைந்தவர்க்கு எலாம்
நன்னெறியாவது நமச்சிவாயவே. 9

விளக்கம்:

முதல்வன் முக்கண்ணன்தான் அனைவருக்கும் முன்னே தோன்றிய நெறியாளன். அத்தகைய சிறப்பு மிக்க சிவபெருமானின் செம்மையான நெறியை உறுதியுடன் சரணடைந்து வாழும் அடியார்களுக்கு பயன்தரும் வீடுபேறு என்னும் நன்னெறியினைத் தருவது நச்சிவாய மந்திரமே ஆகும்.

மாப்பிணை தழுவிய மாதுஓர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சிவாயப் பத்து
ஏத்த வல்லார்க்கு இடுக்கண் இல்லையே. 10

விளக்கம்:

மான் கன்றினை இடக்கரத்தில் ஏந்தியிருப்பவன். இடது பாகத்தில் உமையம்மையை ஏற்றுக் காட்சியளிப்பவன். அந்த

சிவபிரானின் திருவடிகளை மலர் தூவி நாம் வழிபட வேண்டும். எப்போதும் பூக்களுடன் இணைபிரியாது இருக்கும் திருவடிகளை நம் மனத்திருத்தி நமது நாவால் நமச்சிவாய மந்திரத்தை ஓதினால் எத்தகைய இடர்களும் ஏற்படாது.

பயணம் செய்யும் போதும் வழித்துணை வேண்டி இப்பதிகத்தை ஓதலாம். பிறவிப் பிணியிலிருந்து விடுதலை பெற்று வீடு பேறு அடையவும் இப்பதிகத்தை ஓதலாம்.

சமணர்களின் கொடிய செயல்கள் நாவுக்கரசரை ஒன்றும் செய்யவில்லை. அவரின் பக்திச் சிறப்பை உணர்ந்த பல்லவ மன்னன் அவர் திருவடிகளில் விழுந்து வணங்கினான். சமணர்களோடு கூடிச் செய்த குற்றங்களை மன்னிக்கும்படி வேண்டி நின்றான். நாவுக்கரசரும் அவனை சிவனடி பணியச் செய்து சைவ சமயத்தில் சேர்த்து அருளினார்.

திருத்தூங்கானை மாடம் என்னும் திருத்தலம் சேர்ந்தார். பெருமானை வேண்டி **சூல முத்திரை** மற்றும் **இடப முத்திரைகளைத் தம்** திருத்தோளில் பொறிக்கப் பெற்றார். சீர்காழியை அடைந்து திருஞானசம்பந்தரின் திருவடிகளை வணங்கினார். ஞானசம்பந்தர் அவரை **'அப்பரே'** என்று அன்போடு அழைத்தார். அன்று முதல் திருநாவுக்கரசருக்கு 'அப்பர்' என்னும் திருப்பெயரும் வழங்கப்பட்டது.

திருநல்லூரில் அப்பரின் திருமுடி மீது ஈசன் தன் திருவடி மலர் சூட்டி அருள் செய்தான். பெருமானின் பேரருளை நினைந்து **"நினைந்து உருகும் அடியாரை"** எனத் தொடங்கும் திருத்தாண்டக பதிகம் பாடினார். அவருக்கு **'தாண்டக வேந்தர்'** என்னும் பெயரும் சேர்ந்தது. அப்பதிகத்தின் முதல் பாடல் மட்டும் கொடுக்கப் பட்டுள்ளது.

நினைந்து உருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்

சினந்திருகு களிற்று உரிவைப்போர்வை வைத்தார்
செழு மதியின்தளிர் வைத்தார் சிறந்து வானோர்
இனம் துருவி மணி மகுடத்து ஏறத் துற்ற
இனமலர்கள் போது அவிழ்ந்து மது வாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார்
நல்லூர் எம்பெருமானார் நல்ல வாறே. 1

விளக்கம்:

நல்லூரிலுள்ள எம்பெருமான், அவரை நினைந்து உள்ளம் உருகும் அடியவர்களை மேலும் மனம் உருகுமாறு செய்பவர். அவர்களுடைய தீவினைகளைப் போக்கியவர். தன்மீது சினம் கொண்டு எதிர்த்த யானையின் தோலைப் போர்வையாக்கிக் கொண்டவர். தன் முடிமீது பிறைச்சந்திரனைச் சூடியவர். தேவர்கள் அவரைத் தேடி அரிதாகக் கண்டனர். அவர்கள் மணிமகுடத்தோடு தம்மை வணங்குவதால் அம்முடிகளில் செறிந்த மலர்களிலிருந்து பாய்கின்ற தேனினால் நனைந்தது போலக் காணப்படும் தனது திருவடிகளை என் தலைமேல் வைத்து பேரருள் புரிந்தார்.

அப்பூதி அடிகள்:

திங்களூரில் அப்பூதி அடிகள் என்பார் திருநாவுக்கரசர் பெயராலே சாலை, குளம், தண்ணீர்ப் பந்தல் போன்ற தருமங்களைச் செய்து வந்தார். இவையனைத்தையும் அறிந்த திருநாவுக்கரசர் அப்பூதி அடிகளின் இல்லத்தை அடைந்தார். அவர் அமுது செய்வதற்காக வாழை இலை அரிந்து வரச் சென்ற அப்பூதி அடிகளின் மகன் மூத்த திருநாவுக்கரசு பாம்பு தீண்டி இறந்தான். நாவுக்கரசர் **“ஒன்று கொலாம் அவர் சிந்தை உயர் வரை”** என்று தொடங்கும் பதிகம் பாடி பாலகனை உயிர் பெற்று எழச் செய்தார்.

அந்த பதிகத்தின் முதல் பாடல் :

ஒன்றுகொ லாம்அவர் சிந்தை உயர்வரை
ஒன்றுகொ லாம்உயரும் மதி சூடுவர்
ஒன்றுகொ லாம்இடு வெண்தலை கையது
ஒன்றுகொ லாம்அவர் ஊர்வது தானே.

விளக்கம்:

சிவபிரானின் உள்ளம் அவர் இருக்கும் கயிலை மலை போன்று மிக உயர்வானது. அவர் தலையில் சந்திரனைச் சூடி யுள்ளார். கையில் பிச்சை ஏற்க வெள்ளை நிற மண்டை ஓடு ஏந்தி யிருக்கிறார். அவர் ஏறி வருவது ஓர் காளையின் மீது.

சில நாட்கள் அப்பர் திங்களூரில் தங்கியிருந்தார். பின் **திருப்பழனம்** சென்று பாடிய பதிகத்தில் அப்பூதி அடிகளின் பெருமை பற்றியும் பாடி அருளினார். பல தலங்களைத் தரிசித்து திருவாரூர் வந்தார். அங்கு தியாகராசரைப் பணிந்து **"பாடிளம் பூதத்தனானும்"** என்னும் பதிகம் பாடினார்.

பாடுஇளம் பூதத்தி னானும்
பவளச்செவ் வாய்வண்ணத் தானும்
கூடுஇள மென்முலை யாளைக்
கூடிய கோலத்தி னானும்
ஓடுஇள வெண்பிறை யானும்
ஒளிதிகழ் சூலத்தி னானும்
ஆடுஇனம் பாம்புஅசைத் தானும்
ஆரூர் அமர்ந்த அம்மானே.

விளக்கம்:

பண்ணிசைத்துப் பாடும் இளைய பூதகணங்களை உடைய வனும், பவளம் போன்று சிவந்த வாயினை உடையவனும்,

இளமையான மார்பகங்களை உடைய உமையவளைத் தன் உடலில் பாதியாகக் கொண்டவனும், ஈடு இல்லாத அழகனாய் விளங்குபவனும், தேய்ந்து அழிந்த நிலையிலிருந்த சந்திரனை வெண்பிறையாகச் சூடியவனும், ஒளிமிகுந்த தலப்படை உடையவனும், அசைந்தாடும் இளைய பாம்பை தனது இடுப்பில் கச்சையாகக் கொண்டவனும் ஆகிய சிவபெருமான் திருவாரூரில் எழுந்தருளியுள்ள எம் தந்தையாவான்.

திருவாரூர் நீங்கி பல தலங்களைத் தரிசித்து திருப்புகலூருக்கு வந்தார். திருமடத்தில் இருந்த திருஞான சம்பந்தரும் அப்பரை எதிர்கொண்டழைத்தார். அவருக்கு திருவாரூரில் நடந்த திருவாதிரைத் திருநாள் பற்றி விளக்க விரும்பிய நாவுக்கரசர் **"முத்து விதானம்"** எனத் தொடங்கி பதிகம் பாடினார்.

முத்துவிதானம் மணிப்பொற்கவரி முறையாலே
பக்தர்களொடு பாவையர்சூழப் பலிப்பின்னே
வித்தகக்கோல வெண்தலைமாலை விரதிகள்
அத்தன்ஆரூர் ஆதிரைநாளால் அதுவண்ணம்

விளக்கம்:

திருவாரூர் திருத்தலத்தில் எழுந்தருளி இருக்கும் எம் பெருமானுக்கு நைவேத்தியம் கொண்டு செல்கையில், ஆடவரும், மகளிரும், தவசிகளும் உடன் வருவார்கள். முத்துக்கள் பதிக்கப்பட்ட பந்தலின் கீழே அமர்ந்த பெருமானுக்கு, பொன்னால் ஆன கைப்பிடியுடன் கூடிய கவரி வீசப்படுகின்றது. பெருமானுக்கு நைவேத்தியம் கொண்டுவரும் ஊர்வலத்தில் எலும்பு மாலைகள் மற்றும் தலைமாலைகள் அணிந்த மாவிரதிகள் கலந்து கொண்டனர். இவ்வாறு சிவபிரான், திருவாரூரில் உலா வந்த கோலம் கண்டவர் மனதினில் நிலைத்து நிற்கும்.

அங்கு நாவுக்கரசர் உழவாரப்பணி செய்தார். **படிக்காசு பெற்றார்.** நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் திருக்கடவூர் அடைந்தனர். அமுத கடேசரை வணங்கி மகிழ்ந்து மேலும் சில தலங்களுக்குச் சென்று உழவாரப்பணியும் செய்து, இரு வேறு திருமடங்களில் இருவரும் திருவீழிமிழலையில் தங்கினார்கள். அந்நாளில் மழையின்மையால் பஞ்சம் ஏற்பட்டது. இறைவன் இருவர் கனவிலும் தோன்றி, ''கவலை வேண்டாம். அடியவர்க்கு உணவளிக்க படிக்காசு தருகிறோம்'' என்று கூறி, திருக்கோயில் மேற்கு கிழக்கு பீடங்களில் நாள்தோறும் படிக்காசு வழங்கினார். அக்காசுகளைக் கொண்டு அடியவர்களுக்கு அமுது படைத்தார்கள். பின்னர் மழை பெய்து செழிப்புக் கூடியது.

திருமறைக்காடு:

திருவீழிமிழலையிலிருந்து புறப்பட்டு இருவரும் திருமறைக்காடு என்னும் **வேதாரண்யம்** வந்தார்கள். வேதங்கள் அடைத்த திருக்கதவம் திறக்க அப்பரும், திறந்த கதவு மூடிட திருஞான சம்பந்தரும் பதிகம் பாடினார்கள்.

''பூட்டப்பட்ட கதவுகளின் தாழ் திறக்குமாறு நீங்கள் பாடுங்கள்'' என்று திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசரிடம் சொன்னார். உடனே அப்பரும் பாடத் தொடங்கினார். ''பண்ணின் நேர் மொழியாள்'' என்னும் பதிகத்தின் முதல் பாடல்:

பண்ணின் நேர்மொழி யாள்உமை பங்கரோ
மண்ணி னார்வலம் செய்மறைக் காடரோ
கண்ணி னால்உமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்து அருள் செய்மினே.

விளக்கம்:

பண் போன்ற இனியமொழி பேசும் உமையம்மையை உடலின் ஒரு பாகத்தில் கொண்டவரே, இவ்வுலக மக்கள் வழிபடும்

திருமறைக்காட்டு இறைவரே, அடியேன் உம்மைக் காணும் வண்ணம் வேதங்களால் அடைக்கப்பட்ட இக்கதவினைத் திறந்து அருள் செய்வீராக. இதனைத் தொடர்ந்து பத்து பாடல்கள் பாடியும் கதவு திறக்கவில்லை. திருநாவுக்கரசர் வருந்தி ''**அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்**'' என்ற பாடல் பாடிடக் கதவு திறந்தது.

அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்
இரக்கம் ஒன்றுஇல்லீர் எம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க இக்கத வம்திறப் பிம்மினே.

விளக்கம்:

இராவணனைக் கால் பெருவிரல் கொண்டு நசுக்கிய நீர் சிறிதும் இரக்கமில்லாதவர். எம்பெருமானே! தேன் சுரக்கும் புன்னை மரங்களால் சூழப்பட்ட திருமறைக்காடு என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவரே! இப்பொழுது இக்கதவினை விரைந்து திறந்திட அருள்புரிவீராக.

திருநாவுக்கரசர் தான் பத்து பாடல்கள் பாடியபின் திருக்கதவம் திறந்ததையும் ஞானசம்பந்தரின் முதல் பாடல் கேட்டே திருக்கதவம் மூடியதையும் எண்ணி வருந்தினார். "**வாய்மூருக்கு வருக**" என இறைவன் அழைக்க முன்னே செல்ல, தொடர்ந்து திருவாய்மூர் அடைந்தார். திருக்காட்சி பெற வேண்டினார் திருஞானசம்பந்தர். "**தளிரிள வளரென**" என்னும் பதிகம் பாடவும் இறைவன் காட்சி தந்தருளினார்.

திருஞான சம்பந்தரின் சிவிகை சுமந்தார்:

மதுரை சென்று வந்த ஞானசம்பந்தர் அப்பர் **திருப்பூந்துருத்தி**யில் இருப்பதை அறிந்து அவரைக் காண பல்லக்கில் புறப்பட்டார். நாவுக்கரசர் அடியார் கூட்டத்துடன் தானும் பல்லக்கை சுமந்து வந்தார்.

அதை அறிந்த சம்பந்தர் விரைந்து இறங்கி அப்பரை வணங்கினார். இருவரும் ஆலயம் சென்று பெருமானை வணங்கினார்கள். திருஞான சம்பந்தரால் பாண்டி நாட்டில் சைவம் தழைக்கத் தொடங்கியதை நாவுக்கரசர் அறிந்தார். ஞானசம்பந்தர் தொண்டை நாட்டிற்கும் நாவுக்கரசர் பாண்டி நாட்டிற்கும் புறப்பட்டனர்.

திரு**ஆலவாய்க்குச் (மதுரைக்கு)** சென்றார் நாவுக்கரசர். சொக்கனையும் மீனாட்சியையும் பாடினார். பாண்டிய மன்னன் நெடுமாறன், அரசியார் மங்கையர்க்கரசி, அமைச்சர் குலச்சிறையார் மூவரும் நாவுக்கரசரை பணிந்து வணங்கினர்.

திருப்பைஞ்ஞீலி என்னும் தலத்தில் மிகவும் சோர்வடைந்திருந்த அப்பருக்கு **பொதிச்சோறும் குடிநீரும்** தந்தருளினார் சிவபெருமான்.

இப்படி சோழ நாட்டுத் திருத்தலங்களை தரிசித்து, திருவண்ணா மலைக்குச் சென்று அண்ணாமலையாரைப் போற்றிப் பாடினார் நாவுக்கரசர்.

திருக்காளத்தியை அடைந்தார். ஞானப்பூங்கோதை நாயகியுடன் உறையும் காளத்தியப்பரைப் பாடினார். **கண்ணப்பரையும்** வணங்கி மகிழ்ந்தார். தென்கயிலை என்னும் திருக்காளத்தியை நீங்கி வட கயிலையைக் காண ஆவல் கொண்டார்.

திருநாவுக்கரசர் மேற்கொண்ட கயிலைப்பயணம் இக்காலத் தோடு ஒப்பிட்டால் அவரது கடும் முயற்சியும் மனஉறுதியும் விளங்கும். மற்ற அடியார்கள் யாவரும் திருக்காளத்தியிலேயே தங்கி கயிலை நாதனைப் பாடினர். வடதிசை நோக்கிப் பயணித்த நாவுக்கரசர் காடு, ஆறு ஆகியவற்றைக் கடந்து **ஸ்ரீசைலம்** எனப்படும் **திருப்பருப்பதத்தை அடைந்தார்**. அங்கு நந்தி தேவரே மலையாக விளங்குகிறார்.

காசி விஸ்வநாதனை வணங்கினார். தொடர்ந்து வந்த அடியார்கள் அதற்கு அப்பால் செல்லாமல் நின்று விட்டனர்.

நாவுக்கரசரின் பாதங்கள் தேய்ந்தன. இரண்டு கரங்களை ஊன்றிச் சென்றார். திருக்கரங்களும் தேய்ந்தன. மார்பினால் உந்திச் சென்றார். மார்புத் தசைகளும் தேய்ந்தன. உடலால் உருண்டு பயணத்தைத் தொடர்ந்தார்.

கருணை மயமான இறைவன் முனிவர் போல் வந்து நாவுக்கரசர் எதிரே நின்றான்.

"அடியரே, இப்படி உடல் உறுப்புக்கள் தேய கொடிய காட்டு மலைப்பாதையில் ஏன் வந்தீர்கள்?" என்றான். உமையவளுடன் கயிலையில் சிவபெருமான் வீற்றிருக்கும் காட்சியைக் காண வந்த தன் ஆவலைக் கூறினார் நாவுக்கரசர்.

"கயிலை மலையை தேவர்களும் அடைய முடியாது. மனிதர் களால் முடியுமா? திரும்பிச் செல்வதே சரி" என்றார் பெருமான்.

"கயிலைக் காட்சியைக் காணாமல் அழியும் உடலுடன் திரும்ப மாட்டேன்" என்றார் நாவுக்கரசர்.

அப்பரின் மன உறுதியைக் கண்ட முனிவராக வந்த பரமன் விண்ணில் மறைந்தான். அங்கிருந்து "ஓங்கு நாவுக்கரசனே! எழுந்திடுக" என்றான். உடனே தேய்ந்த உறுப்புகள் மீண்டும் வளர்ந்தன.

"அப்பனே! திருக்கயிலையில் இருந்தருளும் தங்கள் திருக் கோலத்தைக் காட்டியருள வேண்டும்" என்று கூறி இறைவனைப் பணிந்தார் நாவுக்கரசர்.

இறைவன் அங்கு ஒரு பொய்கையை உண்டு பண்ணி **"இப்பொய்கையில் மூழ்கி, திருவையாற்றில் எமது கயிலைக் காட்சியைக் காண்பாயாக"** என்றார். அதன்படி **"வேற்றாகி விண்ணாகி"** எனத் தொடங்கும் **இப்போற்றித் திருப்பதிகம்** பாடி **குளத்தில் மூழ்கினார்.**

போற்றித் திருத்தாண்டகம்:

இறைவனுக்கு அபிசேகம் செய்யும் போது இப்பதிகத்தைப் பாராயணம் செய்யலாம்.

தலம் : கயிலாயம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆள் என்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலைமலையானே போற்றி போற்றி 1

விளக்கம்:

விண்ணாகவும் வேறான மற்ற நான்கு பூதங்களாகவும் நிற்பவனே, வேறு எவரையும் நான் நாடாமல் இருக்க என்னை ஆட்கொண்ட பெருமானே, உள்ளத்தினுள்ளே இன்ப ஊற்றாகி எல்லை இல்லா இன்பம் அளிப்பவனே, இடையறாத சொற்கள் மூலம் ஒலியாக ஒலிப்பவனே, ஆறு அங்கங்கள், நான்கு வேதங்கள் மற்றும் ஐம்பூதங்களில் சக்தியாக இருப்பவனே, கயிலை மலையில் உறையும் இறைவனே உன்னை போற்றி போற்றி என்று பலமுறை போற்றி வணங்குகிறேன்.

பிச்சுஆடல் பேயோடு உகந்தாய் போற்றி
பிறவி அறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவி என்சிந்தை புகுந்தாய் போற்றி

பொய்ச்சார் புரம்மூன்றும் எய்தாய் போற்றி
போகாது என்சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 2

விளக்கம்:

பேய்களோடு நடனம் புரிவதை விரும்புபவனே, பிறப்பு இறப்பு சுழற்சியிலிருந்து உயிர்களுக்கு விடுதலை அளிக்கும் ஆற்றலுடையவனே, உயிர்களை அவற்றின் வினைகளுக்கு ஏற்ப, பலவகை உடல்களில் வைத்து அந்த உயிர்கள் வினைகளைத் தீர்த்துக் கொள்வதைக் கண்டு மகிழ்பவனே, விரும்பி என் சிந்தை புகுந்தவனே, மெய்ப்பொருளான உன்னை மறந்து பொய்யான பொருளைச் சார்ந்திருந்த அரக்கர்களின் மூன்று கோட்டைகளையும் எரித்தவனே, என் சிந்தையில் புகுந்து நீங்காமல் இருப்பவனே, இடுப்பினில் கச்சு போன்ற நாகத்தை அணிந்திருப்பவனே, கயிலை மலையில் உறையும் பெருமானே உன்னை போற்றி போற்றியென்று பலமுறை போற்றி வணங்குகிறேன்.

மருவார் புரமூன்றும் எய்தாய் போற்றி
மருவி என் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி என்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி ஒளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி ஓடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 3

விளக்கம்:

சிவநெறியில் சாராமல் வேறு நெறியைச் சார்ந்திருந்து உலகத்தாரை வருத்திய அரக்கர்களின் மூன்று கோட்டைகளையும் எரித்தவனே. விருப்பத்துடன் என் சிந்தையுள் புகுந்தவனே, பிரமனின் உருக்கொண்டு என்னைப் படைத்தவனே, உள்ளிருக்கும் உயிரை எவரும் காணாவண்ணம் ஒளித்தவனே, தீராத இன்பம் அளிப்பவனே, உலகத்தார் அனைவராலும் வணங்கப்படுவனே, மேகமாகி நின்று மழை பொழிந்து உலகிற்கு நன்மை பயப்பவனே, கயிலை மலையில் உறையும் இறைவனே, உன்னை போற்றி என்று பலமுறை போற்றி வணங்குகிறேன்.

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்து என்தன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்கும் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ ஆடல் உகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 4

விளக்கம்:

விண்ணில் உறையும் தேவர்கள் போற்றும் மருந்தே, எனது சிந்தையில் புகுந்த இறைவா, உயிர்களின் ஊனமாகிய மலங்களை நீக்கும் கருணைஉள்ளம் கொண்டவரே, மாலும் பிரமனும் உன்னைக் காண முடியாமல் தேடித் தவித்த போது அவர்கள் முன்னே விண்முட்டும் அளவு தீப்பிழம்பாக ஓங்கி நின்றவனே, தேனைப்போல் தெளிவானவனே, தேவர்களுக்கெல்லாம் தேவனாய்த் திகழ்பவனே, சுடுகாட்டுத் தீயில் கூத்து ஆடுவதை விரும்புபவனே,

கயிலை மலையில் உறையும் இறைவனே, உன்னை போற்றி போற்றியென்று பலமுறை போற்றி வணங்குகிறேன்.

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி எங்கும் பரந்தாய் போற்றி
பெயராது என் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவியான நிழலே போற்றி
நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 5

விளக்கம்:

உறைந்து உலகெங்கும் பரவி இருப்பவனே, பிரமனும் திருமாலும் உனது அடிமுடி காண முயன்றபோது உயர்ந்து அழலாய் நிமிர்ந்தவனே, மிகுந்த புகழோடு உலகெங்கும் பரந்து இருப்பவனே, என் சிந்தையில் புகுந்து வெளியே செல்லாது அங்கேயே நிலையாக இருப்பவனே, நீரினைத் தழுவிவரும் காற்றைப்போல, நிழலைப் போல குளிர்ச்சியாக இருப்பவனே, ஒப்பில்லா நிலை கொண்ட ஒப்பற்றவனே, மழை பொழியும் கார்மேகம் போல் அருள்மழை பொழிபவனே, அருட்கடலே கயிலை மலையில் உறையும் இறைவா, உன்னை போற்றி போற்றி என்று பலமுறை போற்றி வணங்குகிறேன்.

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவர் அறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்ந்தாய் போற்றி
போகாது என் சிந்தை புகுந்தாய் போற்றி

பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 6

விளக்கம்:

பல சிறிய தெய்வங்களாகிய தேவர்களாக இருப்பவனே, அனைத்துத் தேவர்களின் வலிமை ஒருங்கே திரண்ட தேவர்களுக்கும் தேவனே, தேவர்கள் அறிய முடியாதவனே, புல் போன்ற எளிய உயிர்கட்கும் அனைத்து உயிர்கட்கும் உணவு தந்து உறைவிடம் நல்கி அனைத்துயிர்களையும் வாழ வைப்பவனே, என் சிந்தையுள் புகுந்து வெளியேறாமல் அங்கேயே தங்கி இருப்பவனே, எல்லா உயிர்களிலும் நிறைந்து பார் முழுதும் பரவி நிற்பவனே, உலக உயிர்களையும் அனைத்து பொருள்களையும் காப்பவனே, கல்லினுள் உறையும் நுண்ணுயிர்களையும் காப்பவனே, கயிலை மலையில் உறையும் சிவபெருமானே, உன்னை போற்றி, போற்றி என்று பலமுறை போற்றி வணங்குகின்றேன்.

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்தும் சொல் ஆனாய் போற்றி
என் சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனும் தீ ஆனாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 7

விளக்கம்:

பண்ணாகவும், பண்ணிலிருந்து பிறக்கும் இசையாகவும் நிற்பவனே, உன்னை உள்ளத்தில் தியானிப்போர் பாவம் களைபவனே, எண்ணாக, எழுத்தாக, சொற்களாக உள்ளவனே, என் சிந்தையில் நீங்காமல் நிலைப்பவனே, விண்ணாகவும் நிலனாகவும் தீயாகவும் உள்ளவனே, மேலோர்க்கெல்லாம் மேலானவனே, கண்ணின் மணியாகத் திகழ்பவனே, கயிலை மலையில் உறையும் இறைவனே, உன்னை போற்றி போற்றி என்று பலமுறை போற்றி வணங்குகின்றேன்.

இமையாது உயிராது இருந்தாய் போற்றி
என் சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாகம் ஆகத்து அணைத்தாய் போற்றி
ஊழி ஏழான ஒருவா போற்றி
அமையா அருநஞ்சம் ஆர்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 8

விளக்கம்:

பிறர்மேல் அல்லாமல் கண்கள் இமைக்காமல் இருப்பவனே, எனது உள்ளத்தில் நீங்காது இருப்பவனே, உமையம்மையை உடலின் ஒரு பாகத்தில் வைத்திருப்பவனே, ஊழிக் காலத்தின் பின்தோன்றும் ஏழு உலகங்களாக இருப்பவனே, உடலுக்குப் பொருந்தாத நஞ்சினை அருந்தியும், உயிருடன் இருப்பவனே, அனைவருக்கும் முழுமுதற் கடவுளே, பொறுமையாக இயங்கும் ஞானஒளியே, கயிலை மலையில் உறையும் இறைவனே, உன்னை போற்றி போற்றி என்று பலமுறை போற்றி வணங்குகிறேன்.

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் தொழும் தேவே போற்றி
சென்றேறி எங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக்கு எல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத்திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 9

விளக்கம்:

மூப்பில்லாத மூத்தவனே, பிறத்தல் இறத்தல் இல்லாதவனே, இயற்கையாகவே தோன்றி விளங்குபவனே, தேவர்களின் தலைவர்களும் தொழும் தேவனே, உலகெங்கும் பரவி இருப்பவனே, வருந்தும் அடியேனுக்கு அனைத்துமாய் ஆனவனே, பொன் திரண்டு காணப்படுவது போன்ற கயிலை மலையில் உறையும் இறைவா, பல துன்பங்களிலிருந்தும் அடியேனைக் காப்பாயாக என்று வேண்டி உன்னை போற்றி போற்றி என்று பலமுறை போற்றி வணங்குகின்றேன்.

நெடிய விசும்போடு கண்ணே போற்றி
நீள அகலம் உடையாய் போற்றி
அடியும் முடியும் இகலி போற்றி
அங்கொன்று அறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலாய் என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 10

விளக்கம்:

பெரிய பரப்பினை உடையவராகி ஆகாயத்தை இருப்பிடமாய் அமைந்தவனே, அனைத்துப் பொருட்களின் நீளத்தையும் அகலத்தையும் கடந்தவனே, தங்கள் திறமையை நிரூபிக்க உனது அடிமுடி காண முயன்ற மால் அயன் முன்னே உயர்ந்த அழலாய் நின்றவனே, மார்க்கண்டேயனின் உயிரைக் கவர வந்த இயமனை காலால் உதைத்து, மார்க்கண்டேயனைக் காத்தவனே, என் சிந்தை குடிகொண்ட பெருமானே, இடியாகவும் மின்னலாகவும் தோன்றிப் பின் மழைபொழிந்து உலகுக்கு அருள்புரிபவனே, கயிலை மலையில் உறையும் இறைவனே உன்னைப் போற்றி போற்றி என்று பலமுறை போற்றி வணங்குகின்றேன்.

உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி
ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்து உகந்த ஈசா போற்றி
பண்ணார் இசையின் சொல் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணாய் உலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 11

விளக்கம்:

உண்ணுதலையும் உறங்குதலையும் நீத்தவனே, வேதப்பொருள் நீயே ஆதலால் ஓதாமலே வேதங்களை உணர்ந்தவனே, உனது பெருமையை எண்ணாமல் கயிலை மலையினை பெயர்த்தெடுக்கத் துணிந்த இலங்கை வேந்தன் இராவணனை உனது கால்விரல்களால் மலையை அழுத்தி அவனுக்கு உண்மை நிலையை உணரச் செய்தவனே, பின்னர் உன்னைப் புகழ்ந்து பண்ணுடன் அவன்

சாமகானம் பாடவும் கேட்டு மகிழ்ந்தவனே. என் சிந்தையுள் புகுந்தவனே, உலகுக்கு கண் போன்று திகழ்பவனே, கயிலை மலையில் உறையும் இறைவனே, உன்னை போற்றி போற்றி என்று பலமுறை போற்றி வணங்குகின்றேன்.

திருவையாற்றில் திருக்கயிலைக்காட்சி:

வடவாறு, வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி ஆகிய ஐந்து ஆறுகள் திருவையாற்றிற்கு அருகில் ஓடுகின்றன. ஐந்து ஆறுகள் ஓடுவதால் இத்திருத்தலம் திருவையாறு என ஆகியது என்பர்.

முனிவர் உருவில் வந்த இறைவன் காட்டிய பொய்கையில் மூழ்கிய திருநாவுக்கரசர் திருவையாற்றில் உள்ள ஒரு குளத்தில் எழுந்தார். திருவையாறு திருக்கோவிலின் வடமேற்கே உள்ள **சமுத்ர தீர்த்தம்** என்ற குளத்திலிருந்தான் கரையேறினார்.

அத்திருக்கோயில் திருக்கயிலை மலையாக விளங்கிற்று. வெள்ளி மலையாகிய கயிலையில் மரகதம் போன்ற நிறமுடைய உமையம்மையுடன் ஒளிவீசும் பவளக்குன்று போல் சிவபெருமான் வீற்றிருப்பதை அப்பர் கண்டார். திருவையாறு திருக்கோயிலில் திருநாவுக்கரசருக்கு சிவபெருமான் தனது கயிலைக் காட்சியைக் காட்டி அருளினான். அந்த காட்சி மறைந்தது. தாம் கண்ட காட்சியை உலகத்தவர் அறிய **"கண்டறியாதன கண்டேன்"** என்ற பதிகம் பாடிக் கயிலைக் காட்சியைக் குறிப்பிட்டார். இப்பதிகத்தின் பத்து பாடல்களிலும் சிவனும் சக்தியும் ஒன்றிய திருக்கோலத்தைக் குறித்து பாடியுள்ளார். பதிகத்தின் முதல் பாடல் மட்டும் தரப்பட்டுள்ளது.

மாதர் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல் ஐயாறு அடைகின்ற போது

காதல் மடப் பிடியொடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்

விளக்கம்:

விரும்பி பிறையை முடியில் மாலையாகச் சூடிய பெருமானை மலைமகள் (பார்வதி) உடன் இணைத்துப் பாடியவர்களாய், அபிடேக நீரும், அருச்சிக்கும் மலரும் தலையில் தாங்கி, திருக்கோயிலை நோக்கிப் புகும் அடியவர்பின் அடியேன் சென்றேன். கயிலை மலைக்குச் சென்றபோது ஏற்பட்ட சுவடு ஏதும் தோன்றாத வகையில், தீங்கு நீங்கிய உடல் கொண்டு, திருவையாற்றை அடைகின்ற பொழுதில் விருப்பத்திற்குரிய பெண் யானையொடு ஆண் யானை சேர்ந்து இரண்டுமாக வருவன கண்டு அடியேன் அவற்றை சக்தியும் சிவனுமாகக் கண்டதனால் திருப்பாதம் சிவானந்தம் ஆகிய முன் கண்டறியாதனவற்றைக் கண்டவனானேன்.

பல நாட்கள் திருவையாற்றில் இருந்து பதிகங்கள் பாடினார் அப்பர். **திருநெல்வேலி சென்று** நெல்லையப்பரை வழிபட்டார். மீண்டும் சோழ நாட்டுத் திருத்தலங்களைத் தரிசித்து **திருப்புகலூர்** அடைந்தார். அங்கு தங்கியிருந்தபோது பல பதிகங்களை இயற்றினார். **நின்ற திருத்தாண்டகம், தனித்திருத்தாண்டகம், பாபநாசப் பதிகம் இவை குறிப்பிட்டுக் கூறலாம்.**

நாவுக்கரசர் உழவாரப் பணி செய்த வேளையில் திருக்கோயில் பிரகாரத்தில் இறைவன் பொன், வைரக் கற்களைத் தோற்றுவித்தான். ஓடும் பொன்னும் ஒன்றே என எண்ணிய நாவுக்கரசர் அவற்றை விலக்கித் தள்ளினார்.

ஆடைகள் நழுவ ஆடிப்பாட ஆடல் பெண்களை அனுப்பினான் இறைவன். நாவுக்கரசர் **''பொய் மாயப் பெருங்கடலில்'' என்று தொடங்கும் பதிகம் பாடினார்.** பெண்கள் அப்பரை வணங்கிச் சென்றனர். **அப்பதிகத்தின் முதல் பாடல் :**

பொய்மாயப் பெருங்கடலில் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை அரித்துத் தின்பீர்க்கு
இல்லையே கிடந்ததுதான் யானேல் வானோர்
தம்மானத் தலைமகனைத் தண்நல் ஆரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை அடங்கச் செய்யும்
எம்மான்தன் அடித்தொடர்வான் உழிதர்கின்றேன்
இடையிலேன் கெடுவீர்கள் இடறேல் மின்னே

விளக்கம்:

நிலையற்ற, அழியக்கூடிய உலகப் பொருட்களாகிய பெரிய கடலில் தடுமாறும் நல்வினை, தீவினைகளே, நிலையற்ற கடல் போன்ற பெரிய உடலினை, சிறிறு சிறிதாக அரித்து உண்ண நினைக்கும் உங்களுக்கு, நீங்கள் அரிப்பதற்கு உரிய பொருள் எதுவும் என்னிடத்தில் இல்லை. வானோர்களுக்கும் எனக்கும் தலைவனாகவும், சோலைகள் சூழ்ந்தபடியால் குளிர்ந்து காணப்படும் திருவாரூர் நகர்தன்னில் உறையும் பெரிய கடல் போன்றவனை, தனது அடியார்களைத் தனது திருவடி நிழலில் இன்பத்தில் திளைக்கும் திருவடிப்பேறு கிடைக்கச் செய்யும் சிவபெருமான் திருவடிகளைத் துதிப்பதில் ஈடுபட்டுள்ளேன். நான் செய்யும் அப்பணியைத் தடுக்காதீர்கள்.

திருநாவுக்கரசர் தமது பூவுலக வாழ்வை விட்டு, இறைவன் திருவடியை அடையும் தருணம் வந்ததை உணர்ந்து அந்த விருப்பத்தை இறைவனிடம் கூறினார்.

"புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே"

என்று பாடினார். இந்த பதிகம் முழுவதும் தரப்படுகிறது.

தேவர்கள் மலர் மாரிபொழிய தேவ துந்துபிகள் முழங்க சித்திரை மாத சதயத் திருநாளில் சிவானந்த ஞான வடிவாய், சிவபெருமான் திருவடிக் கீழ் அமர்ந்தார்.

திருப்புகலூர் திருத்தாண்டகம்

எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்இலேன் மற்றுஓர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுள்ளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்கஅடைக் கும்போது உணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 1

விளக்கம்:

அழகிய திருப்புகலூர் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள புண்ணியனே, உன் திருவடியை நினைப்பதன்றி வேறு காட்சியைக் காண விரும்பவில்லை. உனது வீரக்கழல் அணிந்த திருவடியைக் காண்பது தவிர வேறு செயல் இல்லை. ஓர் உடம்பில் ஒன்பது துளைகள் வைத்தாய். இவை ஒன்றுசேர அடைபடும்போது (உயிர் பிரியும்போது) உன்னை உணர இயலாது. உன் திருவடியை அடைகின்றேன் ஏற்றுக் கொள்வீராக!

அங்கமே பூண்டாய் அனல்ஆ டினாய்
ஆதிரையாய் ஆலநிழலாய் ஆன்ஏறு ஊர்ந்தாய்
பங்கம்ஒன்று இல்லாத படர்சடை யினாய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த்து ஆண்டாய்
சங்கைஒன்று இன்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுஉண்டு சாவா மூவாச்

சிங்கமே உன் அடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே. 2

விளக்கம்:

திருப்புகலூர் எழுந்தருளியுள்ள தேவர்களுக்கும் தேவனே! எலும்புகளை அணிகலன்களாக அணிந்தவனே, கையில் அனலை வைத்து ஆடுபவனே, இடபம் ஏறி ஊர்த்தவனே, ஆதிரை விண்மீனுக்கு உரியவனே, குறை ஒன்றும் இல்லாத படர்ந்த சடையை உடையவனே, கல்லால மர நிழலில் அமர்ந்து அறம் உரைத்தாய். இறந்த பிரமன், விஷ்ணுக்களின் எலும்புகளைத் தோளில் சுமந்தவனே, பகை உணர்வுடைய பாம்பையும் சந்திரனையும் ஒரே இடத்தில் உன் சடையில் வைத்து பகையைப் போக்கியனே, தேவர் வேண்டிட, வேறு எண்ணம் ஏதுமின்றி பாற்கடலில் தோன்றிய நஞ்சை உண்டு, சாதலும் மூப்பும் இல்லாமல் உள்ளவனே, இப்பொழுது அடியேன் திருவடியை அடைகின்றேன், ஏற்பாயாக!

பைஅரவக் கச்சையாய் பால்வெண் நீற்றாய்
பளிக்குக் குழையினாய் பண்ஆர் இன்சொல்
மைவிரவு கண்ணாளைப் பாகம் கொண்டாய்
மான்மறிகை ஏந்தினாய் வஞ்சக் கள்வர்
ஐவரையும் என்மேல் தரவு அறுத்தாய்
அவர்வேண்டும் காரியம்இங்கு ஆவது இல்லை
பொய்உரையாது உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 3

விளக்கம்:

அழகிய பூம்புகலூர் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள புண்ணியனே! படம் எடுக்கும் பாம்பைக் கச்சையாக அணிந்துள்ளாய். பால் போல் நிறமுடைய வெள்ளைத் திருநீற்றை மேனியெங்கும்

பூசியுள்ளாய். பளிங்குபோல் வெந்நிறச் சங்கினை குழையாக அணிந்துள்ளாய். பண்போல் இன்சொல் பேசுகின்ற, மை பூசிய கண்களை உடைய உமாதேவியை உடம்பின் ஒரு பாகமாகக் கொண்டவனே, கையில் மான்கன்றை ஏந்தி இருக்கிறாய். கள்வரைப் போன்ற ஐம்புலன்களும் என்னிடம் வராமல் தடுத்துவிட்டாய். அவர்களால் எனக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. நான் பொய் சொல்லவில்லை. அடியேன் உன்னுடைய திருவடியை அடைகின்றேன்.

தெருளாதார் மூஎயிலும் தீயில் வேவச்
சிலைவளைத்துச் செங்கணையால் செற்ற தேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டம் தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க்கு என்றும்
அருளாகி ஆதியாய் வேதம் ஆகி
அலர்மேலான் நீர்மேலான் ஆய்ந்தும் காணாய்
பொருள்ஆவாய் உன்அடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 4

விளக்கம்:

அழகிய புகலூர் எழுந்தருளியிருக்கும் புண்ணியனே! தங்களின் சிவவழிபாட்டை மறந்து தெளிவு இல்லாத பகைவர் மூவரது முப்புரம் தீயில் சாம்பலாகுமாறு வில்கணை கொண்டு அழித்தவனே, மயக்கமாம் உலகப் பற்றை மறந்து உன்னடி தொழும் அடியார்களின் உள்ளத் தளர்வைப் போக்கிடும் அருளாளனே, தேவர்களுக்கு சாவா மருந்தாகிய அமுதம் ஆகி, நோயினைப் போக்குபவனே, அருளாகி, எப்பொருட்கும் முதலாகி, தேவமானவனே, பிரமும் திருமாலும் காண இயலாத அரிதான பொருளானவனே, உன் திருவடிக்கே வருகின்றேன். என்னை ஏற்றுக்கொண்டு அருள்வாயாக.

நீர்ஏறு செஞ்சடைமேல் நிலாவெண் திங்கள்
நீங்காமை வைத்துஉகந்த நீதி யானே
பார்ஏறு படுதலையில் பலிகொள் வானே
பண்டு அனங்கன் காய்ந்தானே பாவ நாசா
கார்ஏறு முகில்அணைய கண்டத் தானே
கருங்கை களிற்றுஉரிவை கதறப் போர்த்த
போர்ஏறே உன்அடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 5

விளக்கம்:

அழகிய புகலூரில் எழுந்தருளியிருக்கும் புண்ணியனே! கங்கை தங்கிய சிவத்த சடை மீது, ஒளி உமிழும் பிறைச் சந்திரனைச் சூடியவனே, நீதியனே பருத்த மண்டை ஓட்டில் பிச்சை கொள்வோனே, காமனை எரித்தவனே, கரிய நிறக் கண்டத்தை உடையவனே, பாவங்களை நாசம் செய்பவனே, கரிய துதிக்கையை உடைய யானையின் தோலை உரித்து அதன் தோலைப் போத்திய சிங்கமே! உன் திருவடிக்கே வருகிறேன் ஏற்பாயாக.

விரிசடையாய் வேதியனே வேத கீதா
விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச் சூராய்
திரிபுரங்கள் எரிசெய்த தேவ தேவே
திருவாரூர்த் திருமூலட் டானம் மேயாய்
மருவினியார் மனத்துள்ளாய் மாகா ளத்தாய்
வலஞ்சுழியாய் மாமறைக்காட்டு எந்தாய் என்றும்
புரிசடையாய் உன்அடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 6

விளக்கம்:

அழகிய புகலூரில் எழுந்தருளியுள்ள புண்ணியனே! வேதத்தால் புகழப்படுபவனே, வேதத்தைப் பாடுபவனே, விரிந்த சோலைகள் சூழ்ந்த வெண்காடு உறைபவனே, முப்புரங்கள் எரித்த தேவ தேவனே, திருவாரூர் திருமூலட்டானத்தில் விரும்பி உறைபவனே, இனிமையுடையவர் உள்ளம் தன்னில் பொருத்துபவனே, வலஞ்சுழி வள்ளலே, மாகாளம் எழுந்தருளியுள்ளவனே, முறுக்குண்ட சடை உடையவனே, உன் திருவடியை அடைகின்றேன். ஏற்பாயாக!

தேஆர்ந்த தேவனைத் தேவர் எல்லாம்
திருவடிமேல் அலர்இட்டுத் தேடி நின்று
நாஆர்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காஆர்ந்த பொழில்சோலைக் கானப் பேராய்
கழுக்குன்றத்து உச்சியாய் கடவு ளேநின்
பூஆர்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 7

விளக்கம்:

அழகிய புகலூர்த் தலத்தில் எழுந்தருளியுள்ள புண்ணியனே! தெய்வத் தன்மை மிக்க தேவனே, நான்முகனும், திருமாலும் இந்திரனும் தேடிக் கண்டு நின்று திருவடிமேல் மலர்களைத் தூவி, வேதங்களைப் பாடி, நடனம் ஆடி, இளமரச் சோலைகளும் பொழில்களும் சூழ்ந்த கானப்பேரூர் என்னும் திருத்தலத்தில் உறைபவனே, கழுக்குன்றத்து உச்சியில் உள்ளவனே, கடவுளே, உனது பூப்போன்ற திருவடிக்கே வருகின்றேன். ஏற்பாயாக!

நெய்ஆடி நின்மலனே நீல கண்டா
நிறைவு உடையாய் மறைவல்லாய் நீதி யானே

மைஆடு கண்மடவாள் பாகத்தானே
மான்தோல் உடையா மகிழ்ந்து நின்றாய்
கொய்ஆடு கூவிளம் கொன்றை மாலை
கொண்டு அடியேன் நான்இட்டுக் கூறி நின்று
பொய்யாத சேவடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 8

விளக்கம்:

அழகிய புகலூரில் எழுந்தருளியிருக்கும் புண்ணியனே! நெய் ஆடுபவனே, மலமற்றவனே, நீலகண்டனே, குறையேதுமில்லா நிறைவுடையவனே, வேதங்களில் வல்லவனே, நீதியனே, மை பூசிய கண்ணுடைய பார்வதி பங்கனே, மான் தோலை ஆடையாக உடுத்தியிருப்பவனே, மகிழ்ச்சியாக இருப்பவனே, பறித்தல் பொருந்திய வில்வம், கொன்றை மலர் மாலை இவற்றை அடியேன் கொண்டு வந்து உன்னிடத்து சாத்தி, பொய்யில்லாத நின் புகழ் விரிக்கும் பாடல்கள் பாடி வழிபட்டு உன் திருவடிக்கே வருகின்றேன். ஏற்பாயாக!

துன்னம்சேர் கோவணத்தாய் தூய நீற்றாய்
துதைந்து இலங்கு வெண்மழுவாள் கையில் ஏந்தித்
தன்அணையும் தண்மதியும் பாம்பும் நீரும்
சடைமுடிமேல் வைத்துஉகந்த தன்மை யானே
அன்ன நடைமடவாள் பாகத் தானே
அக்குஆரம் பூண்டானே ஆதி யானே
பொன்அம் கழல்அடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 9

விளக்கம்:

அழகிய புகலூர்த் தலத்தில் எழுந்தருளியுள்ள புண்ணியனே! தைத்தல் பொருந்திய கோவணத்தை உடையவனே, தூய திருநீறு

அணிந்திருப்பவனே, மழுவாயுதத்தைக் கையில் ஏந்தி தன்னைச் சார்ந்த குளிர்ந்த பிறை, பாம்பு, கங்கை மூன்றையும் சடை முடிமேல் வைத்து மகிழ்ந்தவனே, அழகிய அன்னம் போல் நடக்கும் உடையாளின் பாகனே, எலும்பு மாலை அணிந்தவனே, முதலாம் பெருமானே, அடியேன் உனது பொன் போன்ற பொன்னால் ஆன திருவடியை அடைகின்றேன். ஏற்று அருள்வாளாக!

ஒருவனையும் அல்லாது உணராது உள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத்து உள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவு அறுத்தாய்க்கு இல்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுந்தேர்மீது ஓடாமைக் காலால் செற்ற
பொருவரையாய் உன்அடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 10

விளக்கம்:

அழகிய புகலூர் என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் புண்ணியனே! உன்னையன்றி வேறு யாரையும் என் உள்ளம் உணராது. என் உணர்வினை மயங்கச் செய்யும் 'நான்' என்னும் அகப்பற்று, 'எனது' என்னும் புறப்பற்று ஆகிய இருவரையும் என்னை நெருங்காமல் அறுத்துவிட்டாய். அதற்கு என்ன கைமாறு செய்யமுடியும். ஏலக்காய் விளையும் மலைகள் சூழ்ந்த இலங்கை வேந்தன் இராவணனின் தேர், மேலே ஓடாமல் காலால் மிதித்து அழித்த போர் செய்யும் திருக்கயிலாய மலையானே! அடியேன் உன் திருவடியை அடைகின்றேன்! ஏற்றியருள்வாயாக.


சுந்தரமூர்த்தி நாயனார்

சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய தேவாரப் பாடல்களின் எண்ணிக்கை 1026

இவர் பாடிய தேவாரம் 7ஆம் திருமுறையில் சேர்க்கப் பட்டுள்ளது. இவர் **இயற்றிய பதிகங்களில்** 100 மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளன.

திருக்கயிலையிலே சிவபெருமானின் தொண்டனானவர் ஆலால சுந்தரர். ஒரு நாள் வழக்கம்போல இறைவனுக்கு மலர்கள் பறிக்க நந்தவனத்துக்குள் சென்றார். **உமையம்மையின் தோழியர் அனிந்திதை மற்றும் கமலினி** இருவரும் மலர் பறித்துக் கொண் டிருந்தனர். சுந்தரருக்கு அவர்கள் மேல் காதல் பிறந்தது. அந்த இளைய மகளிர் இருவருக்கும் சுந்தரர் மீது காதல் ஏற்பட்டது. மூல முதல்வன் சிவபெருமான் ஆலால சுந்தரரின் மனவிருப்பத்தை அறிந்தார்.

‘‘நீ பெண்டிர் மீது காதல் கொண்டாய். மானிடப் பிறப்பெடுத்து, அப்பெண்களுடன் இல்லற இன்பம் துய்த்து, தாகம் தீர்ந்தபின் இங்கு வந்து சேர்வாயாக’’ என்று கட்டளையிட்டார். ஆலால சுந்தரரும் இருகரங்கள் கூப்பி, ‘‘ஐயனே! தங்களைப் பிரிந்து செல்லும் பாவியாகிவிட்டேன். மானிடப் பிறப்பில் நான் மயக்கத்தில் ஆழும்போது, அடியேனைத் தடுத்தாட் கொள்ள வேண்டும்’’ என்று அழுதபடி விண்ணப்பம் செய்தார். பரமனும் ‘‘அவ்வாறே ஆகுக’’ என்று அருள் புரிந்தார். அவ்விரு பெண்களும் பூவுலகில்



வெவ்வேறு இடங்களில் பரவையார், சங்கிலியார் என்ற பெயர்களில் பிறந்தனர்.

சுந்தரரின் திரு அவதாரம்:

திருமுனைப்பாடி நாட்டில் **திருநாவலூரில்** அந்தணர் குலத்தில் **சடையனார்க்கும், இசைஞானியார்க்கும்** மகனாக சுந்தரர் அவதரித்தார். அவரின் இளமைப் பெயர் நம்பியாரூரர்.

குழந்தைப் பருவத்தில் வீதியில் சிறுதேர் உருட்டி விளையாடிக் கொண்டிருந்தார். அந்நாட்டு மன்னர் **நரசிங்க முனையர்** பெற்றோரின் சம்மதத்துடன் சுந்தரரைத் தன் புதல்வராக ஏற்று அரசிளங்குமரனாக அன்புடன் வளர்த்து வந்தார். அந்தணர் குல வழக்கப்படி பூணூல் அணிவித்தும் பற்பல கலைகளைக் கற்கவும் செய்தார்.

திருமணக் கோலமும் இறைவன் தடுத்தாட் கொள்ளலும்:

சுந்தரர் திருமண வயதை அடைந்தார். **புத்தூர் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளை மணம்** பேசி முடித்தனர். திருமண நாளும் வந்தது. மணமகன் மணப்பந்தலை வந்தடைந்தார். குதிரையிலிருந்து இறங்கி வந்தார்.

எல்லாம் வல்ல ஈசன் முன்னரே அளித்த வாக்கின்படி ஆரூரரை தடுத்தாட்கொள்ள திருவுள்ளம் கொண்டார். வயது முதிர்ந்த வேதியராக வேடம் கொண்டு வந்தார். நெற்றியில் திருநீறு, நரைத்தமுடி, காதுகளில் குழை இவை அணி செய்ய கையில் ஒரு கோலுடன் மணமேடையின் அருகில் வந்தார்.

அதுகண்ட ஆரூரரும் அந்தணர்களும் வேதியரை வரவேற்றனர்.

வேதியர் வழக்குரைத்தல் :

வேதியர் ஆரூரரை நோக்கி, ‘‘உனக்கும் எனக்கும் இடையில் ஒரு வழக்கு உள்ளது. அது முடிந்த பிறகுதான் நீ மணவேள்வி

தொடர வேண்டும்'' என்றார். ஆரூரரும், ''வழக்கு இருக்குமானால், அது முடிவுக்கு வராமல் நானும் மணம் செய்து கொள்ள மாட்டேன். வழக்கு என்னவென்று கூறுங்கள்'' என்றார்.

வேதியர் அங்கு கூடியிருந்தோரை நோக்கி, ''இந்நாவலூரான் எனது அடிமை; இதுவே நான் உரைக்கும் வழக்கு'' என்றார். அது கேட்டு நாவலூரார் ஏளனமாகச் சிரித்தார். ''அந்தணர்க்கு அந்தணன் அடிமையாகும் வழக்கம் உலகில் இல்லையே'' என்றார் ஆரூரர். மேலும் ''நீ என்ன பித்தனா?'' என்று வேதியரை வினவினார்.

வேதியர், ''ஏளனம் வேண்டாம். உனது பாட்டன் எழுதிக் கொடுத்த அடிமை ஓலை இதோ இருக்கிறது'' என்றார்.

''ஓலையைக் காட்டுக'' என்றார் சுந்தரர். ''நான் அவையோரிடம் தான் காட்டுவேன்'' என்றார் வேதியர். ஆரூரர் கோபம் கொண்டு வலுக்கட்டாயமாக ஓலையைப் பறித்து கிழித்து எறிந்தார். அருகில் இருந்தோர், ''ஐயனே, உமது ஊர் எது?'' என்று கேட்க, ''அருகில் உள்ள **திருவெண்ணெய்நல்லூர்**'' என்றார் அந்தணர். **திருவெண்ணெய் நல்லூரில்** வைத்து வழக்கை முடித்துக் கொள்ளலாம்'' என ஆரூரர் கூறிட, அனைவரும் ஒப்புக் கொண்டனர்.

திருவெண்ணெய்நல்லூரில் வழக்கு:

அந்தணர் முன்னே செல்ல ஆரூரரும் திருமணம் காண வந்தவர்களும் பின்னே சென்றனர். திருவெண்ணெய்நல்லூரில் அந்தணர்கள் கூடியிருந்த சபையில் "நாவலூர் ஆரூரன் எனக்கு அடிமை. ஓலை காட்டிட கிழித்து விட்டான்; ஆனால் மூல ஓலை என்னிடமே உள்ளதெனக் கூறி அவையோரிடம் மூல ஓலையைக் காட்டினார், அந்தணராக வந்த இறைவன். அதில் "திருநாவலூரில் உள்ள ஆதிசைவனாகிய ஆரூரன் என்னும் நான், திருவெண்ணெய் நல்லூர்ப் பெருமானாகிய பித்தனுக்கு நானும் என் வம்சத்தில்

தோன்றுபவரும் வழிவழியே அடிமைத்தொண்டு செய்து வருமாறு மனமும் செய்கையும் ஒன்றுபட்டு சம்மதித்து இவ்வோலையை எழுதிக் கொடுத்தேன். இது என் கைப்பட எழுதியது" என்றிருந்தது. இதைக் கேட்ட சபையோர் ஆரூரரைப் பார்த்து "இது உங்கள் பாட்டனார் கையெழுத்தா?" என்றனர்.

அதைக் கேட்ட வேதியர், "இவன் பாட்டனாருடைய கையெழுத்தை அறிந்திருக்க மாட்டான். ஆகவே அவர் எழுதிய வேறு ஓலைகள் இருந்தால் அவைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து அறியலாம்" என்றார்.

அவையோரும், ஆவணக் காப்பகத்தில் இருந்து நம்பியின் பாட்டன் எழுதிய வேறொரு ஓலையை வரவழைத்து, ஒப்பிட்டுப் பார்த்து கையெழுத்து ஒத்து இருப்பது அறிந்தனர்.

அவையோர் நம்பியை நோக்கி "நம்பி! நீ முனிவரிடம் தோற்றீர். இனி அவருக்கு அடிமைத் தொண்டு செய்வதே முறை" என்றனர். நம்பி உடன்பட்டார்.

அவையினர் வேதியரைப் பார்த்து "நீவிர் இவ்வூரைச் சேர்ந்தவர் என்று கூறினீரே, இந்த ஊரில் உமது வீடு எங்கே உள்ளது?" எனக் கேட்டனர்.

"இதுவரை எவரும் என்னை அறிந்து கொள்ளவில்லை போலும். என் பின்னே வாருங்கள்" எனக் கூறிய அந்தணர் முன்னே சென்றார். அவையோரும் நம்பியும் பின் சென்றனர். **"திருவருள்துறை"** என்னும் அத்தலத்துத் திருக்கோயிலினுள் புகுந்து அந்தணர் மறைந்தார்.

நம்பி வருந்தி அழைத்தார். வானில் உமையோடு இடபத்தில் இறைவன் காட்சி தந்தார். "முன்பு கயிலையில் உனக்களித்த வாக்கின்படி உன்னைத் தடுத்தாட் கொள்ளவே வந்தோம்" என்றார்.

இது கேட்ட நம்பி உள்ளம் மகிழ்ந்து கைகளைத் தலைக்கு மேல் கூப்பி "வலிய வந்து ஆட்கொண்டது அம்பலத்தில் ஆடும் இறைவனா?" என்று வியந்து நின்றார்.

இறைவனும், "நீ வன்சொல் பேசி, வன்தொண்டன் எனப் பெயர் பெற்றாய். நம்மீது சொற்றமிழ் பாடுக" என்றார்.

சுந்தரர் அவரைத் தொழுதபடியே "வேதியனாய் வந்து ஆட்கொண்ட ஆரமுதே, உன்னிடம் எதை அறிந்து எப்படிப் பாடுவேன்?" என உருகி நின்றார். அதைக் கேட்ட சிவனார், "முன்னர் நீ என்னை பித்தன் என்று திட்டினாய் அல்லவா, அந்த வார்த்தையை முதலாகக் கொண்டு பித்தன் என்றே எடுத்துப் பாடுக" என்று கட்டளையிட்டு அருளினார்.

அந்த அருளை ஏற்று வன்தொண்டர் எனப் பெயர் பெற்ற சுந்தரர், 'பித்தா பிறைசூடி' என்னும் தேவாரப் பதிகத்தைப் பாடினார்.

திருவெண்ணெய்நல்லூர் திருப்பதிகம்

இறைவன் : தடுத்தாட்கொண்ட ஈஸ்வரர்

இறைவி : வேற்கண் மங்கையம்மை

பித்தாபிறை சூடிபெருமானே அருளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத்து உன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்
வெண்ணெய்நல்லூர் அருள்துறையுள்
அத்தாஉனக் காளாயினி அல்லேன் எனல் ஆமே. 1

விளக்கம்:

பித்தனே, பிறையைக் கண்ணியாகச் சூடிய பெருமானே, பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய்நல்லூரில் உள்ள 'அருட்துறை' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தலைவனே, எனது நெஞ்சத்தில் உன்னை அகலாது வைத்தருளினாய். அதனால் எந்நாளும் உன்னை மறவாமல் நினைந்து முன்பே உனக்கு அடியவனாகிய நான் இப்பொழுது "உனக்கு அடியவன் அல்லேன்" என எதிர்வழக்கு பேசியது பொருந்துமோ?

நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்

வேயார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர்
அருள்துறையுள்
ஆயாஉனக் காளாய்இனி அல்லேன்என லாமே. 2

விளக்கம்:

மூங்கில்கள் நிறைந்துள்ள பெண்ணையாற்றின் தென்கரையில் உள்ள திருவெண்ணெய்நல்லூரின்கண் அமைந்த அருட்டுறை திருக்கோயிலின் கண் எழுந்தருளியுள்ள தலைவனே, நாய் போலும் கீழ்மையுடைய நான் உன்னை எனது இளமைக்காலத்தில் மனத்தால் நினைக்காமல் பேய் போல அலைந்து இளைத்தேன்; ஆனாலும் இப்போது உனது திருவருளைப் பெற்றேன். இப்பேற்றை அளிக்குமுன்பே உனக்கு அடிமையான நான் இப்பொழுது 'அடியவன் அல்லேன்' என எதிர் வழக்கு பேசியது பொருந்துமோ?

மன்னேமற வாதேநினைக்கின்றேன் மனத் துன்னைப்
பொன்னே மணிதானேவயி ரம்மே பொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர்அருட் டுறையுள்
அன்னேஉனக் காளாய் இனி அல்லேன் எனலாமே. 3

விளக்கம்:

தலைவனே, கரையை மோதி பொன்னும், மணியும், வைரமும் ஆகியவற்றை தள்ளிக் கொண்டு ஒளிமிக்கு வருகின்ற பெண்ணையாற்றின் தென்கரையில் உள்ள திருவெண்ணெய் நல்லூரின் கண்உள்ள அருட்டுறைத் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள தாய் போன்றவனே, உனக்கு நான் முன்பே அடிமையானேன். இப்போது 'அடியவன் அல்லேன்' என்று எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ? இனிமேல் உன்னை என் மனத்தில் ஒருபோதும் மறவாமல் நினைப்பேன்.

முடியேன் இனிப் பிறவேன் பெறின் மூவேன் பெற்றம்ஊர்தீ
கொடியேன்பல பொய்யேஉரைப் பேனைக்குறிக் கொள்நீ
செடியார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர்
அருட்டுறையுள்
அடிகேள்உனக் காளாய்இனி அல்லேன் எனலாமே. 4

விளக்கம்:

இடபத்தை ஊர்பவனே, ஒளி நிறைந்த பெண்ணையாற்றின் தெற்கே உள்ள திருவெண்ணெய்நல்லூரில் திருவருள்துறை கோவிலில் எழுந்தருளியுள்ள தலைவனே, உனக்கு நான் முன்பே அடிமையானவன். இப்பொழுது 'அடியவன் அல்லேன்' என்று எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ? அப்பொருந்தாமையை நீ அகற்றி என்னை தெளிவித்தால் இனி நான் இறக்கவும், பிறக்கவும் பிறந்து மூப்பு எய்தவும் அதனால் வருந்தவும் ஆற்ற முடியாதவனாய் இருக்கிறேன். கொடியவனாய் பொய்களையே பேசும் என்னை வெறுக்காமல் ஏற்றருள வேண்டும்.

பாதம்பணி வார்கள்பெறு பண்டம்மது பணியா
யாதன்பொரு ளானேன்அறி வில்லேன்அரு ளாளா
தாதார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூரருட்
டுறையுள்
ஆதீஉனக் காளாய்இனி அல்லேன் என லாமே. 5

விளக்கம்:

அருளாளனே! மலர்களின் மகரந்தம் நிறைந்த பெண்ணை யாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய்நல்லூரின்கண் எழுந் தருளியுள்ள முதல்வனே, உனக்கு நான் முன்பே அடியவனானேன். இப்பொழுது 'அடியவன் அல்லேன்' என எதிர்வழக்கு பேசியது பொருந்துமோ? அந்த செயலினால் நான் அறிவில்லாதவன்

ஆனேன். ஆயினும் என்னை இகழாமல் உன் திருவடியை வணங்கி வாழ்கின்ற அறிவுடைய அடியவரின் பேற்றை அளித்தருள்க.

தண்ணார் மதிசூடீதழல் போலுந்திரு மேனீ
எண்ணார்புர மூன்றும்எரி யுண்ணநகை செய்தாய்
மண்ணார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூரருட்
டுறையுள்
அண்ணாஉனக் காளாய்இனி அல்லேன் எனலாமே. 6

விளக்கம்:

குளிர்ச்சியான சந்திரனை முடிமீது சூடியவனே, நெருப்பு போன்ற திருமேனியை உடையவனே, உன்னை மதியாத அரக்கர் களின் கோட்டைகளை தீக்கிரையாக உன்னுடைய ஒரு புன்சிரிப்பால் செய்தவனே, பாவங்களைக் கழுவி புனிதமாக்கும் பெண்ணை யாற்றின் தென்புறம் உள்ள திருவருள்துறையென்னும் கோவிலில் எழுந்தருளியிருக்கும் தலைவனே, நான் உனக்கு முன்பே அடிமையானேன். இப்பொழுது 'அடியேன் அல்லேன்' என எதிர் வழக்குப் பேசியது பொருந்துமோ?

ஊனாய்உயி ரானாய் உட லானாய்உல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்
தேனார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூரருட்
துறையுள்
ஆனாய்உனக் காளாய்இனி அல்லேன் எனலாமே. 7

விளக்கம்:

பூக்களின் தேன் நிறைந்த பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய்நல்லூரின் அருள்துறை கோவிலில் நீங்காது எழுந்தருளியிருப்பவனே, நீ உயிர்களாக, உடல்களாக, வானாக, நிலமாக, கடலாக, மலையாக நிற்கின்றாய். இப்பெருமைகளுடைய

உனக்கு நான் முன்அடிமையாகி இப்பொழுது 'அடியேன் அல்லேன்' என்று எதிர்வழக்குரைப்பது பொருந்துமோ?

ஏற்றார்புரம் மூன்றும்மெரி யுண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோ செக்கர் வான்நீர்
ஏற்றாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
ஆற்றாய்உனக் காளாய்இனி அல்லேன் எனலாமே. 8

விளக்கம்:

பெண்ணையாற்றின் தென்பால் உள்ள வெண்ணெய்நல்லூரின் அருள்துறை திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள நன்னெறியானவனே, உனக்குப் பகையாகி உன்னை எதிர்த்தவர்களின் அரண்கள் மூன்றையும் தீக்கிரையாக்கி அழித்திட்டாய். சிவந்த சடையில் ஆகாய கங்கையைத் தாங்கினாய். இப்பெருமைகளை அறியாமையினால் தோன்றிய சொற்கள் பேசி நான் வீணே உழல்வேனோ? அவ்வாறு உழல்வதால் முன்பு உனக்கு அடிமையாக இருந்த நான், இப்பொழுது 'அடியவன் அல்லேன்' என்று எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ?

மழுவாள்வலன் ஏந்தீமறை போதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தலுன தொழிலே
செழுவார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூரருட்டுறையுள்
அழகாகஉன் காளாய் இனிஅல்லேன் எனலாமே. 9

விளக்கம்:

மழுப்படையை வலப்பக்கத்தில் ஏந்தியவனே, வேதத்தை ஓதுபவனே, உமையை ஒரு பாகத்தில் வைத்தவனே, பெண்ணை

யாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய்நல்லூரில் அருள் துறைக் கோயிலில் எழுந்தருளியுள்ள அழகனே, உன்னை வணங்குபவரின் துன்பங்களை நீக்குதல் உன் தொழிலன்றோ. ஆதலால் என்னை வலியவந்து ஆட்கொள்ள வந்தாய். அதனை அறியாமல் முன்பே உனக்கு அடியவனாகிய நான், அதனை மறந்து இப்பொழுது 'அடியவன் அல்லேன்' என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ?

காரூர்புன லெய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூரருட் டுறையுள்
ஆரூரன்எம் பெருமாற்காள் அல்லேன் எனலாமே. 10

விளக்கம்:

மேகத்தினின்று ஒழுகும் தன்மையுடைய நீர் திரண்டு, பொருந்தி, அலைகளாகிய கைகளால் கரையைக் குத்தி, நிலம் முழுவதும் பரவிய புகழ் பெற்று ஒளிமிக்க பல சிறந்த மணிகளைத் தள்ளி வந்து, அழகு மிகுகின்ற வெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய்நல்லூரில் உள்ள அருள்துறைத் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு ஆரூரன் 'அடியேன் அல்லேன்' என்று எதிர்வழக்கு பேசியது பொருந்துமோ? என்று சுந்தரர் பெருமை போற்றுகின்றார்.

கிழவராக வந்து சிவபெருமான் சுந்தரரின் திருமணத்தைத் தடுத்தாட் கொண்டதால் அவருக்கு **தடுத்தாட் கொண்டருளிய நாயனார்** என்று பெயர். புத்தூரில் இருக்கும் சடங்கவி சிவாச்சாரியாரின் மகள் திருமணம் தடைப்பட்டதால் சுந்தரமூர்த்தி நாயனாரையே தியானம் செய்து சில காலத்திற்குப் பின் சிவலோகம் அடைந்தார்.

சுந்தராின் தலயாத்திரை:

சுந்தரர் தாம் பிறந்த திருநாவலூர் சென்றார். அத்தலத்து இறைவனைப் பாடினார். திருத்துறையூர் சென்று வழிபட்டார். பின் தில்லை நோக்கிப் புறப்பட்டார். பெண்ணை ஆற்றைக் கடந்து திருவதிகை நகரை அடைந்தார். "நாவரசர் உழவாரப்பணி செய்த இத்தலத்தை மிதியேன்" எனச் சொல்லி நகரின் புறத்தே இருந்த சித்தவட மடத்தில் தங்கினார்.

ஈசனை எண்ணியே படுத்திருந்தார். அதே இடத்திற்கு சிவபெருமான் முதிய வேதியர் உருவில் வந்தார். சுந்தரருக்கு அருகில் படுத்துக் கொண்டார். அவரது பாதம் சுந்தரரின் தலைமீது பட்டது.

சுந்தரர் "ஐயா, உமது பாதத்தை என் தலைமேல் ஏன் வைக்கிறீர்?" என்றார். "வயதாகி விட்டதால் திக்கு தெரியவில்லை" என்றார் முதியவர். சுந்தரர் வேறு பக்கமாக தலை வைத்துப் படுத்தார். அப்போதும் முதியவர் கால் சுந்தரர் மேல் பட்டது.

சுந்தரர் "இங்கே என்னைப் பலமுறை மிதித்த நீர் யார்?" என்றார். இதைக் கேட்ட இறைவன் "என்னை நீ அறிந்திலையோ?" என்று கூறி மறைந்து விட்டார். வந்தது இறைவனே என்று உணர்ந்தார் சுந்தரர். உடனே திருவீரட்டானப் பெருமானை **"தம்மானை அறியாத சாதியர் உளரே"** என்று தொடங்கி ஒரு பதிகம் பாடினார். அந்த பதிகத்தின் முதல் பாடல் தரப்படுகிறது.

தம்மானை அறியாத சாதியர் உளரே
சடைமேல்கொள் பிறையானை விடைமேல் கொள் விகிர்தன்
கைம்மாவின் உரியானைக் கரிகாட்டில் ஆடல்
உடையானை விடையானைக் கறை கொண்ட கண்டத்து
அம்மான்தன் அடிக்கொண்டு என்முடிமேல் வைத்திடும் என்னும்

ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை எறிகெடில வடவீரட்டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன் போல் யானே

விளக்கம்:

தலைவனை அறியாதார் இவ்வுலகில் உளரோ? அவ்வாறிருக்க கருமை நிறக் கண்டத்தை உடைய எம் தலைவன் தன் திருவடியை என் தலைமேல் வைப்பான் என்னும் ஆசையில் வாழ்ந்து வந்த அறிவில்லாத நாய் போன்ற இழிய குணம் உடையவனாகிய நான், சடையில் சந்திரனைச் சூடிய காளையின் மீதேறி வருபவன், யானையின் தோலை உரித்துப் போர்த்தியவன், சுடுகாட்டில் நடனம் ஆடுபவன், இடபக் கொடியை உடையவன், எம்மை ஆட்கொண்ட தலைவன், அலை வீசும் கெடில நதிக்கரையில் உள்ள வீரட்டானம் என்னும் கோயிலில் உறைபவன் ஆகிய இறைவன் அச்செயலைச் செய்ய வந்தான். ஒரு சிறு பொழுது இகழ்ந்து மதியாது இருந்து விட்டேன் போலும்.

தில்லை தரிசனம்:

அத்தலத்தை விட்டு புறப்பட்ட ஆரூரர் **திருமாணிக்குழி, திருத்தினை நகர்** ஆகிய தலங்களில் வழிபட்டார். பின்னர் தில்லையின் எல்லையை நெருங்கினார். வடக்கு வாசல் வழியே உள்ளே சென்றார். அவரின் ஐந்து புலன்களில் நான்கு செயலிழந்து போயின. கண் மட்டுமே ஆடும் பெருமானின் அழகில் லயித்தது. அகக்கருவிகளில் சித்தம் மட்டுமே சிவபெருமான் தியானத்தில் ஈடுபட்டது. சாத்துவிக குணம் மேலோங்கியது. இறைவனின் நடனம் கண்டார். அவரின் கண்களின் வழியே வழிந்த கண்ணீர் பேரானந்தக் கடலாகியது. உள்ளம் உருகித் திருப்பதிகம் பாடினார். அப்போது **'திருவாரூருக்கு வா'** என்று அசரீரி ஒலித்தது. தில்லையை வணங்கி சீர்காழிப் பதியை அடைந்தார். திருஞான சம்பந்த நாயனார்

அவதரித்த தலமல்லவா? ஆதலால் தனது கால்களால் மிதிக்கத் தயங்கினார், அஞ்சினார். எல்லைப் புறத்திலேயே இறைவன் பிரம்மபுரீஸ்வரர் காட்சி தந்தார். ஆனந்தத்தில் கூத்தாடிய சுந்தரர் **'சாதலும் பிறத்தலும் தவிர்த்து'** என்னும் பதிகம் பாடி இறைவனைத் துதித்தார்.

திருக்கழுமலம் என்பது சீர்காழிக்கு வேறொரு பெயர். அத்திருத்தலத்தில் சுந்தரர் பாடி அருளிய பதிகத்தின் முதல் பாடல்.

சாதலும் பிறத்தலும் தவிர்த்து எனை வகுத்துத்
தன்அருள் தந்தஎம் தலைவனை மலையின்
மாதினை மதித்துஅங்குஒர் பால்கொண்ட மணியை
வருபுனல் சடைஇடை வைத்த எம்மானை
ஏதில்என் மனத்துக்குஓர் இரும்புஉண்ட நீரை
எண்வகை ஒருவனை எங்கள் பிரானைக்
காதில்வெண் குழையானைக் கடல்கொள மிதந்த
கழுமல வளநகர் கண்டுகொண்டேனே.

விளக்கம்:

சாதலும் பிறத்தலும் ஆகிய இரண்டில் இருந்தும் என்னை விலக்கி, தனது அருளால் என்னை ஆட்கொண்ட தலைவனை, மலைமகளைத் தன் உடம்பில் இடப்பாகத்தில் வைத்தவனை ஆகாய கங்கையைத் தன் சடைமுடியில் தாங்கியவனை என்மனத்தை பழுக்கக் காய்ச்சிய இரும்பு உண்ட நீர்போல் என்னை ஈர்த்தவனை, காதில் வெண்குழை அணிந்த எம் தலைவனை, ஊழிக்காலத்தில் உலகம் முழுவதையும் கடல் மூடியபோது தோணியாய் மிதந்த கழுமல வளநகரில் கண்டு கொண்டேன்.

ஊழி வெள்ளத்தில் தோணி போல் மிதந்ததால் இத்தலத்திற்கு 'தோணிபுரம்' என்று பெயர். இத்திருத்தலத்திற்கு பன்னிரண்டு பெயர்கள் உண்டு. அவை முன்னரே திருஞான சம்பந்தர் வாழ்க்கை வரலாற்றில் கொடுக்கப்பட்டுள்ளன.

திருக்கழுமலத்து இறைவனை வழிபட்டு, பாடித்துதித்த பின் திருப்புன்கூர், மயிலாடுதுறை, திருப்புகலூர் ஆகிய திருத்தலங் களுக்குச் சென்று திருவாரூரை அடைந்தார்.

ஆரூரருக்கு அளித்த வரவேற்பு:

"நான் அழைக்க என்னை நாடி வரும் ஆரூரானை எதிர்கொண்டு வரவேற்பீர்" என்று திருவாரூர் மக்களின் கனவில் எழுந்தருளி சிவபெருமான் அறிவித்தார்.

மங்கலக் கருவிகள் முழங்கின. எங்கும் ஆரவாரமும் மகிழ்ச்சியும் நிலவியது. சுந்தரமூர்த்தி நாயனார் வந்தார். அனைவரும் வணங்கி, வரவேற்றனர். கரங்கள் கூப்பி அவரும் வணங்கினார். "எந்தை இருப்பதும் ஆரூர்; அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்" என்னும் பதிகம்பாடி பஞ்சாங்க நமஸ்காரம் செய்து தேவாசிரிய மண்டபத்தைத் தொழுது மூலட்டானம் அடைந்து புற்றிடம் கொண்ட பெருமானை வழிபட்டார்.

அப்போது புற்றிடம் கொண்ட பெருமான் "ஆரூரா! நாம் உனக்கு தோழரானோம். மணநாளில் இருந்தாற்போல் அலங்காரங்களைச் செய்து கொண்டு மகிழ்ச்சியாக இரு" என்று அசரீரிக் குரல் கொடுத்தார். ஆரூரர் மகிழ்ந்தார். பின்னர் தியாகராசர் சந்நிதி சென்று வழிபட்டார். அந்நாள் முதல் சுந்தரர் தம்பிரான் தோழர் என்று அனைவராலும் அழைக்கப்பட்டார்.

சுந்தரர் – பரவையார் திருமணம்:

உமாதேவியின் சேடியர்களில் ஒருவரான **கமலினி** என்பவள் திருவாரூரில் உருத்திர கணிகையர் குலத்தில் '**பரவையார்**' என்ற

பெயரில் பெண்ணாக வளர்ந்து வந்தார். நாள்தோறும் ஆலயம் சென்று பக்தி செலுத்தி வந்தாள். ஒரு நாள் சுந்தரர், ஆலயத்தில் பரவையாரைப் பார்த்தார். அவளின் அழகு அவரைக் கவர்ந்தது. பரவையாரும் கணிகையர் குலத்தில் பிறந்திருந்தும் எவரையும் ஏறிட்டுப் பார்க்காதவர். அவளும் சுந்தரரைக் கண்டு காதல் கொண்டார்.

இறைவன் திருவாரூர் அடியார்கள் கனவில் தோன்றி சுந்தரனுக்கும் பரவையாருக்கும் திருமணம் செய்து வைக்கச் சொன்னார். பரவையாரின் கனவில் சென்று, "உனக்கும் சுந்தரனுக்கும் விரைவில் திருமணம் நடக்கும்" என்றார். சுந்தரரின் கனவிலும் தோன்றினார். "பரவையை உனக்கு மனைவியாகத் தந்தோம். ஊர் மக்களுக்கும் அறிவித்தோம்" என்றார். இறைவன் ஆணைக்கு இணங்கிய ஊர்மக்களும் சுந்தரருக்கும் பரவையாருக்கும் திருமணம் செய்து வைத்தனர். சுந்தரரும் வாழ்க்கைத்துணையுடன் அறவழியில் சிவநெறியில் வாழ்க்கையை நடத்தினார்.

ஒரு நாள் கோயிலை அடைந்தவர் தேவாசிரிய மண்டபத்தில் கூடியிருந்த அடியார்களைக் கண்டார். ஆனால் அவர்களை வணங்காமல் சென்றார். அதைப் பார்த்த **விறண்மிண்டர்** என்னும் தொண்டர் கோபம் கொண்டார். "இந்த கூட்டத்தில் சேர இனி வன்தொண்டனுக்கு தகுதியில்லை என ஒதுக்கி வைப்போம்" என்றும் "அதோடு அவனை வலிய வந்து ஆட்கொண்ட சிவபெருமானும் புறம்பு" என்றார்.

இதனைக் கேட்ட சுந்தரருக்கு அடியார்களுக்காக இறைவனையே ஒதுக்கி வைக்கும் பக்தி வியப்பளித்தது. அடியார் கூட்டத்திலிருந்து விலக்கியது குறித்து வேதனை கொண்டார். சந்நிதி சென்று இறைவனை வழிபட்டார்.

"புனிதமான வாழ்க்கை இந்த அடியார்களுடையது. இவர்களுக்கு நான் அடியானாகும் நாள் வாய்க்குமோ" என்று எண்ணினார்.

அவரது உள்ளம் அறிந்த இறைவன் "நீ நம்முடைய அடியார்களைப் பாடு" என்றார். ஆரூரர் "அப்பனே! அடியார்களின் வரலாறு தெரியாத நான் எப்படிப் பாடுவேன்?" என்றார். அதற்கான தன்மையை நீரே அருளல் வேண்டும்" என்றார். இறைவன் **"தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்"** என்று அடியெடுத்துத் தந்து பாடுமாறு செய்து எதிரில் வந்து காட்சியும் தந்தார். நம்பி ஆரூரர், அடியார்களைப் பணிந்து, "அடியேன்" என்று சொல்லி **"திருத்தொண்டத் தொகை"** என்னும் பதிகத்தைப் பாடி நிறைவு செய்தார்.

இந்நூல் தொகை நூல் ஆகும். பின்னர் 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பிகள் திருமுறைகளைத் தொகுத்தார். பின்னர் 'திருத்தொண்டர் திருவந்தாதி' பாடினார். இது வகை நூல் ஆகும். 12ஆம் நூற்றாண்டில் நாயன்மார்கள் வரலாற்றை **'திருத்தொண்டர் புராணம்'** என்று சேக்கிழார் பாடினார். இது விரிநூல் ஆகும்.

திருத்தொண்டத் தொகையைப் படிப்பதால் நாயன்மார்களின் திருநாமங்களை மொழிந்தவர் ஆவோம்.

இறைவன் : புற்றிடங்கொண்டார்

இறைவி : அல்லியம் பூங்கோதை

திருத்தொண்டத் தொகை

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே எண்ணாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில் சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 1

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தற்கு அடியேன்
ஏனாதி நாதன்தன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்கு அடியேன்
கடவூரில் கலயன்தன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாள்தாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 2

மும்மையால் உலகுஆண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டுஎழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கரையன்தன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க்கு அடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 4

வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலால் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 5

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்எறிந்த சாக்கியர்க்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க்கு அடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேல்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 6

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழில்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற்கு அடியேன்
மெய்அடியான் நரசிங்க முனையர்க்கு அடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தர்க்கு அடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 7

கறைக்கண்டன் கழல்அடியே காப்புக்கொண்டு இருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருள்அகற்றும் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 8

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல் சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாம் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலிஅதள்மேல் அரவுஆட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 9

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 10

மன்னியசீர் மறை நாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மாணிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க்கு அடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க்கு அடியேன்
என்னவனாம் அரன்அடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமை கேட்டு உவப்பார்
ஆரூரில் அம்மானுக்கு அன்பர் ஆவாரே. 11

குண்டையூரில் எம்பெருமான் நிகழ்த்திய அற்புதம்:

சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூரில் நாள்தோறும் முக்காலமும் சுவாமி தரிசனம் செய்து கொண்டு பரவையாருடன் வாழ்ந்திருந்தார். வேளாளராகிய குண்டையூர்க்கிழார் என்பார் சுந்தரரின் மகிமைகைளைக் கேள்விப்பட்டார். சுந்தரரின் அடிபணிந்து வழிபட்டார். பரவையாரின் வீட்டுக்கு நெல்லும் பருப்பும் பிற உணவுப் பொருள்களும் நீண்ட நாட்கள் அனுப்பி வைத்தார்.

ஒருமுறை மழையின்மையால் வளம் சுருங்க, "சுந்தரமூர்த்தி நாயனார் திருமாளிகைக்கு அனுப்ப நெல் போதாத நிலை கண்டேன். என்ன செய்வேன்" என்று வருந்தினார். இறைவனை எண்ணி இரவு உணவு உண்ணாமல் உறங்கச் சென்றார். சிவபெருமான் அவரின் கனவில் தோன்றி "சுந்தரனுக்கு அனுப்புவதற்கு நெல் தந்தோம்" என்று கூறி மறைந்தார்.

விடிந்தவுடன் எழுந்து பார்த்தால் ஊர் முழுக்க நெல் மலையாகக் குவிந்திருந்தது. அத்தனை மூட்டைகளையும் திருவாரூர்க்கு எப்படி அனுப்புவது என்ற கவலை வந்தது. சுந்தரரைக் கண்டு செய்தியைச் சொன்னார். போதிய அளவு ஆட்கள் தன்னிடம் இல்லையே என்றும் கவலையோடு கூறினார். சுந்தரர் ஒரு பதிகம் பாடினார். "இறைவா இந்நெல்லை திருவாரூர்க்கு எடுத்துச் செல்ல ஆளில்லை. இதனை அங்கு சேர்க்க வழிகாட்டி அருள வேண்டும்" என்று பாடினார். இப்பதிகம் பாடப்பட்ட திருத்தலம் **திருக்குவளைத்** திருக்கோளிலி என்றும் அழைக்கப்படும். திருவாரூர்க்கு அருகில் உள்ளது. அங்கு அவர் பாடிய பதிகத்தின் முதல் பாடல் தரப்படுகின்றது.

நீளநினைந்து அடியேன் உனை
நித்தலும் கைதொழுவேன்

வாள்அன கண்மடவாள் அவள்
வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டை
யூர்சில நெல்லுப் பெற்றேன்
ஆள்இலை எம்பெரு மான்அவை
அட்டித் தரப்பணியே

விளக்கம்:

திருக்கோளிலி தலத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானே, வாள் போன்ற கூரிய கண்களை உடைய பரவையார் அடியார்களை உபசரிக்கப் பொருள் இன்றி வருத்தம் கொள்ளாமல் இருக்க குண்டையூரில் நெல் கிடைக்கப் பெற்றேன். அதனைக் கொண்டு சேர்க்க ஆளில்லை. உம்மையே வணங்குகிறேன். ஆதலால் அந்த நெல்லைக் கொண்டு வந்து சேர்க்கும்படி எவரிடமாவது பணிப்பீராக.

அன்று இரவே இறைவன் பூதகணங்களை அனுப்பி நெல் முழுவதையும் திருவாரூர்க்கு கொண்டு சேர்த்தார்.

விடிந்ததும் பார்த்தால் பரவையாரின் மாளிகை முன்னால் நெல் மலையாகக் காணப்பட்டது. ஊர்மக்கள் நெல்லைப் பெற்று பசியாறி இறைவனோடு சுந்தரரையும் போற்றினார்கள்.

கோட்புலி நாயனார் சுந்தரரை தன் வீட்டுக்கு அழைத்தல்:

சில நாட்கள் கடந்தன. திருநாட்டியத்தான்குடியில் வசிக்கின்ற கோட்புலி நாயனார் சுந்தரமூர்த்தி நாயனாரைச் சந்தித்து, வணங்கி தங்கள் ஊருக்கு வரவேண்டுமென்று அழைத்தார். சுந்தரரும் மகிழ்ந்து ஒப்புக் கொண்டார். திருநாட்டியத்தான்குடியை அடைந்தார். கோட்புலியார் தம்முடைய வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

திருவமுது செய்வித்தார். அவருக்கு **சிங்கடியார், வனப்பகையார்** என்று இரண்டு பெண்கள் இருந்தனர். அவர்களை அழைத்து சுந்தரரை வணங்குமாறு செய்து "பெருமானே, அடியேனின் மகள்கள் ஆன இவர்கள் இருவரையும் தங்கள் அடிமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று வேண்டினார். சுந்தரர் அதற்கு சம்மதிக்கவில்லை. **"இப்பெண்கள் இருவரும் எனக்கு புத்திரிகள்"** என்று சொல்லி தொடையின்மீது அமர்த்தி உச்சி மோந்து அவர்கள் விரும்பியதைத் தந்தருளினார். பின்னர் பரமசிவன் வீற்றிருக்கும் ஆலயத்தை அடைந்தார். இறைவனை வணங்கி 'பூணாணவ தொரவம்' என்னும் பதிகம் பாடினார். சிங்கடியாருக்கு தன்னை அப்பனாக நினைத்ததால் 'சிங்கடியப்பன்' என்ற சொல்லை வைத்தருளினார்.

செங்கற்கள் பொன்னாக மாறிய அற்புதம்:

சுந்தரர் மீண்டும் திருவாரூரை அடைந்தார். பரவையாருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்திருந்தார். பங்குனி உத்திரத்திருநாள் அருகில் வந்தது. பரவையார் தான தருமங்கள் செய்யப் பொருளின்றி வருந்தினார். சுந்தரர் பொருள் திரட்டுவதற்காக அடியார்களுடன் திருப்புகலூரை அடைந்தார். கோவிலுக்குள் சென்று இறைவனை வணங்கி பதிகம் அருள் செய்ய வேண்டி பாடினார். கோயில் முன்பு இருக்கும் இடத்தில் அடியார்களுடன் மேல்துண்டை தரையில் விரித்து படுத்துக் கொண்டார். தலையணை இல்லை. எனவே திருப்பணிக்கு வைத்திருந்த செங்கற்கள் சிலவற்றை உயரமாக அடுக்கி தலையணை போல் வைத்து உறங்கினார்.

காலையில் எழுந்தபோது செங்கற்கள் யாவும் தங்கக் கட்டிகளாக மாறி இருந்தன. வேண்டும் வரம் தரும் இறைவனின் வள்ளல் தன்மை கண்டு அனைவரும் மெய்சிலிர்த்தனர். ஆலயத்தினுள் சென்றார். உடலும் உள்ளமும் உருகத் தொழுதார்.

"தம்மையே புகழ்ந் திச்சை பேசினும்' என்னும் திருப்பதிகம் பாடினார். அப்பதிகத்தின் முதல் பாடல் தரப்படுகின்றது.

இத்தலம் நன்னிலம் என்னும் ஊருக்கு அருகில் உள்ளது. முருகநாயனார் அவதரித்த தலம். திருநாவுக்கரசர் முக்தி அடைந்த தலம். முருக நாயனார் திருமடத்தில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் மற்றும் பல அடியார்கள் பல நாட்கள் தங்கி இருந்த சிறப்பை உடையது இத்தலம்.

தம்மை யேபுகழ்ந்து இச்சை பேசினும்
சார்கினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்த லாம்இடம் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே

விளக்கம்:

புலவர்களே, பொய்மையாளரைப் புகழ்ந்து பாடாதீர். அவர்கள் விரும்பியபடி பேசிடினும், சார்ந்து இருந்தாலும் தொண்டர்களுக்கு உதவ மாட்டார்கள். எனவே நம் தந்தையாகிய புகலூர் பெருமானைப் புகழ்ந்து பாடுங்கள். அவன் இம்மையில் உணவும் உடையும் தருவான். மறுமையில் சிவலோகத்தைத் தருவான். இதில் சிறிதேனும் சந்தேகம் இல்லை. ஆதலால் அவனைப் புகழ்ந்து துன்பத்திலிருந்து விடுபடுங்கள்.

பிறகு சுந்தரர் பொற்குவியலுடன் **திருப்பனையூருக்கு** வெளியில் தங்கினார். சிவபெருமானின் கூத்தாடுங் காட்சியைக் கண்டார். சுந்தரமூர்த்தி நாயனார் எதிர்ச் சென்று "மாட மாளிகை" என்று திருப்பதிகம் எடுத்து "அரங்கிலாட வல்லாரவரே யழகியரே" என்று பாடி திருவாரூரை அடைந்தார்.

இறைவனின் திருக்கூத்தாடும் காட்சி கண்ட சுந்தரமூர்த்தி நாயனார் பாடி அருளிய பதிகத்தின் முதல் பாடல் தரப்படுகின்றது.

மாட மாளிகை கோபு ரத்தொடு
மண்ட பம்வள ரும்வ ளர்பொழில்
பாடல் வண்டறையும் பழனத் திருப்பனையூர்த்
தோடு பெய்தொரு காதி னிற்குழை
தூங்கத் தொண்டர்கள் துள்ளிப் பாடநின்று
ஆடு மாறுவல்லார் அவரே அழகியரே

விளக்கம்:

மாட மாளிகைகள், கோபுரங்கள், மண்டபங்கள் நிறைந்து விளங்கும் வளரும் சோலைகளில் வண்டுகள் இசை பாடுவதும், வயல்களால் சூழப்பட்டதும் ஆகிய திருப்பனையூர் என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் ஒரு காதில் தோடும் மற்றொரு காதில் குழையும் அணிந்து தொண்டர்கள் சூழ்ந்து நின்று ஆடிப்பாடவும் அவர்களோடு சேர்ந்து ஆடுவதில் வல்லவராகவும் விளங்கும் அப்பெருமானே அழகில் சிறந்தவர் ஆவார். திருவாரூரை அடைந்தவர் பரவையாருடன் தங்கி மகிழ்ந்திருந்தார்.

சிறிது காலம் கழித்து பரவையாரிடம் விடைபெற்று திருநன்னிலம், திருவீழிமிழலை திருவாஞ்சியம், திருநறையூர், திருவாவடுதுறை, திருவிடைமருதூர், திருநாகேச்சுரம், திருவையாறு, கும்பகோணம், திருவலஞ்சுழி, திருச்சோற்றுத்துறை, திருப்பூந்துருத்தி எனப் பல திருத்தலங்களுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தார். **திருவாலம்பொழில்** அடைந்து இறைவனை வழிபட்டார். அன்றிரவு, அவரது கனவில் பெருமான் தோன்றி, **"மழபாடிக்கு வருதற்கு மறந்தாயோ?"** என்று சொல்லியருளினார். சுந்தரமூர்த்தி நாயனார் விழித்தெழுந்து, காலையில் அன்பர்களோடு காவிரி நதியைக்

கடந்து அதன் வட பக்கத்திலிருந்து திருமழபாடிக்குச் சென்றார். பெருமானைத் தரிசித்தார்.

'பொன்னார் மேனியனே' என்னும் திருப்பதிகம் பாடினார். அந்த பதிகத்தின் முதல் பாடலும் விளக்கமும் தரப்படுகின்றது.

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

விளக்கம்:

''பொன்போன்ற நிறம் கொண்ட திருமேனியனே, புலித்தோலை இடையில் ஆடையாக உடுத்து, மின்னல் போல் ஒளிவீசும் சிவந்த சடையில் கொன்றை அணிந்தவனே, நிலையான மெய்ப் பொருளே, மாணிக்கமணியே, திருமழபாடி என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் நாதரே, தாய் போன்றவரே, உன்னையன்றி வேறு யாரை இனி நினைப்பேன்?'' காவிரி நதியின் இருபக்கத்திலுமுள்ள தலங்களைத் தரிசித்தார். மேற்கில் தலயாத்திரை செய்ய விரும்பினார் திருவானைக்காவை அடைந்தார். சிவபெருமானை வணங்கி "மறைகளாயின நான்கும்'' என்னும் திருப்பதிகம் பாடியருளினார். பின்னர் திருப்பாச்சிலாச்சிரமத்தை அடைந்தார். இறைவனிடம் பொன் கேட்டார். பெருமான் சற்று தாமதித்தார். சுந்தரருக்கு சற்று கோபம் வந்துவிட்டது. இவர் இல்லாவிட்டால் நமக்கு வேறு ஆள் இல்லையா? என்று எண்ணினார். அக்கருத்து தொனிக்க, "வைத்தனன் தனக்கே தலையும் என் நாவும்" என்று திருப்பதிகம் பாடினார். அந்த பாட்டின் இறுதியில் "இவ்வரல்லது இல்லையோ பிராமணர்!" என்று பாடினார்.

இவ்வாறு சுந்தரர் மனம் வருந்தி பாமாலை சூட்டினார். மேலும் தாமதிக்க விரும்பாத இறைவன் பொற்குவை வழங்கினான்.

அதனைப் பெற்றுக் கொண்டு சிலநாட்கள் அங்கே இருந்தார். பல தலங்களில் வணங்கி திருப்பேரூரை அடைந்து, பெருமான் கனகசபையிலே நடனஞ் செய்யும் காட்சி தமக்கு கிடைத்தது கண்டு பேரின்ப வெள்ளத்தில் மூழ்கினார். பின்னர் திருமுதுகுன்றம் சென்றார். பொருள் தேவையென்பதால் பரமனின் பாதங்களைப் போற்றி, **"மெய்யை முற்றப் பொடியே பூசி"** என்னும் பதிகம் பாடினார். சுந்தரரின் பாமாலையில் மயங்கி சிவபெருமான் பன்னிரண்டாயிரம் பொற்காசுகள் தந்தருளினார்.

"சுந்தரனே, நீ இந்தப் பொன் எல்லாவற்றையும் மணிமுத்தாறில் போட்டு திருவாரூர்க் குளத்தில் போய் எடுத்துக் கொள்" என்று அசரீரி கேட்டது. பொற்காசுகளை மணிமுத்தாறில் போட்டார். மீண்டும் தில்லை மாநகர் அடைந்து சபாபதியை வணங்கி **"மடித்தாடுமடிமைக் களன்றியே"** என்னும் பதிகம் பாடித் திருவாரூரை அடைந்தார்.

"திருவாரூர் கோயில் திருத்தலத்திலே போய் பெருமான் தந்த பொன்னை, குளத்தில் இருந்து எடுத்து வரலாம் வா" என்று பரவையாருடன் திருக்குளத்தை அடைந்தார். சுந்தரரைப் பாடவைக்க வேண்டும் என எண்ணிய இறைவன் பொன் தரத் தாமதித்தார்.

"பெருமானே, பரவையார் என்னை ஏளனம் செய்கிறாள். பொன்னைத்தாரும்'' என்று திருமுதுகுன்றர் மேல் **"பொன் செய்த மேனியனீர்"** என்னும் திருப்பதிகம் பாடி, பரமன் அருளால் பொற்றிரளை எடுத்தார். அந்த பதிகத்தின் முதல் பாடல்:

பொன் செய்த மேனியனீர் புலித்தோலை அரைக்கு அசைத்தீர்
முன்செய்த மூவெயிலும் எரித்தீர்முது குன்று அமர்ந்தீர்
மின்செய்த நுண்இடையாள் பரவையின் தன்முகப்பே
என்செய்த வாறடிகேள் அடியேன்இட் டளம்கெடவே.

விளக்கம்:

பொன்போல் ஒளிரும் திருமேனியரே, புலித்தோலை இடையில் உடுத்தி இருப்பவரே, முன்னரே அசுரர்களின் மூன்று மதில்களை அக்கினிக்கு இரையாக்கியவரே, திருமுதுகுன்றில் எழுந்தருளியுள்ள பெருமானே, மின்னல் போன்ற நுண் இடையுடைய இந்த பரவை என்னும் பெயருடைய இவளின்முன் அடியேனின் துன்பம் தீருமாறு தாங்கள் என்ன செய்தீர்?

சுந்தரர் பெற்ற பொன்னின் மாற்று சற்று குறைவாக இருந்தது. மீண்டும் ஒரு பாடல் பாடித் துதித்தார். பொன்னின் மாற்று சரியானது. பின்பு திருநள்ளாறு, திருக்கடவூர், திருவெண்காடு, திருக்கோலக்கா என்னும் பல தலங்களை வழிபட்டு பதிகம் பாடினார். சீர்காழியின் எல்லை நின்று திருஞான சம்பந்தப் பெருமானின் திருவடிகளைத் துதித்தார். அங்கிருந்து திருக்கருகாவூருக்குச் செல்லும் வழியில் சுந்தரரும் அடியார்களும் பசி தாகத்தால் வருந்தினார்கள்.

பரமன் பொதிசோறும் தண்ணீரும் தந்தருளல்:

பரமன் ஒரு பந்தலை உருவாக்கி, பிராமண வேடத்தில் தங்கியிருந்து• சுந்தரர் வந்ததும் "பசியால் வாடும் நீர் இந்த பொதிசோற்றை உண்டு, நீர் பருகி இளைப்பாறும்" என்றார். அனைவரும் உண்டும் உணவு குறையவில்லை. உறக்கம் கலைந்து கண்விழித்துப் பார்க்கையில் இறைவன் மறைந்து விட்டார். மகிழ்ச்சிக்கடலில் ஆழ்ந்த சுந்தரர்,

"இத்தனையர்மாற்ற மறித்திலேன்" என்னும் பதிகம் பாடினார். பின்னர் திருநாவலூரில் சிலநாட்கள் தங்கினார். பின்னர் தொண்டை மண்டல தல்ங்களைத் தரிசிக்க விரும்பினார். திருக்கச்சூர் ஆலயத்தினுள் போய் இறைவனை வணங்கினார். ஆலயத்தின் ஒரு

புறத்தில் தங்கியிருந்தார். உணவு வேளை வந்தும் சமையல்காரர் எவரும் வரவில்லை.

சுந்தரருக்காகப் பரமன் பிச்சை யெடுத்தல்:

பரமசிவன் ஒரு பிராமணனாக வந்து கையில் திருவோட்டுடன் காட்சியளித்தார். சுந்தரரைப் பார்த்து, "நீர் பசியினால் மிக வருந்தி இளைப்புற்றிருக்கின்றீர். நான் உமக்காக அன்னம் யாசித்து வருவேன். வரும் வரை இங்கேயே இரும்" என்று சொன்னார். பின்னர் அவ்வூரில் உள்ள பிராமணர் வீடுகளுக்குச் சென்று யாசித்து அன்னமும் கறியும் கொண்டு வந்தார். சுந்தரமூர்த்தியிடம் சென்று "பசிதீர இதை உண்ணும்" எனத் தந்தார். சுந்தரரும் அடியவர்களை அழைத்து "இப்பிரசாதத்தை உண்போம் வாருங்கள்" என்று அன்னத்தைக் கொடுத்து தாமும் உண்டார்.

வேதியர் திடீரென்று மறைந்து விட்டார். வந்தவர் இறைவனே என்று உணர்ந்த சுந்தரர், **"முதுவாயோரிகதற"** என்னும் பதிகம் பாடி பெருமானை வணங்கினார். அங்கிருந்து புறப்பட்டு காஞ்சி புரத்தை அடைந்தார். காஞ்சி நகர மக்கள் தோரணங்கள் கட்டி தீபங்கள் ஏற்றி வீடுகளை அலங்கரித்து அவரை வரவேற்று திருவிழாக் கோலம் காட்டினர். பக்தர்கள் நகர எல்லையில் வந்து வரவேற்றனர். பிறகு காமகோட்டம் சென்று காமாட்சியம்மையை வணங்கினார். பிறகு திருவோணகாந்தன்தளி என்னும் தலத்தை அடைந்தார். அங்கு எழுந்தருளியுள்ள பெருமானிடம் பொற்காசுகள் தேவை என்று தெரிவிக்க "நெய்யும் பாலும்" என்னும் திருப்பதிகம் பாடினார். அப்பதிகத்தின் முதல் பாடல்:

நெய்யும் பாலும் தயிரும் கொண்டு
நித்தல் பூசனை செய்யல் உற்றால்
கையில் ஒன்றும் காணம் இல்லைக்
கழலடி தொழுது உய்யின் அல்லால்

ஐவர் கொண்டு இங்கு ஆட்ட வாடி
ஆழ்குழிப் பட்டு அழுந்து வேனுக்கு
உய்யு மாறுஒன்று அருளிச் செய்யீர்
ஓணகாந்தன் தளிஉ ளீரே

விளக்கம்:

ஓணகாந்தன்தளி உள்ள பெருமானே, உனது அடியார்கள் நெய், பால், தயிர் முதலியன கொண்டு திருமஞ்சனம் ஆட்டி, பூசைகள் பல செய்கின்றனர். ஆனால் நான் உன் திருவடிகளைத் தொழுவதுதான் இயலும். பூசனைகள் செய்வதற்கு செலவுக்கு பொற்காசு ஏதும் இல்லாதவனாக இருக்கிறேன். ஐம்பொறிகளாகிய ஐந்து பேர் என்னை ஆட்டுவிக்க, அதற்கேற்ப நானும் ஆடி, ஆழமான குழியில் விழுந்து அல்லலுறுகின்றேன். இதிலிருந்து தப்பிப் பிழைக்கும் வழியை எனக்குக் கூறி அருளல் வேண்டும். பொற்காசுகளைப் பெற்றபின் அனேகதங்காவதம் என்னும் திருத்தலம் சென்று திருப்பதிகம் பாடினார்.

பிறகு திருக்காளத்தி மலை அடைந்தார். மேலே ஏறி காளத் தியப்பர் சந்நிதானத்துக்குச் சென்று அவரை வணங்கினார். அவரின் வலப்பக்கத்தில் நிற்கின்ற கண்ணப்ப நாயனாரின் திருவடிகளை வணங்கினார்.

சுந்தரர் – சங்கிலியார் திருமணம்:

திருக்கயிலாய மலையில் சுந்தரர் இருந்தபோது அவர் மேல் காதல் கொண்ட உமையம்மையின் தோழியர்கள் இருவருள் அணிந்திதை என்பவர் ஞாயிறு என்னும் ஊரில் வேளாளர்களில் சிறந்தோங்கிய ஞாயிறு கிழார் என்பவரின் மகளாகப் பிறந்து வளர்ந்து வந்தார்.

அவருக்கு திருமண பருவம் வந்தது. அவளின் அழகுக்கும் குணத்திற்கும் ஏற்ற மணமகனை தேர்ந்தெடுக்க பெற்றோர் முடிவு செய்தனர். ஆனால் சங்கிலியார் "எம்பெருமான் அருள் பெற்ற ஓர் ஆடவரைத் தவிர வேறொருவரை கணவனாக ஏற்க மாட்டேன்" என்ற தன் எண்ணத்தை பெற்றோரிடம் உறுதியாகத் தெரிவித்தார்.

பெற்றோர்கள் அவள் விருப்பப்படியே திருவொற்றியூரில் ஒரு கன்னிமாட்டம் சகல வசதிகளுடன் அமைத்துத் தந்தார்கள். சங்கிலியார் அங்கிருந்து நாள்தோறும் ஆலயம் செல்வார். ஒரு மண்டபத்தின் திரைமறைவில் இருந்து இறைவனுக்கு மலர்களை மாலையாகக் கட்டுவார்.

சுந்தரமூர்த்தி நாயனார் ஒருநாள் திருவொற்றியூருக்கு வந்தார். திரையின் பின்னால் சங்கிலியாரைக் கண்டார். அவளின் பேரழகு அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. திருக்கோயிலின் உள்ளே நின்று "எனக்கு சங்கிலியாரைத் தருந்தருள வேண்டும்" என்று, பெருமானிடம் வேண்டினார். அப்படியே செய்ய பரமன் ஒப்புதல் தந்தார். சங்கிலியாரின் கனவிலும் சென்று, "எம் மேல் மிகுந்த பக்தியுடைய திருவெண்ணெய்நல்லூரில் நம்மால் தடுத்தாட் கொள்ளப்பட்ட எமது தோழனுமாகிய சுந்தரன் உன்னை அவனுக்கு மனைவியாகத் தரப் பிரார்த்தித்தான். நீயும் ஒப்புக்கொள் என்றார். சங்கிலியார் பெருமானிடம் "ஐயனே, அவருக்கு ஏற்கனவே ஒரு மனைவி இருக்கிறாள்" என்று கூற "வருந்தாதே, சுந்தரன் உன்னைப் பிரிந்து போக மாட்டேன்" என்று சத்தியம் செய்வான் என்றார். சுந்தரமூர்த்தியிடமும் சென்று "உன்னைப் பிரியமாட்டேன் என்று சங்கிலியாருக்கு நீ சபதம் செய்து தந்தால் அவள் சம்மதிப்பாள்" என்றார். அப்படிச் செய்து விட்டால் பிற தலங்களுக்குச் செல்ல முடியாமலும், பரவையாரைப் பிரிந்து வாழவேண்டி வருமே என்று சுந்தரர் வருந்தினார்.

சங்கிலியார் இறைவனிடம் "சுந்தரர் என்னைப் பிரியேன் என்று சபதம் செய்ய வரும்போது ஆலயத்தின் வெளியில் உள்ள மகிழ மரத்தடியில் தாங்கள் தங்கியருள வேண்டும்" என்றாள். அவ்வாறே அங்கு வந்து "உன்னைப் பிரிய மாட்டேன்" என்று சுந்தரர் சபதம் செய்து தந்தார். பெருமான் கனவில் வந்து சொல்லியபடி திருவொற்றியூர் அடியார் பெருமக்கள் சங்கிலியாரை சுந்தரமூர்த்தி நாயனாருக்கு திருமணம் செய்து வைத்தார்கள்.

சுந்தரர் கண்பார்வை இழந்தார்:

சங்கிலியாரோடு மகிழ்ச்சியாக திருவொற்றியூரில் வாழ்ந்து வந்த சுந்தரமூர்த்தி நாயனார்க்கு திருவாரூரில் உள்ள பெருமானின் திருவிழா காண விருப்பம் எழுந்தது. "வன்மீகிநாதரை இவ்வளவு காலம் பிரிந்து இருந்து விட்டேனே" என்று வருந்தினார். பெருமான் மேல்

"பத்திமையு மடிமையையுங்
கைவிடுவான் பாவியேன்"

என்னும் திருப்பதிகம் பாடியருளினார். வன்மீகநாதரைக் கண்டு தரிசிக்கும் ஆவல் மிக, அங்கிருந்து புறப்பட்டார். செய்த சபதத்தை மீறியதால் அவரின் இரண்டு கண்களும் பார்வையிழந்தன. பெருமானை வேண்டி,

"அழுக்கு மெய் கொடுன்றிருவடி யடைந்தேன்" என்னும் திருப்பதிகம் பாடியும் கண்பார்வை பெறவில்லை. அடியவர்களின் துணையுடன் **திருமுல்லைவாயில்** சேர்ந்தார். பிறகு திருவெண்பாக்கம் வந்தார்:

"உனது திருவடிகளைப் பரவசத்தோடு கண்டு தொழ முடியாமல் சங்கிலிக்குத் தந்த சபதத்தை மீறியதால் என் கண் பார்வையை பறித்தாயே. எனது துன்பம் அளவற்றது" என்று எண்ணி

வருந்தினார். சபதம் செய்ததை மீறியது தவறு. அதனால் பரமன் கோபம் கொண்டுள்ளார் என்று எண்ணினார். பிறகு **திருவாலங்காடு** சென்று இறைவனைத் தரிசித்து காஞ்சிபுரம் சென்றார்.

காமாட்சி அம்மையைத் தொழுதார். ஏகாம்பரநாதர் சந்நிதி அடைந்து "பிழை பொறுத்து கண்பார்வை தருக" என வேண்டினார். இடக்கண் பார்வை மட்டும் வந்தது. இறைவனின் திருக்கோலம் கண்டார். **"ஆலத்தானுகத் தமுது செய்தானை"** என்னும் திருப்பதிகம் பாடி சிலநாட்கள் அத்தலத்தில் இருந்தார்.

இவ்வாறு பதிகம் பாடி இறைவனை வழிபட்டபின் சோழ மண்டலம் நோக்கி புறப்பட்டார். திருவாவடுதுறைய அடைந்தார். ஒரு கண்ணில்லா குறையை எண்ணி வருந்தினார்.

"கங்கைவார் சடையார்" என்னும் திருப்பதிகம் பாடினார். பின்னர் திருத்துருத்திக்குச் சென்றார்.

"எனது உடல் நோயைப் போக்க வேண்டும்" என்று வேண்டினார். பரமன் சொன்னபடி வடபுறம் இருந்த குளத்தில் மூழ்கி எழுந்தார். அவர் மேனி புதுப்பொலிவோடு விளங்கியது. அடியார்கள் இறைவனின் கருணையை எண்ணி வணங்கினர். பிறகு திருவாரூர் மூலவரை அர்த்த ஜாமத்தில் வணங்கினார். சிவபெருமானின் தொண்டர்கள் எதிரே வந்தனர். அதை அறிந்து சுந்தரர் **குருகுயாய** என்னும் திருப்பதிகம் பாடினார். 'தேவாசிரிய மண்டபம்' தாண்டி உள்ளே சென்றார். பெருமானை வணங்கினார்.

"உன்னை தரிசிக்க ஒரு கண் போதாதே. வலக்கண் பார்வையும் தந்தருள்க" என்று வேண்டினார்.

"மீளா வடிமை யுமக்கே யானாய்" என்னும் திருப்பதிகம் பாடினார்.

அப்பதிகத்தின் முதல் பாடல்:

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங்கு இருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே

விளக்கம்:

திருவாரூரில் எழுந்தருளியுள்ளவரே, உம்மிடமிருந்து மீளமுடியரத அடிமை பூண்டு தொண்டு செய்தேன். பிற தெய்வத்தை வணங்காது, அதனை வெளியில் சொல்ல முடியாமல் மூண்டு எரியாத நெருப்பாய் உள்ளத்தில் கலை, முகம் வாடிட அடியார்கள் தங்கள் துன்பத்தை எடுத்துக் கூறிய பிறகும் ஒன்றும் செய்யாது இருக்கிறீர். இதுவே உமது இயல்பாயின் நீவிரே வாழ்ந்து போவீராக!

இவ்வாறு சுந்தரர் மனம் வெதும்பிப் பாடியதைக் கேட்டு வன்மீகநாதர் திருவுள்ளம் இரங்கி அவருக்கு வலது கண்பார்வையும் தந்தருளினார். சுந்தரர் பலமுறை பரவசமாக விழுந்தும் எழுந்தும், ஆடியும், பாடியும் பேரானந்தக் கடலில் மூழ்கித் திளைத்தார். வன்மீகநாதரை இரண்டு கண்களாலும் தரிசித்து தேவாசிரிய மண்டபத்தில் போய் தங்கினார்.

பரவையாரிடம் இறைவன் தூது செல்லல்:

பரவையாருக்கு சுந்தரர் வேறொரு பெண்ணை மணந்தது தெரிய வந்து மிகுந்த கோபத்தில் இருந்தார். தூது வந்த அன்பர்களையும் மதிக்கவில்லை. இதை அறிந்த சுந்தரர் சிவபெருமானிடம் வேண்டினார். "ஆளுடைய பெருமானே! முன்வினைப் பயனால் என்னை வந்தடைந்த பரவையாருடன் நான் சேர அருள் செய்ய வேண்டும்." அவர்முன் இறைவன் காட்சியளித்தார். சுந்தரர் பரவையாரின் கோபம் பற்றிக் கூறி தம்மை பரவையாரிடம் சேர்த்து வைக்கும்படி வேண்டினார். பரமன் தானே தூது செல்வதாகக் கூறினார்.

எம்பெருமான் கோயில் அர்ச்சகர் உருவம் கொண்டு பரவையாரின் மாளிகைக்குச் சென்றார். சுந்தரமூர்த்தி அங்கே வர ஒப்புக்கொள்ளக் கேட்டார். குற்றங்களை மன்னிக்கும்படியும் சொன்னார். ஆனால் பரவையார் மறுத்து விட்டார். இறைவனும் தன்னை யாரென்று காட்டிக் கொள்ளாமல் திரும்பி வந்தார். எம்பெருமான் சுந்தரரிடம் நடந்தவற்றைக் கூறினார்.

"என்மீது கருணை கொண்டு மீண்டும் ஒருமுறை பரவையிடம் தூது செல்ல வேண்டும். என் நிலையை எடுத்துச் சொல்ல வேண்டும்" என்று சொன்னார்.

பரவையார் வீட்டுக்கு அர்ச்சகர் வடிவில் சிவபெருமான் வந்து சென்றபின் அவர் இறைவனே என்பதை உணர்ந்து, "ஐயோ! கோபத்தினால் அவரை அறியாமல் பெருமானிடமே எதிர்வார்த்தை பேசி அனுப்பி விட்டேனே" என்று வருந்தினார்.

இரண்டாம்முறை வந்தபோது சிவபெருமான் சுய உருவத்தில் வந்தார். பரவையார் அவரை வரவேற்று, பாதங்களில் வீழ்ந்து "மன்னித்து அருள வேண்டும்" என்று புலம்பினாள். 'சுந்தரரை ஏற்றுக் கொள்கிறேன்' என்று அவரது பாதங்களில் விழுந்து கதறினாள். சுந்தரரை மீண்டும் சந்தித்து, "பரவையாரின் ஊடலை மாற்றினோம். அவளோடு இன்புற்று வாழ்வாயாக" என்று அருளினார். "ஆரூரா, நீ விரைந்து பரவையாரிடம் செல்" என்று ஆணையிட்டு பரமன் திருக்கோயிலுக்குள் சென்று மறைந்தார். பரவையார் மாளிகையை சுந்தரர் அடைந்தார். ஈருயிர் ஓருடல் என்று வாழ்ந்தனர். புற்றிடங் கொண்ட பெருமானை நாள்தோறும் தரிசித்தார் சுந்தரர். இறைவன்மீது பதிகங்கள் பாடி பெருமகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தார்.

ஏயர்கோன் கலிக்காமருடன் நட்பு

சுந்தரர் பரமசிவனைத் தூது அனுப்பிய செய்தியைத் திருப்பெருமங்கலம் என்னும் தலத்தில் இருந்த ஏயர்கோன் கலிக்காம நாயனார் கேள்விப்பட்டார். சுந்தரர்மேல் கோபம்

கொண்டார். அதை அறிந்த சுந்தரமூர்த்தி நாயனார் பரமசிவனிடம் விண்ணப்பம் செய்தார். இறைவன் கலிக்காமருக்கு சூலைநோயை உண்டாக்கினான். "சுந்தரர் வந்தால் உன் சூலைநோய் தீரும்" என்று கலிக்காமருக்கு பரமன் கூறினார். கலிக்காமர் மேலும் கோபம் கொண்டு தன் உடைவாளால் குத்திக் கொண்டு இறந்தார். அவரது மனைவி அவர் உடலை அலங்காரம் செய்து வைத்து "சுந்தரருக்கு இந்தச் செய்தி தெரிய வேண்டாம்" என்று வீட்டில் உள்ளவர்களுக்கு கட்டளை இட்டாள். நம்பி ஆரூரரை அழைக்க ஆட்கள் சென்றார்கள். சுந்தரர் வந்தார். கலிக்காமர் இறந்து போனதை அறிந்தார். தானும் இருக்கக் கூடாது என்று தன் குறுவாளை எடுத்து உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றார். ஓர் அதிசயம் நடந்தது. இறந்து கிடந்த கலிக்காமர் எழுந்தார். சுந்தரரை தடுத்தார். அவர் கையில் இருந்த வாளை வாங்கிக் கொண்டார். இருவரும் எம்பெருமானின் கருணையை எண்ணி நெக்குருகினார்கள். சுந்தரர் கலிக்காமரோடு திருப்புன்கூருக்குப் போனார்.

"அந்தணாளனுன்னடைக்கலம்" என்னும் பதிகம் பாடி சில நாட்களுக்குப் பின் திருவாரூரை அடைந்தார். மீண்டும் பல தலங்களுக்குச் சென்று பொன்னும் இரத்தினங்களும், உடைவாளும் பெற்று பிற தலங்களை வணங்கி மீண்டும் திருவாரூர் சேர்ந்து எழுந்தருளினார்.

சேரமான் பெருமான் சந்திப்பு:

சேரநாட்டில் திருவஞ்சைக்களத்தில் இருந்து அரசாண்டவர் சேரமான் பெருமான் நாயனார். அவருக்கு சுந்தரரைக் காண ஆவல் வந்தது. சுந்தரரை திருவாரூரில் சந்தித்தார். இணைபிரியா நண்பர்களானார்கள். சுந்தரருக்கு சேரமான் தோழர் எனப் பெயர் வந்தது. சேரமான் பெருமான் சுந்தரரை மலைநாட்டுக்கு அழைத்தார். திருவஞ்சைக்களத்தில் சுந்தரருக்கு கோலாகல வரவேற்பு தரப்பட்டது. சேரமான் சுந்தரருக்கு பொன்னும் பொருளும்

தந்தார். இதுவரை சிவபெருமானிடம் மட்டுமே பொருள் பெற்றார். இப்போது சுந்தரர் சேரமான் தந்த பொருளோடு வந்தபோது இறைவன் சிவகணங்களை அனுப்பி சுந்தரர் கொண்டு சென்ற செல்வத்தைக் கொள்ளையடிக்கச் செய்தார். இந்த திருவிளையாடல் **திருமுருகன்பூண்டி** வழியே செல்லும்போது நடந்தது. சுந்தரர் ஆலயத்துள் சென்று இறைவனை வணங்கி **"கொடுகு வெஞ் சிலை வடுக வேடுவர்"** என்று பாடியருளினார். வேடுவர்களாக வந்த சிவகணங்கள் தாங்கள் பறித்த பொன்னையும் பொருளையும் திருக்கோயில் வாசலிலே குவித்தார்கள். பின் சுந்தரர் திருவாரூரை அடைந்தார்.

முதலை உண்ட மதலையை மீட்டல்:

சுந்தரமூர்த்தி நாயனார் மீண்டும் சேரமானைச் சந்திக்க விரும்பி திருவஞ்சைக்களம் நோக்கிப் புறப்பட்டார். கொங்கு தேசத்தை அடைந்தார். **திருப்புக்கொளியூர் (அவிநாசி)** என்ற தலத்தை அடைந்தார். வீதியில் எதிர் எதிராக இருந்த வீடுகளில் ஒன்றில் மங்கல ஒலியும் மற்றதில் அழுகை ஒலியும் கேட்டன.

காரணம் கேட்டபோது இரு புதல்வர்களில் ஒருவன் ஐந்து வயதே நிரம்பியவன் மடுவில் குளிக்கும் போது முதலை விழுங்கி விட்டது. ஆதலால் இந்த வீட்டில் அழுகை ஒலி. பிழைத்த பாலகனுக்கு பூணூல் கலியாணம், அங்கு மங்கல ஒலி என்றனர். இதுகேட்டு இரக்கம் கொண்ட சுந்தரர், பெற்றோரிடம் "உங்கள் பிள்ளையைப் பறிகொடுத்து விட்டீர்களா?" என்றார். பெற்றோர்களும் அது முன்னர் நடந்தது. உங்களைச் சந்தித்தது பெரும் பாக்கியம்" என்றார்கள்.

"மறையவரும் மனைவியும் எனது வருகைக்கு மகிழ்கின்றனர். அவர்கள் துன்பம் துடைத்த பின்னரே அவிநாசி செல்வது என்று

எண்ணினார். மடுவின் கரையை அடைந்து அவிநாசியப்பரை எண்ணி "எற்றான் மறக்கேன்" என்னும் பதிகம் பாடினார். அதன் முதல் பாடல்:

> **எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெரு மானையே**
> **உற்றாய் என்று உன்னையே உள்குகின்றேன் உணர்ந்து**
> **உள்ளத்தால்**
> **புற்றுஆடு அரவா புக்கொளியூர் அவிநாசியே**
> **பற்றாக வாழ்வேன் பசுபதியே பரமேட்டியே.**

விளக்கம்:

புற்றில் வாழும் படமெடுத்து ஆடும் பாம்பை அணிந்தவனே, உயிர்களுக்கெல்லாம் தலைவனே, திருப்புக்கொளியூரில் 'அவிநாசி' என்னும் தலத்தில் எழுந்தருளியிருப்பவனே. ஏழு பிறப்பிலும் எமக்கு தலைவனாய் உள்ள உன்னையே எனக்கு உறவினன் என்று உணர்ந்து மனத்தால் நினைக்கின்றேன். நீயே எனக்குத் துணை என்று வாழ்வேன். உன்னை எப்படி மறப்பேன்?


அடுத்து "உரைப்பார் உரை உகந்து" என்னும் அடுத்த பாடல் பாடத் தொடங்கியதும் முதலை வாயிலிருந்து சிறுவன் இடைப்பட்ட இரண்டாண்டு வளர்ச்சியுடன் வெளிவந்தான்.

பெற்றோர்கள் அவனுக்கு உபநயனம் செய்வித்து மகிழ்ந்தனர். பின் சுந்தரர் வஞ்சிமாநகரம் வருகிறார் என்ற செய்தி சேரமானுக்கு தெரிவிக்கப்பட்டது. சுந்தரர் மலைநாட்டை அடைந்தார். அரண்மனையில் மன்னன் அவரை உபசரித்தான். பின்னர் திருவஞ்சைக்களம் கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்தார். இனிமேல் இறைவனைப் பிரியாமல் இருக்க வேண்டும் என எண்ணினார். இந்த உலக வாழ்க்கையிலிருந்து நீக்கி உமது திருவடியில் சேர்த்திட வேண்டும் என்னும் குறிப்போடு,

"தலைக்கு தலைமாலை"

என்று தொடங்கி பதிகம் பாடினார். அப்பதிகத்தின் முதல் பாடல்:

தலைக்குத்தலை மாலை அணிந்தது என்னே
சடைமேல் கங்கை வெள்ளம் தரித்தது என்னே
அலைக்கும் புலித்தோல் கொண்டு அசைத்தது என்னே
அதன்மேல்கத நாகம்கச்சு ஆர்த்தது என்னே
மலைக்கும்நிகர் ஒப்பன வன்திரைகள்
வலித்துஎற்றி முழங்கி வலம்புரி கொண்டு
அலைக்கும்கட லம்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்து அப்பனே



சுந்தரர் வெள்ளை யானை மீதேறி
கயிலை செல்லும் காட்சி

விளக்கம்:

மலைக்கு ஒப்பான உயரிய அலைகள் வீசி, வலம்புரிச் சங்குகளை ஒதுக்கும் கடலின் கரையில் உள்ள கொடுங்களூரில் அழகிய சோலைகளால் சூழப்பட்ட அஞ்சைக்களம் என்னும் கோயிலில் எழுந்தருளியுள்ள அப்பனே, தலையில் தலைமாலை அணிந்திருப்பது எதற்காக? சடைமேல் கங்கையைச் சுமப்பது எதற்காக? இடையில் புலித்தோல் எதற்காக? அதன்மேல் சினந்த பாம்பை க்ச்சாக அணிந்திருப்பது எதற்காக?

பழையபடியே ஆரூரானை ஆலால சுந்தரராகத் தொண்டராக்கிக் கொள்ள பரமன் திருவுள்ளம் கொண்டான். பிரமன் முதலிய தேவர்களை அழைத்தான். "வெள்ளை யானை மீது ஏற்றிக் கொண்டு இங்கே அழைத்து வாருங்கள்" என்று ஆணையிட்டான்.

அஞ்சைக்களம் வாசலில் இறைவன் ஆணையை அறிந்த சுந்தரர் வெள்ளை யானைமீது ஏறினார். தேவர்கள் மலர்மாரி பொழிந் தனர். சேரமானை நினைத்துக் கொண்டே சுந்தரர் புறப்பட்டார்.

இதனை அறிந்த சேரமான் ஒரு குதிரையில் ஏறி அஞ்சைக்கள கோயிலை அடைந்தார். வெள்ளை யானைமீது செல்லும் சுந்தரரைக் கண்டார். சுந்தரரைப் பிரிய மனம் இல்லை. தனது குதிரையின் காதில் பஞ்சாட்சரத்தை ஓதினான். அது ஆகாயத்தில் பறந்தது. சேரமான் சுந்தரரை முந்திக் கொண்டு முன்னே சென்று கயிலையை அடைந்தார். யானையின் மீது அமர்ந்து சென்ற சுந்தரர் இறைவன் திருவருளை வியந்து,

"தான் எனை முன்படைத்தான்" என்ற திருப்பதிகம் பாடினார். இது **நொடித்தான்மலை பதிகம்** எனப்படும். 'நொடித்தான்மலை' என்பது கயிலை மலையைக் குறிக்கும். இப்பதிகம் பாடி சுந்தரர் திருக்கயிலாய மலையின் தெற்குவாயில் முன் போனார். இப்பதிகம் முழுவதும் தரப்படுகிறது.

திருநொடித்தான் மலை பதிகம்

இறைவன் : திருக்கயிலாய நாதர்
இறைவி : பார்வதி அம்மை

இப்பதிகம் சுந்தரர் பாடிய ஏழாம் திருமுறைக்கு நிறைவுப் பதிகம் ஆகும். இம்மண் மீது வாழ்ந்த மகான்கள், முனிவர் பெருமக்கள் யாவரும் தம் பூதவுடலை நீத்த பிறகே சிவலோகம் செல்வார்கள். ஆனால் சுந்தரரோ, தமது உடலோடு வெள்ளை யானை மீது ஏறி வான் வழியாகச் சென்றபோது பாடிய பதிகம் என்ற பெருமை இப்பதிகத்திற்கு மட்டுமே உண்டு. அதேபோல் பிற பதிகங்கள் யாவும் பூமியின் மீது (மண்ணில்) பாடப்பட்டவை. இது ஒன்றுதான் விண்ணில் பாடப்பட்டது. திருக்கயிலாயத்தில் பாடப்பட்ட, நிறைவாக அமைந்த இப்பதிகத்தை வருணதேவன் பூமிக்குக் கொண்டு வந்தார் என்பது போன்ற சிறப்புகளும் அதிசயங்களும் கொண்ட பதிகம்தான் **நொடித்தான்மலை** பதிகம்.

தானெனை முன்படைத்தான் அதறிந்து தன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்தயானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே. 1

விளக்கம்:

திருக்கயிலை மலையில் வீற்றிருக்கும் முதல்வனாகிய சிவபெருமானே, முன்பு என்னை நிலவுலகில் தோற்றுவித்தான். அவனது குறிப்பினை நான் உணர்ந்து கொண்டேன். அதனால் அவனது பொன்போலும் திருவடிகளைப் போற்றி எத்தனையோ பாடல்கள் செய்தேன்.

ஆனை உரித்த பகை அடியேனொடு மீளக்கொலோ
ஊனை உயிர் வெருட்டி ஒள்ளி யானை நினைத்திருந்தேன்
வானை மதித்த அமரர் வலஞ்செய்து எனையேற வைக்க
ஆனை அருள் புரிந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 2

விளக்கம்:

தாருகாவனத்து முனிவர்கள் தன்னைக் கொல்லக் கருதி அனுப்பிய யானையை அடக்கிக் கொன்று அதன் தோலை உரித்து தனது மேலே போர்த்திக் கொண்டான் ஈசன். அன்று முதல் அவனுக்கும் யானை குலத்திற்கும் பகைமை இருந்தது. அதனை மாற்ற எண்ணம் கொண்டு சிவபெருமான், தேவர்கள் வந்து என்னை வலஞ்செய்து ஏற்றி வருமாறு பெரிய யானையை அளித்துள்ளான். இது பழம் பகையை நீக்கக் கருதியா அல்லது எனக்கு அருள் செய்யும் எண்ணத்திலா? இத்தகைய பெரிய சிறப்பை எனக்கு அளிப்பதற்கு நான் பெரிதாக எதையும் செய்வேனில்லை. என்னுடைய கருவி மற்றும் கரணங்களினால் மனத்தை அடக்கி திருக்கயிலாய மலையில் வீற்றிருந்து அருளும் முக்கண் ஈசனை எப்போதும் நினைத்திருக்கும் காரியம் ஒன்றையே செய்தேன். அதற்கு அவன் இந்தப் பெரிய வெகுமதியை அளித்து விட்டான், என்னே வியப்பு!

மந்திரம் ஒன்று அறியேன் மனை வாழ்க்கை மகிழ்ந்து அறியேன்
சுந்தர வேடங்களால் துரிசே செயும் தொண்டன் எனை
அந்தர மால்விசும்பில் அழகு ஆனை அருள்புரிந்த
துந்தரமோ நெஞ்சமே நொடித்தான்மலை உத்தமனே. 3

விளக்கம்:

நெஞ்சே, அடியேன் மறைகள் ஓதி இறைவனைப் போற்ற வில்லை. இன்பமான இல்வாழ்க்கையில் மயங்கிக் கிடந்தேன். தூய அடியவர் வேடத்தை மேற்கொள்ளவில்லை. அழகிய

வேடங்கள் புனைந்திருந்தேன். இவ்வாறு எவ்வகையிலும் பொருந்தாத செயல்களையே செய்து வாழ்ந்தேன். அப்படிப்பட்ட எனக்கு திருக்கயிலை மலையில் எழுந்தருளியுள்ள இறைவன், அகண்ட வெளியாகிய பெரிய வானத்தில் செல்லும் அழகான யானை ஊர்தியை தந்தருளிய பெருங்குணத்தை விவரிக்க இயலாது.

வாழ்வை உகந்த நெஞ்சே மடவார் தங்கள் வல்வினைப் பட்டு
ஆழ முகந்த என்னை அது மாற்றி அமரர் எல்லாம்
சூழ அருள்புரிந்து தொண்டனேன் பரமல்லதொரு
வேழம் அருள்புரிந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 4

விளக்கம்:

நான் பெண்களால் உண்டாகும் வலிய் குழியில் விழுந்து அழுந்திக் கிடந்தேன். திருக்கயிலை எழுந்தருளியுள்ள முதல்வன், அந்த நிலையை நீக்கி, தேவர் எல்லாம் சூழ் அழைத்து வர ஆணையிட்டான். என் நிலைக்குப் பொருந்தாத ஒரு யானையை ஊர்தியாக அனுப்பி தன்னிடம் வருமாறு அழைத்தான். அவனது பேரருளை நான் எப்படி போற்றுவேன்?

மண்ணுலகில் பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்டனேன் இன்று கண்டொழிந்தேன்
விண்ணுலகத்தவர்கள் விரும்ப வெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை உத்தமனே. 5

விளக்கம்:

மண்ணுலகில் மக்களாய்ப் பிறந்து உம்மை பாடுகின்ற பழவடியார் பின்னர் பொன்னுலகத்தைப் பெறுகின்ற பெருமையை இன்று கண்டேன் என்று தன்னிடம் வந்து சொல்லுமாறு, திருக்

கயிலை மலையின் மேல் வீற்றிருக்கும் முதல்வன், தேவரும் கண்டு விருப்பம் கொள்ளுமாறு, என் உடம்பை வெள்ளை யானையின் மேல் காணும்படி செய்தான். அவனது திருவருள் இருந்தவாறு என்ன !

அஞ்சினை ஒன்றி நின்று அலர் கொண்டடி சேர்வறியா
வஞ்சனை என் மனமே வைகி வான நன்னாடர் முன்னே
துஞ்சுதல் மாற்றுவித்து தொண்டனேன் பரமல்லதொரு
வெஞ்சின ஆனை தந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 6

விளக்கம்:

ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி, அன்றலர்ந்த மலர் கொண்டு இறைவனைப் பூசிக்க வேண்டும். அது பிறப்பெடுத்த ஒவ்வொருவருக்கும் கடமையாகும். அப்படியெல்லாம் செய்யாத வஞ்சகம் பொருந்திய அடியேனின் மனத்திலும் அவன் வீற்றிருந்தான். திருக்கயிலை மலை மீது வீற்றிருக்கும் முதல்வன், உரிய நேரத்தில் என்னை தடுத்தாட்கொண்டு, இறப்பை நீக்கி, தேவர்களின் கண்முன்னே, என் நிலைக்குப் பெரிதும் மேம்பட்ட, சினம் மிகுந்த பெரிய யானை ஊர்தியை அளித்து தம்மிடம் வருமாறு அருள் செய்தான்.

நிலைகெட விண்ணதிர நிலம் எங்கும் அதிர்ந்து அசைய
மலையிடை யானை ஏறி வழியே வருவேன் எதிரே
அலை கடலால் அரையன் அலர் கொண்டு முன் வந்து இறைஞ்ச
உலையணையாத வண்ணம் நொடித்தான்மலை உத்தமனே. 7

விளக்கம்:

திருக்கயிலை மலை மீது வீற்ருக்கின்ற முதல்வன், விண்ணுலகம் தனது நிலைகெடுமாறு அதிரவும், மண்ணுலகம் முழுதும் அதிரவும்,

மலையிடைத் திரிகின்ற யானை மீது ஏறி தனது திருக்கயிலை மலையை நோக்கி வருகின்ற என் எதிரே, அலைகடலுக்கு அரசனாகிய வருணன், பூக்களை கொண்டு யாவருக்கும் முற்பட்டு வந்து வணங்குமாறு, உடலோடு உயர்ந்து அழியாது நிற்கின்ற ஒரு நிலையை எனக்கு அளித்தருளினான். அவனது திருவருள் இருந்தவாறு என்!

அரவொலி ஆகமங்கள் அறிவார் அறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெலாம் வந்து எதிர்ந்து இசைப்ப
வரமலி வாணன் வந்து வழி தந்து எனக்கு ஏறுவதோர்
சிரமலி யானை தந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 8

விளக்கம்:

திருக்கயிலை மலையில் வீற்றிருந்து அருள் செய்யும் முதல்வன் 'அரகர' என்னும் ஒலியும், ஆகமங்களின் ஒலியும், பல்வேறு வகையில் பொருந்திய வேதங்களின் ஒலியும் வானமெங்கும் நிறைந்து வந்து எதிரொலிக்கவும், மேன்மை நிறைந்த 'வாணன்' என்கின்ற கணத்தலைவன், எனக்கு முன்னே வழிகாட்டி செல்லவும், ஏற்றதொரு முதன்மை நிறைந்த யானை ஊர்தியை எனக்கு அளித்தருளினான். அவனது திருவருள இருந்தவாறு என்!

இந்திரன் மால் பிரமன் எழிலார் மிகு தேவரெல்லாம்
வந்து எதிர்கொள்ள என்னை மத்த யானை அருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவன் ஆர் என எம்பெருமான்
நம்தமர் ஊரன் என்றான் நொடித்தான்மலை உத்தமனே. 9

விளக்கம்:

திருக்கயிலை மலை மீது வீற்றிருந்து அருள் செய்யும் முதல்வன், இந்திரன் பிரமன் மேலும் எழுச்சி தேவர் ஆகிய எல்லோரும் வந்து என்னை எதிர்கொள்ளுமாறு, எனக்கு யானை

ஊர்தியை அளித்தருளினான். அங்கு, மந்திரங்களை ஓதுகின்ற முனிவர்கள் யாவரும் 'இவன் யார்?' என்று வினவ, 'இவன் நம் தோழன், ஆரூரன் என்னும் பெயரினை உடையவன்' என்று திருவாய் மலர்ந்தருளினான். அவனது திருவருள் இருந்தவாறு என்!

ஊழிதொறு ஊழி முற்றும் உயர் பொன் நொடித்தான்மலையைச்
சூழிசையின் கரும்பின் சுவை நாவல ஊரன் சொன்ன
ஏழிசை இன்தமிழால் இசைந்து ஏத்திய பத்தினையும்
ஆழி கடலரையா அஞ்சையப்பர்க்கு அறிவிப்பதே. 10

விளக்கம்:

ஆழ்ந்த கடலுக்கு அரசனே! உலகம் அழிகின்ற ஊழிக் காலம் தோறும் உயர்வதும், பொன் வண்ணமானதும் ஆகிய திருக்கயிலை மலையின் மீது வீற்றிருந்து அருளும் முதல்வனை, திருநாவலூரில் தோன்றிய ஆரூரன் ஆகிய நான், இசை நூலில் சொல்லப்பட்ட ஏழாகிய இசையினை உடைய, இனிய தமிழால், மிக்க புகழுடைய வனாகவும், கரும்பின் சுவை போன்ற சுவையினை உடையதாகவும் அப்பெருமானோடு ஒன்றுபட்டுப் பாடிய இப்பத்து பாடல்களையும், திருவஞ்சைக்களத்தில் வீற்றிருந்து அருளும் பெருமானுக்கு நீ அறிவித்தல் வேண்டும்.

சுந்தரர் உள்ளே சென்று சிவபெருமானைக் கண்டு தாயைப் பிரிந்திருந்த இளங்கன்று மீண்டும் தாயிடம் சேரும்போது கொள்ளும் பேரின்பப் பரவசம் அடைந்தார்.

"சேரமான் புறத்தில் நிற்கிறார்" என்று இறைவனிடம் தெரிவித்தார். அவர் நந்தி தேவனைக் கொண்டு சேரமானை அழைத்து வரச் செய்தார்.

"அழையாமலே நீ ஏன் வந்தாய்?" என்றார் பரமன்.

"இறைவா, உன் திருவடிகளைப் போற்றி முன்னால் வந்தேன். மேலும் ஒரு விண்ணப்பம்" என்றார்.

"அது என்ன?" என்றார் இறைவன்.

"திருக்கயிலாய மலையைக் குறித்து ஓர் உலா பாடியிருக்கிறேன்" என்றார் சேரமான்.

"அதைச் சொல்லுக" என்றார் இறைவன். சேரமான் தான் இயற்றிய உலாவைப் பாடிக் காட்டினார். அதைக் கண்டு மகிழ்ந்த இறைவன் "நீயும் ஆலாலசுந்தரனும் நம்முடைய கணங்களுக் கெல்லாம் தலைவர்களாக இருங்கள்" என்று அருளினார். இறைவனின் திருவருளைத் தலைமேற்கொண்டு சுந்தரமூர்த்தி நாயனார் ஆலாலசுந்தரர் ஆகி முன்னே தாம் செய்த திருத்தொண்டைச் செய்துவரத் தொடங்கினார். சேரமான் பெருமானும் கணநாதராகி திருத்தொண்டு ஆற்றினார். சேரமான் பெருமானின் ஆதிஉலாவை மாசாத்தனார் என்னும் புலவர் திருப்பாடவூர் என்னும் தலத்தில் வெளிப்படுத்தினார்.

அதே போலப் பரவையாரும் சங்கிலியாரும் முறையே கமலினி, அணிந்திதை ஆகி அங்கு வந்து சேர்ந்து தங்களுக்குரிய தொண்டில் ஈடுபடலாயினர்.

கல்லாப் பிழையும், கருதாப் பிழையும், கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்,
நின்னஞ்செழுத்தைச் சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந்
தொழாப் பிழையும் எல்லாப் பிழையும்
பொறுத்தருள்வாய்; கச்சியேகம்பனே.

- பட்டினத்துப் பிள்ளையார்

திருச்சிற்றம்பலம்

ஆதார நூற்பட்டியல்
BIBLIOGRAPHY

1. தவத்திரு சாந்தலிங்கர் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி வழங்கிய தமிழ்நெறி வழிபாட்டியல் பாட நூல்கள்.
2. திருஞான சம்பந்தர் தேவாரம் 1, 2, 3 பகுதிகள் - சொல்லரசு புலவர் வீ. சிவஞானம், கோயம்புத்தூர் விஜயா பதிப்பக வெளியீடு.
3. திருஞான சம்பந்தர் தேவாரம் 1, 2, 3 பகுதிகள் - சொல்லரசு புலவர் வீ. சிவஞானம், கோயம்புத்தூர் விஜயா பதிப்பக வெளியீடு.
4. சுந்தரர் தேவாரம் - சொல்லரசு புலவர் வீ. சிவஞானம், கோயம் புத்தூர் விஜயா பதிப்பக வெளியீடு.
5. பெரியபுராணம் சொல்லும் நாயன்மார் கதைகள் - சொல்லரசு புலவர் வீ. சிவஞானம், கோயம்புத்தூர் விஜயா பதிப்பக வெளியீடு.
6. பெரியபுராணம் 63 நாயன்மார்களின் சரிதம் - ஆசிரியர் திரு. கார்த்திகேயன், வெளியீடு கிரி டிரேடிங் ஏஜென்சி பிரைவேட் லிமிடெட்.
7. அறுபத்து மூவர் நாயன்மார் வரலாறு - ஆசிரியர் டாக்டர் திரு.கு. இராமு, வெளியீடு மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

8. சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறும் வாய்மொழியும் - ஆசிரியர் பிரம்மஸ்ரீ வேணுசீனிவாசன், பாபா பப்ளிகேஷன்ஸ், சென்னை.

9. அப்பர் - நூலாசிரியர் பருத்தியூர் கே. சந்தானராமன், வெளியீடு வரம் பப்ளிகேஷன்.

10. பலன் தரும் திருமுறைப் பதிகங்கள் - வெளியீடு சைவ நூல் அறக்கட்டளை, சென்னை.

11. பலன் தரும் திருப்பதிகங்கள் - வெளியீடு அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை.

நன்றி மலர்களின் காணிக்கை

இணையம் வழி:

1. Thevaram
2. Wikipedia
3. Imaya Varamban.com
4. Shaivam.org
5. Wordpress.com
6. Blogger.com
7. Deivigam
8. திருநெறிய தமிழோசை
9. Tamil Virtual Academy
10. YouTube சைவ பெட்டகம்

சிவாய நம ஓம்!!

போற்றி ஓம் நமசிவாய!

அருள்மிகு அம்பலவாணப் பெருமான் இன்னருளாலும், சாந்தலிங்கப் பெருமான் தண்ணருளாலும், அடியேனின் தீட்சாகுரு திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருப்பேரூர் ஆதீனம் இருபத்து நான்காம் குருமகா சந்நிதானங்கள் கயிலைக் குருமணி தமிழ்நெறி வழிபாட்டுத் தந்தை தெய்வத்திருப்பெருந்திரு சாந்தலிங்க இர்ராமசர்மி அடிகளார் அவர்களின் குருவருளாலும், அடியேன் எழுதிய 'நாயன்மார்கள் திருவடி போற்றி' மற்றும் 'தொகையடியார்கள் போற்றி பாடல்களை' திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருப்பேரூர் ஆதீனம் இருபத்தைந்தாம் குருமகா சந்நிதானங்கள் கயிலைப் புனிதர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் நல்ஆசியுடன் தேவாரம் பாடிய மூவர் திருவடிகளில் சமர்ப்பிக்கின்றேன்.

மேலும் அடியேன் எழுதிய மூன்று பதிகங்களையும் திருவருளையும் குருவருளையும் வேண்டி சமர்ப்பிக்கின்றேன்.

தமிழ்ச்செம்மல் முனைவர் அழகு சக்திகுமரன் அருளிய

1. நாயன்மார்கள் திருவடி போற்றி

திருவோட்டைப் பாதுகாக்க வைத்துத் தந்து
திரும்பியுமே பல்காலம் கழித்து வந்து
திருவோட்டால் உருவான வழக்கின் பின்னால்
திருவருளைப் பெற்றதிரு நீலகண்டர் போற்றி
வேதியராய் வந்திட்ட விமலன் கேட்க
விடைதந்தார் மனைவிக்கு மறுப்பும் இன்றி
ஆதிசிவன் அருள்பெற்று இயற்பகையார்
அவனுலகம் சேர்ந்திட்டார் அடிகள் போற்றி (1)

உழவர்கு லம்தன்னில் அவத ரித்து
உவந்தும்தான் அடியார்க்கு அமுதும் ஊட்ட
அரிந்தநெல்லை அரிசியாக்கி உணவாய்த் தந்த
அடியாராம் இளையான்குடி மாறன் போற்றி
மலையமானின் நாட்டினது மர்பு தித்து
சிவவேடம் பூண்டோரைச் சிவனாய்க் கண்டு
வேடமிட்ட முத்தநாதன் சூழ்ச்சி யாலே
வீழ்ந்திட்ட மெய்ப்பொருள்நா யனாரே போற்றி (2)

சுந்தரரைப் புறம்தள்ளி வைத்த நல்லார்
மனம்மாறி வன்தொண்டர் தனது வாயால்
திருத்தொண்டத் தொகைபாடக் கருவி யாகி
சிவகணமாம் விறண்மிண்டர் திருவடி போற்றி.

ஒருகோவ ணம்தன்னை ஈடு செய்ய
　　ஒருதட்டில் தன்மனைவி பிள்ளை யோடு
அருகமர்ந்து தராசதனைச் சமனும் செய்த
　　அமர்நீதி நாயனாரின் அடிகள் போற்றி (3)

மதயானை மலர்க்கூடை தன்னைப் பறிக்க
　　மனம் நொந்து துதிக்கைதனை வெட்டி நிற்க
கருவூரில் சிவகாமி யாண்டார் கண்ட
　　கடுந்துயரைத் தீர்த்தஎறி பத்தர் போற்றி
பொய்யான திருநீறு அணிந்து வந்த
　　பகைவனான அதிசூரன் வாளாள் மாய்ந்து
மெய்யான சிவனடியின் நிழலைச் சேர்ந்த
　　மேலான ஏனாதி நாதர் போற்றி (4)

இறைவனார்க்கு ஒருகண்ணைத் தந்து விட்டு
　　மறுகண்ணைத் தோண்டிடவே நின்ற வேளை
கண்ணப்ப நில்லென்று ஈசன் சொன்னார்
　　திண்ணனான கண்ணப்பர் பாதம் போற்றி
திருப்பனந்தாள் திருத்தலத்தில் சாய்ந்திருந்த
　　இறைவனையே நிமிர்த்திட்ட அடிகள் போற்றி
கலையரென்ற இயற்பெயரும் பெற்றி ருந்த
　　குங்குலியக் கலயனார் பாதம் போற்றி (5)

கஞ்சாறு தலம்தன்னில் அவத ரித்து
　　கயிலாய நாதரவர் கேட்ட தாலே
திருக்கரத்தால் கூந்தலையும் அரித்த ளித்த
　　திருமானக் கஞ்சாறர் பாதம் போற்றி

அரிவாளால் குரல்வளையைக் கொய்ய நின்ற
அம்பலத்தில் ஆடுகின்ற அய்ய னின்கை
கமரிருந்து தொண்டரவர் கரங்கள் பற்ற
அப்பனருள் பெற்ற அரிவாட்டாயர் போற்றி (6)

மாட்சிமிகு மங்கலமாம் திருத்தலம் தன்னில்
ஆயர்கு லம்தன்னில் அவத ரித்து
அரிதான குழலிசையால் மயங்கச் செய்து
அருளைப்பெற் றஆனாயர் அடிகள் போற்றி
சிவனுக்குச் சாத்துகின்ற சந்த னத்தை
சிறப்புமிக்கப் பணியாக அரைத்துத் தந்தார்
சந்தனக்கல் அதுதன்னில் முழங்கை தேய்த்து
சிந்தினராம் உதிரத்தை மூர்த்தி போற்றி (7)

திருப்புகலூர் வாழ்ந்திருந்த அடியா ராகி
சீர்மாலை இறைவனுக்கு அணியச் செய்து
திருஞான சம்பந்தர் திரும ணத்தில்
திருவருளைப் பெற்றமுரு கனாரே போற்றி
திருத்தலையூர்த் திருத்தலத்தில் பிறப்பெடுத்து
திருக்குளத்தில் கழுத்தளவு நீரில் நின்று
உருத்திரத்தை ஓய்வின்றி ஓதி நின்ற
உருத்திரபசுபதியாரின் பாதம் போற்றி (8)

ஆதனூராம் திருத்தலத்தில் ஆதி குடியில்
அவதரித்து சிவனைத்தான் நேரில் காண
திருப்புன்கூர் நந்தியினை விலகச் செய்து
தில்லைசேர்ந்த திருநாளைப் போவார் போற்றி

வருகின்ற சிவனடியார் குறிப்ப றிந்து
வந்தாரின் ஆடைதன்னின் அழுக்க கற்றி
வந்தசிவ அடியாரின் உள்ளம் நோக
வருந்திட்ட திருக்குறிப்புத் தொண்டர் போற்றி (9)

விசாரசரு மன்என்று நாமம் பெற்றே
விதித்ததொரு பூசைக்கு இடை யூறாக
இருந்திட்ட தந்தைதனின் கால்தரித் திட்ட
சண்டீசப் பதம்பெற்றார் பாதம் போற்றி
மண்மீது மருள்நீக்க அவத ரித்த
மாதினியார் மகனாரின் பாதம் போற்றி
மதயானை வலம்வந்து துதித்து நின்ற
திருநாவுக் கரசரவர் பாதம் போற்றி (10)

மன்னன்கூன் பாண்டியனின் அமைச்ச ராகி
மதுரையிலே குலச்சிறையார் அவர்தம் தொண்டால்
சமணர்க ளைஒடுக்கிக் கழுவி லேற்றி
சைவநெறி தழைக்கச்செய் நாதன் போற்றி
சுந்தரர்க்கு முன்னதாகக் கயிலை சென்று
சுந்தரரை நாளெல்லாம் நினைத்து இருந்து
வந்தனைகள் செய்தவரின் அடிகள் போற்றி
பெருமிழலைக் குறும்பரடி போற்றி போற்றி (11)

கயிலைக்குத் தலையாலே நடந்து சென்று
கயிலைதனின் நாதரவர் அருளைப் பெற்று
காலத்தால் அழியாத முத்தி பெற்ற
காரைக்கால் அம்மையாரின் பாதம் போற்றி

தனமென்று ஏராளம் பெற்றி ருந்தும்
தயங்காமல் அப்பர்தம் பெயரைத் தாங்கி
தானங்கள் தவம் போல ஆற்றி வந்த
திங்களூரான் அப்பூதி அடிகள் போற்றி (12)

அயவந்திக் கோவிலினில் சிலந்தி ஒன்று
அரனாரின் திருமேனி ஊர்ந்து செல்ல
தன்மனைவி வாயினாலே ஊதும் வேளை
தவறென்று ரைத்தநீல நக்கர் போற்றி
திருவாரூர் ஆலயத்தில் தீபம் ஏற்றி
வீடொன்றில் நெய்கேட்டு நிறைவே றாமால்
நீராலே விளக்கிடவே அசரீ ரிசொல்ல
நீர்தீப மிட்டநமி நந்தி போற்றி (13)

தாயான உமையவளே தேடி வந்து
பொற்கிண்ணம் தன்னில்பால் நிரப்பி வைத்து
பொழிந்தும்தான் புகட்டிடவே உவந்து உண்ட
திருஞான சம்பந்தர் பாதம் போற்றி
வன்தொண்டர் மீதினிலே வருத்தம் கொண்டு
வாளாலே வயிற்றினிலே குத்தி மாண்டும்
பின்னர்நம் சிவனாரின் அருளும் கிட்டி
பெரும்புகழ்கொள் கலிக்காமர் பாதம் போற்றி (14)

ஆடுகளை மேய்த்திட்ட மூலன் உடலில்
ஆண்டுகள்மூ வாயிரம்தான் வாழ்ந்தி ருந்து
அருந்தவத்தால் திருமந்தி ரமென்னும் நூலை
அவனிக்கு அளித்ததிரு மூலர் போற்றி

கண்பார்வை இளமையிலே நீங்கி னாலும்
கரையினிலும் குளத்தினிலும் தடிகள் நட்டு
சமணர்க ளின்சதிகள் முறிய டித்த
தண்டியடி கள்பாதம் போற்றி போற்றி (15)

திருவேற்கா டுபதிதன்னில் உதித்த அடிகள்
சூதாடிப் பெற்றிட்ட செல்வம் யாவும்
சிவனடியார் சேவைக்கே செலவு செய்த
மூர்க்கநாய னார்பாதம் நாளும் போற்றி
ஓம்நமசி வாயவென்று ஓதி நின்று
ஒப்பற்ற திருவாரூர்த் தலத்தில் வந்து
சுந்தரர்மேல் பேரன்பு பூண்டி ருந்த
சோமாசி மாறனாரின் பாதம் போற்றி (16)

காஞ்சியிலே வேளாளர் குலத்தில் தோன்றி
கல்லொன்றை மலராக வீசி நின்று
காலமெல்லாம் ஈசனாரின் தொண்டு செய்த
சாக்கியநாயனார் பாதம் போற்றி போற்றி
சிவனாரின் திருநாமம் ஓதி நின்று
சிவனடியார்க் கமுதும்தான் படைத்து வந்து
சிவத்தொண்டே மூச்சென்று வாழ்ந்தி ருந்த
சிறப்புலியார் பொற்பாதம் போற்றி போற்றி (17)

பெற்றமகன் சீராளன் தன்னை அரிந்து
பித்தனுக்கு கறியுணவு படைத்து அளித்து
சிவத்தொண்டால் சிறுத்தொண்டர் ஆகி விட்ட
சீர்மிக்க நாயனாரின் பாதம் போற்றி

மலைநாட்டு கொடுங்களூரில் அரசை ஆண்டு
நடராசன் சிலம்பொலியைக் கேட்டு மகிழ்ந்து
ஆரூரில் சுந்தரர்க்குத் தொண்டும் செய்து
முத்திபெற்ற கழறிற்று அறிவார் போற்றி (18)

மலர்கொய்து மாலையாக ஆக்கித் தந்து
மற்றவரை அப்பணியில் சேர்த்துக் கொண்டு
மகேசனின் திருவருளைப் பேறாய்ப் பெற்ற
பெருமைசான்ற கணநாதர் பாதம் போற்றி
களத்தூரில் மன்னர்போல் வாழ்ந்தி ருந்து
கனிவுடனே கூத்தபிரான் அருளை வேண்டி
கூத்தனவன் திருவடியை முடியும் ஆக்கி
கொற்றவராம் கூற்றுவர்தம் பாதம் போற்றி (19)

பகைவர்தம் படைவீரர் தலைக ளோடு
சடையுடைய தலைகண்டு உள்ளம் தளர்ந்து
தீக்குழியில் இறங்கிப்பின் இறையைச் சேர்ந்த
புகழ்ச்சோழர் பொன்னடிகள் போற்றி போற்றி
திருமுனைப்பா டிதன்னில்கு றுநில மன்னர்
திருவாதி ரைதோறும் அடியார் களுக்கு
திருவமுது செய்ததுடன் பொன்னும் தந்த
நரசிங்க முனையரையர் பாதம் போற்றி (20)

தனக்கென்று வந்தமீனை இறைக்குத் தந்து
தடையின்றி அவருக்கே அர்ப்ப ணித்து
மனம்தன்னில் மகேசனையே போற்றி நின்று
மகிழ்ந்திருந்த அதிபத்தர் பாதம் போற்றி

பணியாளின் திருப்பாதம் கழுவும் வேளை
தடையாக நின்றிட்ட துணைவி யாரின்
கரம்தன்னைத் துண்டித்துக் கலங்கா நின்ற
கலிக்கம்பர் திருவடிகள் போற்றி போற்றி (21)

திருவிளக்கில் நெய்பெய்து ஒளியும் ஊட்டி
திருத்தொண்டு செய்கையிலே வறுமை எய்தி
குருதியினை அகல்விளக்கில் நிரப்பி நின்றார்
தியாகராசர் தடுத்தாண்ட கலியர் போற்றி
சிவனாரை இகழ்வோரின் நாக்கு அறுத்து
சிறிதளவும் அஞ்சாத சிந்தை கொண்டு
சக்தியுடன் வரிஞ்சையூர் அவத ரித்த
சக்திநாய னார் பாதம் போற்றி. (22)

நற்காஞ்சி நகர்தன்னில் பிறப் பெடுத்து
நற்பனுவல் இயற்றுகின்ற ஆற்றல் கொண்டு
நடனசபா பதியாரின் சீட னான
ஐயடிகள் காடவர்கோன் பாதம் போற்றி
இருக்குவேளூர் தலம்தன்னில் தோன்றி வந்து
வளம்குன்றி வறுமையும்தான் வந்தபோது
கணம்புல்லும் தலைமுடியும் கருக்கித் தானே
விளக்கெரித்துக் கண்ட கணம்புல்லர் போற்றி (23)

திருக்கடவூர்த் திருத்தலத்தில் வாழ்ந்து வந்து
தன்பெயரால் காரிக்கோ வைதனை இயற்றி
மூவேந்தர் வழங்கிட்ட நிதியைக் கொண்டு
ஆலயங்கள் அமைத்தகாரி அடிகள் போற்றி

குலச்சிறையார் அழைத்திடவும் மதுரை வந்து
சூழ்சமணர் சூழ்ச்சிநெறி தனைஅ ழித்து
திருஞான சம்பந்தர் பதிகம் பாட
கூன்நீங்கி நின்றசீர்நெ டுமாறன் போற்றி (24)

திருமயிலை மாநகரில் பிறப்பெடுத்து
தினந்தோறும் சிவனடிகள் பணிந்து நின்று
மனம்தன்னில் ஆலயத்தைக் கட்டி வைத்து
அத்தனவன் அருள்பெற்ற வாயிலார் போற்றி
திருநீடூர் திருத்தலத்தில் அவத ரித்து
பிறருக்காகப் போரிட்டு வாகை சூடி
பெற்றிட்ட செல்வங்கள் சிவத்தொண் டுக்கு
செலவழித்த முனையடுவார் பாதம் போற்றி (25)

இறைவனுக்குத் தொடுத்தமாலை மோந்து பார்க்க
இரக்கமின்றி மூக்கறிந்தார் செருத்து ணையார்
மலர்பறித்த கரம்தன்னைத் தரித்து நின்ற
கழற்சிங்கர் திருவடிகள் போற்றி போற்றி
ஆதித்த சோழனவன் மரபில் தோன்றி
வேளிர்கு லக்குறுநி லமன்னர் ஆகி
நெல்லோடு நிதிப்பண்டா ரம்தி றந்து
நிதிவழங்கி நின்றஇடங் கழியார் போற்றி (26)

பிறன் மனைவி என்கின்ற எண்ணம் இன்றி
மலர்மோந்த கழற்சிங்கர் தேவி தன்னின்
மூக்கறுத்த செருத்துனையார் பாதம் போற்றி
சிவலோகம் சேர்ந்திட்ட அடிகள் போற்றி

செருவிலிப்புத் தூர்தன்னில் பிறப்பெடுத்து
நாள்தோறும் படிக்காசைப் பெற்றுக் கொண்டு
நற்றொண்டு பலஆற்றி சிவலோ கத்தில்
நல்லிடம்கான் புகழ்த்துணையார் பாதம் போற்றி (27)

போருக்குச் சென்றபோது இறைவனுக் காக
விட்ட செந்நெல் தனைஉண்டு நின்ற பேரை
உறவினரைகூட் டத்தோடு கொன்று குவித்த
கோட்புலியார் திருப்பாதம் போற்றி போற்றி
திருநின்ற ஊரினிலே அவத ரித்து
மனம்தன்னில் திருக்கோயில் அமைத்து இருந்த
மன்னனான பல்லவப்பே ரரச ருக்கு
உணர்த்திட்ட பூசலார்தம் பாதம் போற்றி (28)

மணிமுடிச்சோ ழனவனுக்கு மகளுமாகி
மதிப்புறுகூன் பாண்டியனின் மனைவி யாகி
காழியானை வரவழைத்துச் சமனம் வென்ற
மங்கையர்க்க ரசியாரின் பாதம் போற்றி
காம்பீலி நகரத்தில் அவத ரித்து
சாலியர்கு லம்போற்ற வாழ்ந்து வந்து
திருவைந்தெ ழுத்துதன்னை தினமும் ஓதி
திருத்தொண்டு புரிந்திட்ட நேசர் போற்றி (29)

சுபதேவன் கமலவதி மகனாய் ஆகி
கோச்செங்கட் சோழனென்ற பெயரும் தாங்கி
முற்பிறப்பில் சிலந்தியாக இருந்தவர் தான்
முடிசூடி மன்னரானார் பாதம் போற்றி

திருஞான சம்பந்தர் பதிகம் தன்னைத்
தினந்தோறும் யாழினிலே மீட்டி வந்து
திருநல்லூர்த் திருமணத்தில் சோதி யான
திருநீல கண்டயாழ்ப்பா ணர்அடி போற்றி 30

ஆதிசைவ மரபுவந்த அடிகள் போற்றி
ஆரூரர் சுந்தரரின் அப்பா போற்றி
இசைஞானி யைமணந்த நாதன் போற்றி
கோதில்லா சடையனாரின் பாதம் போற்றி
சடையநா யனாருக்கு மனைவி யாகி
சான்றோராம் சுந்தரரை ஈன்றெ டுத்து
சிவலோகம் சேர்ந்திட்ட அம்மை போற்றி
இசைஞானி அம்மையாரின் பாதம் போற்றி 31

திருவெண்ணெய் நல்லூரில் வழக்கு ரைத்து
அடிமையென்று சுந்தரரை அழைத்துச் சென்று
ஆலயத்துள் மறைந்திட்டார் அரனார் நொடியில்
வன்தொண்டர் ஆரூரர் பாதம் போற்றி
அருண்மொழித்தே வராகத்தான் அவத ரித்து
அநபாயச் சோழனவன் வேண்டல் கேட்டு
நாயன்மார் கதைகளைத்தான் விரித்து உரைத்த
நல்லடியார் சேக்கிழாரின் பாதம் போற்றி! 32

2. தொகையடியார்கள் போற்றி

அத்தனவன் திருமேனி அலங்கரித்து
அறுதொழிலும் ஆர்வமுடன் புரிந்திருந்து
நாளெல்லாம் நான்கு நெறி நன்கறிந்த
தில்லைவாழ் அந்தணர்தம் திருவடி போற்றி
சிவனவனின் திருவடியை தினமும் நாடி
அவனன்றி பிறதெய்வம் பாடா நின்று
பொய்நீக்கி பொய்க்கடிமை ஆகா நிற்கும்
பொய்யடிமை இல்லாத புலவர் போற்றி 1

இறைவனொடு அவனடியார் தமைபூ சித்து
இறைவனவன் கதைகளையே விரும்பிக் கேட்டு
சிந்தையிலே முப்பொழுதும் சிவனை வைத்த
பத்தராய்ப் பணிவார்தம் பாதம் போற்றி
தில்லையிலே நடம்புரியும் கூத்தன் தன்னை
தித்திக்கும் தமிழோடு வேறு மொழியில்
மெய்யாக மனமுருகிப் பாடி நிற்கும்
பரமனையே பாடுவார்தம் பாதம் போற்றி 2

முத்திதன்னை முற்றிலுமே பெற்ற வராக
சிவஞான ஒளியும்தான் வீச நின்று
சித்தத்தை நாதாந்தம் தனில்நி றுத்தும்
சித்தத்தை சிவனின்பால் வைத்தார் போற்றி

பக்தியுடன் பரமனவன் பாதம் பாடி
பித்தனவன் பெருமைகளைக் கேட்டி ருந்து
சந்ததமும் சதாசிவனை வந்தனை செய்யும்
திருவாரூர்ப் பிறந்தாரின் பாதம் போற்றி 3

சிவனருளால் புவிமீது பிறப்பெடுத்து
அவனருளால் சிவாகம நெறியில் நின்று
முப்பொழுதும் முறையாக அர்ச்சனை செய்யும்
முப்போதும் திருமேனி தீண்டுவார் போற்றி
தத்துவத்தை உணர்ந்திட்ட தரும சீலர்
தவறாமல் கொள்கைவழி நிற்கும் சீலர்
திருமேனி முழுவதும்தி ருநீற்றை அணியும்
முழுநீறு பூசியமு னிவர்கள் போற்றி 4

தமிழ்வழங்கும் மூவேந்தர் நாட்டுக் கப்பால்
தனியடியார் காலத்தின் முன்னும் பின்னும்
சிவனடியைச் சார்ந்திட்ட அடியார் எல்லாம்
அப்பாலும் அடிசேர்ந்தார் அடிகள் போற்றி
திருநாரை யூர்த்தலத்தில் அவத ரித்து
கணபதியின் அருளும்தான் கூடி நின்று
ராஜராஜன் அழைத்திடவும் தில்லை சென்று
திருமுறைகள் தொகுத்தநம்பி யாண்டார் போற்றி 5

3. போற்றித் திருப்பதிகம்

ஆலகால விடமுண்ட ஐயனடி போற்றி
அண்டத்தை ஆள்கின்ற ஆலவாயான் போற்றி
காலனையும் காலாலே உதைத்தவனே போற்றி
காவலனாய்த் தேவரையும் காப்பவனே போற்றி
வேலனுக்கு வேல்கொடுத்த வித்தகனே போற்றி
வேந்தர்க்கு வேந்தனான விமலனடி போற்றி
மாலவனின் தங்கையினை மணந்தவனே போற்றி
மழுவேந்தும் கரமுடைய மன்னவனே போற்றி

எண்குணத்தான் எம்பெருமான் ஏந்தலடி போற்றி
ஏறமரும் எழிலான ஈசனடி போற்றி
கண்ணுதலான் காந்தம்போல் அருள்புரிவோன் போற்றி
காதலர்க்கு கருணைவடி வானவனே போற்றி
பண்ணிசைத்துப் பாடிடுவேன் பரம்பொருளைப் போற்றி
பக்தருக்குப் பாசமுடன் வரமருள்வாய் போற்றி
எண்திசையும் நீக்கமற நிறைந்தவனே போற்றி
ஏக்கமுடன் தேடுகிறேன் என்னவனே போற்றி

ஏகனாக அநேகனாக இருப்பவனே போற்றி
என்றென்றும் இளமைமிகு அழகனடி போற்றி
தேகமெங்கும் சாம்பலினைப் பூசியவா போற்றி
தேடியுமே மாலயனும் அறியாதான் போற்றி

தாகமுடன் தேடுகின்றேன் தயைசெய்வாய் போற்றி
தவிப்போர்க்குத் துணையாகும் தஞ்சனடி போற்றி
வேகத்தைத் தடுத்தாண்ட விரிசடையே போற்றி
வேழத்தோல் தரித்திட்ட வீரனடி போற்றி

செம்பொருளாம் சேயோனின் பொன்னடிகள் போற்றி
சேய்தன்னைக் காக்கின்ற தாயும்நீ போற்றி
உம்பர்கள் தலைவனான உத்தமனே போற்றி
ஒருவனான ஒப்பில்லாத உயர்ந்தோனே போற்றி
அம்பிகையின் நாயகனே அற்புதனே போற்றி
அனலான மலையாகி நிற்பவனே போற்றி
தம்பிரானாய்த் தமிழ்ச்சங்கம் அமர்ந்தவனே போற்றி
தத்துவனே தயாபரனே சாம்பசிவா போற்றி

கண்ணுள்ளே மணியாகி ஒளிதருவாய் போற்றி
கனகசபை நட்டமிடும் நடராசா போற்றி
மண்ணுயிர்க்கு அனைத்துமாக ஆனவனே போற்றி
மாதவர்க்கும் மறையவர்க்கும் முதல்வனடி போற்றி
அண்டமெல்லாம் படைத்திட்ட அப்பனடி போற்றி
ஆரூரில் அமர்ந்திட்ட அரசனடி போற்றி
பண்ணிடனும் பூசைகளும் நாளுமுனைப் போற்றி
பாவங்கள் வேரறுக்கும் பரமசிவன் போற்றி

விடமுண்ட கண்டனடி விழைந்திடனும் போற்றி
விற்பன்னன் எந்தையடி என்றென்றும் போற்றி
இடப்பாகம் உமைக்காகத் தந்தவனே போற்றி
என்னுயிராம் எந்தைகுரு இணையடிகள் போற்றி

இடரேதும் வாராமல் தடுப்பவனே போற்றி
இன்பத்தை ஈந்தருளும் இறைவனடி போற்றி
சுடலையாடி மேனியனே பசுபதியே போற்றி
சுந்தரரை ஆட்கொண்ட சுந்தரனே போற்றி

வரம்தன்னைத் தருகின்ற வள்ளலடி போற்றி
வற்றாத அருள்வெள்ளப் பெருக்கானாய் போற்றி
கரங்கூப்பி வணங்கிடுவேன் கண்ணீரால் போற்றி
கருணைமழை பொழிகின்ற கார்முகிலே போற்றி
புரம்மூன்றும் எரித்திட்ட வில்லோனே போற்றி
புண்ணியமும் தரவல்ல நல்லோனே போற்றி
அரவத்தை அணியாக அணிந்தவனே போற்றி
ஆதியொடு அந்தமுமே இல்லானே போற்றி

நெஞ்சத்தில் நிறைந்திட்ட நேசனடி போற்றி
நித்தமுமே நின்னடியைப் பணிந்திடுவேன் போற்றி
தஞ்சமென்று புகுவோர்க்கு அடைக்கலமே போற்றி
தத்தளிக்கும் பேர்க்குக்கை கொடுப்பவனே போற்றி
அஞ்செழுத்து மந்திரத்தின் அருமறையே போற்றி
அஞ்சாத மனம்தன்னை அருளுமலை போற்றி
செஞ்சுடராய்ப் பிழம்பாகி நின்றவனே போற்றி
சேரிளமைக் குழகனடி சேர்ந்திடணும் போற்றி

இல்லார்க்கும் எல்லார்க்கும் இனியவனே போற்றி
இடுக்கண்கள் களைகின்ற ஈசனடி போற்றி
அல்லார்க்கும் அருள்கின்ற அத்தனடி போற்றி
அன்பர்க்கு அன்பான அரனடிகள் போற்றி

சொல்லிடனும் நமச்சிவாய நாளுமுனைப் போற்றி
சொற்றுனையாய் வருகின்ற சொக்கனடி போற்றி
வல்லமையைத் தருகின்ற வலியவனே போற்றி
வானவர்கள் பணிந்தேத்தும் பெரியோனே போற்றி

நந்தனார்க்கு நலமளித்த நாதனடி போற்றி
நல்லடியார் தமைக்காக்கும் வேதனடி போற்றி
சந்ததமும் சங்கரனைப் பாடிடுவேன் போற்றி
சந்திரனைச் சடைமீது சூடியவா போற்றி
தந்தத்தை உடையவனின் தந்தையடி போற்றி
தமியேனுக் கெந்நாளும் துணையாவான் போற்றி
விந்தைபல செய்கின்ற வினோதனடி போற்றி
வேதனைகள் போக்குகின்ற பேரொளியே போற்றி

உருவமாகி அருவமாகி உள்ளவனே போற்றி
உயிரனைத்தும் காக்கின்ற ஒருவனடி போற்றி
விரும்பிநாமும் வேண்டிடக்கண் பார்ப்பவனே போற்றி
வேதனைகள் போக்குகின்ற பரமனடி போற்றி
குருவாகி அடியேனை ஆள்பவனே போற்றி
குற்றங்கள் பொறுக்கின்ற கொற்றவனே போற்றி
கருவாக திருவாக உருவானாய் போற்றி
கங்கையினை முடிகொண்ட கயிலைமணி போற்றி.

4. வேண்டும்! வேண்டும்!!

சொந்தமென்று வந்துமென்னை ஆள வேண்டும்
சோதனைகள் யாவுமினி மாள வேண்டும்
பந்தங்கள் போக்கவழி தேட வேண்டும்
பரம்பொருளே பிறப்பறுத்துக் காக்க வேண்டும்
வந்தனைகள் செய்துமுன்னைப் பாட வேண்டும்
வஞ்சமில்லா நெஞ்சமுடன் வாழ வேண்டும்
எந்தையுமாய் அன்னையுமாய் ஆகவேண்டும்
ஈசனடி என்னுயிரும் சேர வேண்டும்

ஐந்தவித்தான் தாளிரண்டும் நாட வேண்டும்
ஐங்கரனின் தந்தைபுகழ் பாட வேண்டும்
பைந்தமிழில் சொல்லெடுத்துப் போற்ற வேண்டும்
பரமனவன் திருநாமம் சாற்ற வேண்டும்
நைந்திடினும் நமசிவாய சொல்ல வேண்டும்
நமபயத்தை அவனருளால் வெல்ல வேண்டும்
மைந்தன் நான் அழைத்திடவும் நெருங்க வேண்டும்
மறுபிறப்பு இல்லாத நிலையும் வேண்டும்

பித்தனவன் தாள்சேர எண்ண வேண்டும்
பிறவிநோயும் தீரவழி பண்ண வேண்டும்
நித்தமந்த நிர்மலனை வணங்க வேண்டும்
நேயனவன் நாயேனைக் காக்க வேண்டும்

தத்தளிக்கும் பக்தரிடர் ஓய வேண்டும்
　　தத்துவனும் ஞானமெனக் கருள வேண்டும்
சித்தமெல்லாம் சிவமயமாய் ஆக வேண்டும்.
　　சிறியேனை சிவனருளே சூழ வேண்டும்

அருணகிரி அழகனருள் கூட வேண்டும்
　　அத்தனடி அன்றாடம் தேட வேண்டும்
கருணைவடி வாயவனும் காக்க வேண்டும்
　　காதலாகிக் கண்ணீரில் நீந்த வேண்டும்
பெருமைமிகு அவன்பெயரே நாவில் வேண்டும்
　　பேரிடரைக் தாங்கிடநல் காவல் வேண்டும்
அருள்மிகு அண்ணாவே அருகில் வேண்டும்
　　ஆலமர்ந்த செல்வனடி நெருங்க வேண்டும்

இமைப்பொழுதும் நீங்காத நினைவு வேண்டும்
　　ஏறமரும் இறைவனடி ஏத்த வேண்டும்
உமைபங்கன் உள்ளத்தில் உறைதல் வேண்டும்
　　ஊனமெல்லாம் ஓடோடி மறைதல் வேண்டும்
இமயவர்க்கும் தலைவனருள் என்றும் வேண்டும்
　　இன்னல்களும் மின்னலைப்போல் அகல வேண்டும்
சுமைகளெல்லாம் மனத்திருத்து விலக வேண்டும்
　　சுடரொளியே என்னுள்ளே உலவ வேண்டும்

அம்பலத்தில் ஆடுபவன் அருள வேண்டும்
　　ஆதிவடி வானவனே அருள வேண்டும்
வெம்புலியின் தோலணிந்தோன் அருள வேண்டும்
　　விரிசடையோன் விமலனவன் அருள வேண்டும்

செம்பவள மேனியுடன் அருள வேண்டும்
சிலையெடுத்து புரமெரித்தோன் அருள வேண்டும்
வெம்பிறவிக் காடுதன்னைக் கடக்க வேண்டும்
வெண்பனியோன் திருவடியில் கிடக்க வேண்டும்


முக்கண்ணன் முதல்வனருள் நாளும் வேண்டும்
முக்திதன்னைப் பெறும் வழியை நாட வேண்டும்
தக்கனவன் செறுக்கறுத்தோன் காக்க வேண்டும்
தவிப்போரின் துயர் போக்க நோக்க வேண்டும்
எக்கணமும் எம்பிரானின் நினைவு வேண்டும்
எளியேனின் எண்ணத்தில் நிறைவு வேண்டும்
பக்கத்தில் பரமசிவன் நிழலும் வேண்டும்
பார்வதியின் நாயகனின் கழல்கள் வேண்டும்

நஞ்சுண்ட கண்டனடி போற்ற வேண்டும்
நலிவடையும் மனம்தன்னைத் தேற்ற வேண்டும்
தஞ்சமென்று கரம்கூப்பிப் பணிதல் வேண்டும்
தடைகளெல்லாம் தாண்டிடவே துணிதல் வேண்டும்
செஞ்சுடரை நெஞ்சினிலே நிறுத்த வேண்டும்
சிந்தையிலே சேயோனைப் பொறுத்த வேண்டும்
வஞ்சமனம் மாயைதன்னை மறக்க வேண்டும்
வற்றாத வேட்கைகளைத் துறக்க வேண்டும்

ஆதியந்தம் இல்லாதான் அன்பு வேண்டும்
அப்பனவன் அனைத்துநலன் அருள வேண்டும்
சோதியனும் சுடர்விழியால் பார்க்க வேண்டும்
சோர்வினையும் விரைந்தும்தான் தீர்க்க வேண்டும்

மேதினியில் மேன்மைபல விளைய வேண்டும்
மெல்லவரும் துயரையவன் களைய வேண்டும்
வேதியரும் காணாதான் விரைதல் வேண்டும்
வேதனைகள் அவனருளால் கரைதல் வேண்டும்

சந்ததிகள் அவனருளால் வாழ வேண்டும்
சங்கரியின் நாதனருள் சூழவேண்டும்
வந்தவினை வந்தவழி ஓட வேண்டும்
வாழ்வுதன்னில் வளமனைத்தும் கூட வேண்டும்
நிந்தனைகள் செய்வோரை விலக்க வேண்டும்
நேசனவன் பேரொளியில் கலக்க வேண்டும்
சந்ததமும் நமசிவாய மொழிய வேண்டும்
சங்கடங்கள் வேரோடு ஒழிய வேண்டும்.



5. வேண்டாம்! வேண்டாம்!!

அன்பேதான் சிவமிதனை மறக்க வேண்டாம்
ஆதியவன் அடிபணிய மறுக்க வேண்டாம்
இன்னல்களைக் கண்டென்றும் அஞ்ச வேண்டாம்
ஈசனன்றி எவரையும்நாம் கெஞ்ச வேண்டாம்
புன்சிரிப்பால் புரமெரித்த பரமன் தன்னை
பூசிக்க ஒருநாளும் தவற வேண்டாம்
மன்மதனை எரித்திட்ட சிவனை நாளும்
மறந்தும்தான் உழல்கின்ற மனமும் வேண்டாம்

எந்ததுயர் வந்துநம்மை எதிர்த்த போதும்
எம்பெருமான் பொன்னடிகள் மறக்க வேண்டாம்
பந்தங்கள் வலையாகி நம்மைச் சூழ்ந்தால்
பரம்பொருளால் அறுத்தெடுக்கத் தயங்க வேண்டாம்
சொந்தமென்று ஆகிவந்த உறவு எல்லாம்
சொந்தமில்லை என்றுணர மயங்க வேண்டாம்
கந்தனுக்கு வேல்கொடுத்த அப்பன் தன்னின்
கருணையினைக் கனவினிலும் மறக்க வேண்டாம்

பொய்யான பக்திசெய்து புவியின் மீது
புலையரென கடையரென வாழ வேண்டாம்
மெய்யடியார் மேன்மையுடன் நமக்குத் தந்த
மெருகான நிலையிழந்து தாழ வேண்டாம்

கொய்திடணும் குற்றங்களை உள்ளம் தன்னில்
குறையான எண்ணங்கள் நிறைய வேண்டாம்
உய்திடணும் உமைபங்கன் பெயரைச் சொல்லி
ஊற்றெடுக்கும் அவனருளை அள்ளி அள்ளி

கங்கையினை முடியணிந்த வள்ளல் தன்னின்
கருணையினை மறந்தும்நாம் திரிய வேணடாம்
தங்கநிற மேனியனின் தயவை என்றும்
தவறியுமே புறந்தள்ளும் உள்ளம் வேண்டாம்
செஞ்சுடராய் மலையான நாதன் தன்னைச்
சீராகப் போற்றாத நாவும் வேண்டாம்
தஞ்சமென்றும் அண்ணலவன் பாதம்தானே
தவறியுமே அதைமறந்து அலைய வேண்டாம்

புலித்தோலை இடையணிந்த ஐயன் தன்னைப்
போற்றியுமே வணங்காமல் வழுவ வேண்டாம்
நலிந்தும்நாம் வீழ்கின்ற வேளைதன்னில்
நவசிவாய நாவிருத்தத் தவறவேண்டாம்
அலியென்றும் ஆணென்றும் பெண்ணுமான
அத்தனவன் அடிபணியப் பிறழ்தல் வேண்டாம்
மலிவான எண்ணங்கள் மனத்தில் வேண்டாம்
மகாதேவன் பொற்பாதம் அகல வேண்டாம்

உள்ளமென்னும் கோயிலிலே உறைகின்றான் ஈசன்
உண்மையிதை ஒருநாளும் மறக்க வேண்டாம்
கள்ளமில்லா உள்ளமுடன் வாழ்ந்தால் போதும்
கவலையென்று ஏதுமில்லை கலங்க வேண்டாம்

கொள்ளைகொள்ளும் பேரழகன் குமரன் தந்தை
குறைகளெல்லாம் களைந்திடுவான் அஞ்ச வேண்டாம்
பிள்ளைக்கறி கேட்டிட்ட பெருமான் நம்மின்
பிறப்பறுத்து அருள்செய்வான் கவலை வேண்டாம்.

போற்றி ஓம் நமசிவாய!
சிவாய நம ஓம்!!

இந்நூலாசிரியரைப்பற்றி...



இந்நூலாசிரியர்
அழகு சக்திகுமரன்

'தமிழ்ச் செம்மல்', முனைவர் அழகு சக்திகுமரன், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டியில் 2.7.1948-ல் பிறந்தவர்.

தந்தை திரு. கந்தசாமிப் பிள்ளை. தாயார் வள்ளியம்மாள். பெற்றோர் இட்ட பெயர் முருகன்.

எம்.ஏ ஆங்கில இலக்கியமும், எம்.எட்., பட்டமும் பெற்று மேல்நிலைப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

பட்டிமன்றப் பேச்சாளர், எழுத்தாளர் மற்றும் ஆன்மீகச் சொற்பொழிவாளர்.

பெற்ற பட்டங்கள் : கவிச்செல்வர், கவிமுகில், கவித் தென்றல், தமிழ் வள்ளல், மனித நேயச் செம்மல், பாரதி பணிச்செல்வர், பாவேந்தர் நெறிச் செம்மல், இலக்கியச் சுடர் மணி.

பெற்ற விருதுகள் : தமிழ்நாடு அரசின் 'தமிழ்ச் செம்மல்' விருது, கவிமாமணி விருது, பொற்கிழிக் கவிஞர் விருது, மறைமலை அடிகளார் விருது, உவமைக் கவிஞர் சுரதா விருது, டாக்டர் மு.வரதராசனார் விருது, திருவள்ளுவர் இலக்கிய விருது.

எழுதியுள்ள நூல்கள் : கவிதை நூல்கள் - 2, ஆன்மிக நூல்கள் - 4, சிறுகதைத் தொகுப்பு நூல்கள் - 2 எழுதியுள்ளார். இந் நூல் இவரது 9ஆவது நூலாகும்.

பணி நிறைவுக்குப்பின் : கோயம்புத்தூர் உலகப் பொதுமறை திருக்குறள் சேவை மையத்தின் நிறுவனர், தலைவராக இருந்து தமிழ்ப்பணியாற்றி வருபவர். இலங்கையில் 2011 ஆம் ஆண்டு சனவரி திங்களில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் 6 நாட்கள் நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் கருத்தரங்க ஆய்வு மதிப்பீட்டாளராக கலந்துகொண்டவர். அமெரிக்காவில் இருந்தபோதும் அங்குள்ள தமிழ்ப் பள்ளியில் திருக்குறள் கற்பித்து, கவியரங்குகளில் பங்கேற்று, தமிழை மூச்சாகக் கொண்டு செயலாற்றிய செம்மல். அன்னாரின் '**மூவர் பாடிய தேவாரமும் பலன்தரும் முக்கிய பதிகங்களும்**' எனும் இந் நூலை வெளியிடுவதில் மணிமேகலைப் பிரசுரத்தார் மகிழ்வும் பெருமையும் அடைகின்றோம்.

- பதிப்பகத்தார்

ISBN : 978-93-6854-907-9